# இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

## பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் - ஊரகம் அமலாக்கம் மீதான செயலாக்க தணிக்கை

लोकहितार्थ सत्यनिष्ठा

**Dedicated to Truth in Public Interest**

**தமிழ்நாடு அரசு**

**அறிக்கை எண் 6 - 2022**

# இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

## பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் - ஊரகம் அமலாக்கம் மீதான செயலாக்க தணிக்கை

**தமிழ்நாடு அரசு**

**அறிக்கை எண் 6 - 2022**

# பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | vii |
| தணிக்கை குறிப்புகளின் சுருக்கம் | | ix |
| அத்தியாயம் I - முன்னுரை | | |
| திட்டம் பற்றிய விவரம் | 1.1 | 1 |
| தமிழ்நாட்டில் PMAY-G செயல்படுத்துதல் | 1.2 | 2 |
| தணிக்கை நோக்கம் | 1.3 | 2 |
| தணிக்கை அளவுகோல்கள் | 1.4 | 3 |
| தணிக்கையின் பரப்பு, முறைமை மற்றும் மாதிரிக்கான செயல்முறை | 1.5 | 3 |
| முந்தைய தணிக்கைகள் | 1.6 | 4 |
| ஏற்பு | 1.7 | 5 |
| தணிக்கை கண்டுபிடிப்புகள் | 1.8 | 5 |
| அத்தியாயம் II - நிதி மேலாண்மை | | |
| PMAY-Gன் கீழ் வழங்கப்படும் உதவிகள் | 2.1 | 7 |
| இந்திய அரசிடமிருந்து தகுதியான மானியம் பெற இயலாமை | 2.2 | 8 |
| மாநில மூலக் கணக்கைப் பராமரிப்பதில் உள்ள குறைபாடுகள் | 2.3 | 9 |
| நிர்வாக நிதியின் முறையற்ற பயன்பாடு | 2.4 | 10 |
| RCC கூரை செலவு நிதி செலவு செய்யப்படாமை | 2.5 | 12 |
| கூடுதல் கூரை மானியத்தின் அதிகப்படியான வெளியீடு மற்றும் தவறான வகைப்பாடு | 2.6 | 13 |
| திட்ட நிதியை கிராம ஊராட்சி கணக்குகளுக்கு மாற்றுதல் | 2.7 | 14 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| பயனாளிகளுக்குத் தவணைகளை வழங்குதல் | 2.8 | 14 |
| கவனத்திற்குரிய பிற குறிப்புகள் | 2.9 | 15 |
| முடிவுரை | 2.10 | 17 |
| பரிந்துரைகள் | 2.11 | 17 |
| அத்தியாயம் III - திட்டமிடல் | | |
| வருடாந்திர செயல் திட்டம் (Annual Action Plan – AAP) | 3.1 | 19 |
| பயனாளிகளை அடையாளம் காண திட்டமிடல் | 3.2 | 21 |
| கிராம சபைகள் மூலம் சரிபார்ப்பதில் குறைபாடுகள் | 3.3 | 24 |
| PWLல் உள்ள பிழைகள் | 3.4 | 25 |
| தகுதியான பயனாளிகளைச் சேர்க்காதது | 3.5 | 27 |
| PWL தயாரிப்பதில் மாவட்டங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு | 3.6 | 28 |
| முடிவுரை | 3.7 | 30 |
| பரிந்துரைகள் | 3.8 | 30 |
| அத்தியாயம் IV - திட்ட அமலாக்கம் | | |
| வீடுகளுக்கான ஒப்பளிப்பு அளித்தல் | 4.1 | 31 |
| வீடுகள் கட்டுதல் | 4.2 | 40 |
| முடிவுரை | 4.3 | 45 |
| பரிந்துரைகள் | 4.4 | 46 |
| அத்தியாயம் V - கண்காணிப்பு, உள் கட்டுப்பாடு மற்றும் குறைகள் நிவர்த்தி செய்தல் | | |
| திட்ட மேலாண்மை அலகு செயல்பாட்டில் உள்ள குறைபாடுகள் | 5.1 | 47 |
| குழுக்கள் அமைக்கப்படாமை | 5.2 | 48 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| கண்காணிப்பில் பெரும் முறைகேடுகள் | 5.3 | 49 |
| உள் கட்டுப்பாடுகளின் போதுமான அளவு | 5.4 | 56 |
| குறை/புகார் நிவர்த்தி | 5.5 | 57 |
| பணியாளர் பற்றாக்குறை | 5.6 | 59 |
| முடிவுரை | 5.7 | 60 |
| பரிந்துரைகள் | 5.8 | 60 |

# இணைப்புகள்



| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1.1 | PMAY-G அமலாக்கத்திற்கான நிறுவன விளக்கப்படம் | 63 |
| 1.2 | மாதிரி செயல்முறை | 65 |
| | மாதிரித் ஊராட்சி ஒன்றியங்களின் விவரங்களைக் காட்டும் அறிக்கை | 66 |
| 2.1 | DRDAகளில் ஒப்பந்த மீரல்கள் | 67 |
| 2.2 | ஒப்பந்த வழிமுறையைத் தவிர்க்க கொள்முதலைப் பிரித்தல் | 68 |
| 2.3 | RCC கூரை விலை - கணக்கில் சராசரி இருப்பு | 70 |
| 3.1 | தானியங்கு சேர்க்கைக்கான (Automatic Inclusion) அளவுகோல்கள் | 71 |
| 3.2 | (அ) SECCலிருந்து குடும்பங்களை நிராகரித்தல்<br>(ஆ) SECCலிருந்து குடும்பங்களை நிராகரித்தல் - சரியான காரணங்கள் இல்லாமல் /வெற்றிடங்கள் | 72 |
| 3.3 | SECC தரவுகளுக்கு எதிரான மாவட்ட வாரியான PWLஇன் பகுப்பாய்வு | 73 |
| 4.1 | உண்மைப் பயனாளியை தகுதியற்ற நபர் கொண்டு மாற்றுதல் - எடுத்துக்காட்டு நேர்வு | 74 |
| 4.2 | தகுதியற்ற குடும்பங்களுக்கு PMAY-G வீடுகளை அனுமதிப்பதால் ஏற்படும் இழப்பு | 75 |
| 4.3 | "தெரியாத" என்ற பெயர் உள்ளீடு கொண்ட நபருக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, தகுதியற்ற நபருக்கு தொகை செலுத்தப்பட்டது- எடுத்துக்காட்டு நேர்வு | 76 |
| 4.4 | "தெரியாத" என்ற பெயர் உள்ளீடு கொண்ட நபருக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, தகுதியற்ற நபருக்கு தொகை செலுத்தப்பட்டது | 77 |
| 4.5 | தகுதியற்ற நபருக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு தொகை செலுத்தியமை | 78 |
| 4.6 | SECC தரவுகளில் வேண்டாத (junk)மதிப்புகள் | 79 |
| 4.7 | மாவட்டம் வாரியான கட்டுமானம் முடிவுபெற்ற மற்றும் முடிவு பெறாத வீடுகள் | 81 |

| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 4.8 | முதல்/இரண்டாம் தவணை பெற்ற பிறகும் தொடங்கப்படாத வீடுகளின் விவரங்களின் அறிக்கை | 82 |
| 5.1 | புகைப்படங்களை தவறாக சித்தரித்தல் | 83 |
| 5.2 | PMAY-G வீட்டின் புவிசார் குறிப்பிடப்பட்ட இருப்பிட வரைபடத்தில் வண்ணக் குறியீடு | 88 |
| 5.3 | பல வீட்டுப் புகைப்படங்கள் ஒரே இடத்தில் புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளன | 89 |
| 5.4 | எடுத்துக்காட்டு நேர்வு: ஒரே இடத்தில் பல வீடுகளின் புவிசார் குறியீடு | 90 |
| 5.5 | மாநிலத்திற்கு வெளியே தொலைதூர இடங்களில் புவிசார் குறியீடு | 95 |
| 5.6 | மாநிலத்திற்குள் - வீட்டின் இருப்பிடத்துடன் தொடர்பில்லாத தொலைதூர இடங்களில் புவிசார் குறியீடு | 96 |
| 5.7 | மாநிலத்தின் வெளியே - வீட்டின் இருப்பிடத்துடன் தொடர்பில்லாத தொலைதூர இடங்களில் புவிசார் குறியீடு | 97 |
| 5.8 | தணிக்கை செய்யப்பட்ட மாதிரி நிறுவனத்தில் பெறப்பட்ட புகாரின் விவரங்கள் | 98 |
| | சுருக்க சொற்றொடர்களின் திரட்டு | 99 |

# முகவுரை

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் மார்ச் **2021** உடன் முடிவடைந்த ஆண்டிற்க்கான இந்த அறிக்கை, இந்திய அரசியல் அமைப்பு சட்டப் பிரிவுக் கூறு **151(2)**ன் படி, மாநில சட்டமன்றத்திற்கு முன் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் இந்த அறிக்கையானது ஏப்ரல் **2016** முதல் மார்ச் **2021** வரையிலான காலப்பகுதியில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் - ஊரகம் அமலாக்கம் மீதான செயலாக்க தணிக்கையின் குறிப்புகளை உள்ளடக்கியது.

டிசம்பர் **2020** மற்றும் அக்டோபர் **2021** இடைப்பட்ட காலத்தில் தணிக்கை செய்த போது அறியப்பட்ட நேர்வுகள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதிக்கு பிற்பட்ட காலத்தில் அறியப்பட்ட குறிப்புகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கை நெறிமுறைகளை சார்ந்தே தணிக்கை மேற்கொள்ளப்பட்டது

அரசு, ஊரக வளர்ச்சி இயக்குநர், மாவட்ட ஆட்சியர்கள், **DRDA** திட்ட இயக்குநர்கள் மற்றும் வட்ட அளவிலான அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து பெற்ற ஒத்துழைப்பை தணிக்கை அங்கீகரிக்க விரும்புகிறது.

மொழி மாற்றம் செய்யப்பட்ட இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரபூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

# தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்

# தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்

## நோக்கம்

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) (Prime Minister Awaas Yojna - Gramin) (PMAY-G), 01 ஏப்ரல் 2016 முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. PMAY-G செயல்பாட்டின் மீதான செயலாக்கத் தணிக்கை ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2021 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியது. பயனாளிகளை அடையாளம் காண வெளிப்படையான நடைமுறைகளைப் பின்பற்றுதல், உரிய நேரத்தில் நிதி விடுவிப்பை உறுதிசெய்தல், திட்டத்தின் திறமையான மற்றும் சிக்கனமான செயலாக்கத்தை உறுதிசெய்தல் மற்றும் உள்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை தகுந்த அளவுகளில் அமைத்தல் ஆகியவற்றை துறை பின்பற்றுகின்றதா என்பதை உறுதிசெய்வதே தணிக்கையின் குறிக்கோள் ஆகும். செயலாக்க தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

## தணிக்கை கண்டுபிடிப்புகளின் சுருக்கம்

2016-21ல், 5.09 இலட்சம் வீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன; இதில், 2.80 இலட்சம் வீடுகள் மட்டுமே நிறைவுபெற்றுள்ளன. GoI மானியம் பெறாதது, நிர்வாக நிதியின் கீழ் ஏற்றுக்கொள்ள முடியாத செலவுகள் உள்ளமை, தகுதியற்ற பயனாளிகளை தவறாக சேர்த்தல், தகுதியுடைய பயனாளிகளை சேர்க்காமை, ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (SC/ST) பயனாளிகளின் சேர்த்தலில் பற்றாக்குறை, வீடுகளின் ஒப்பளிப்பில் முறைகேடுகள் மற்றும் கண்காணிப்பில் பற்றாக்குறை ஆகியவை தணிக்கையின் போது கண்டறியப்பட்ட முக்கிய குறைபாடுகள் ஆகும்.

- நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாததால் இந்திய அரசின் ₹ 1,515.60 கோடி உதவியை உரிய நேரத்தில் தமிழக அரசால் பெற முடியவில்லை.

  *(பத்தி 2.2)*

- ஊரக வளர்ச்சி இயக்குநர், ஒதுக்கப்பட்ட நிர்வாக நிதியிலிருந்து விளம்பரங்கள் மற்றும் திட்டத்துடன் தொடர்பில்லாத பிற செயல்பாடுகளுக்கு ₹ 2.18 கோடி ஏற்றுக்கொள்ள முடியாத செலவினம் செய்துள்ளார்.

  *(பத்தி 2.4)*

- திட்டமிடலில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் கவனக் குறைவினால், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (SC/ST) குடும்பங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட 60 விழுக்காடு வீடுகள் என்ற இலக்கை அடைய முடியவில்லை. திட்டமிடலில் குறைபாடுகள் விளைவாக இறுதி நிரந்தர காத்திருப்புப் பட்டியலில் (Permanent Wait List - PWL) போதுமான ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (SC/ST) குடும்பங்கள் சேர்க்கப்படாமல் போனது. மேலும், கணிசமான

எண்ணிக்கையிலான SC/ST குடும்பங்கள் சரியான காரணமின்றி, சமூகப் பொருளாதார மற்றும் சாதிக் கணக்கெடுப்பு (Socio Economic and Caste Census - SECC) தரவுகளிலிருந்து அகற்றப்பட்டன.

*(பத்தி 3.2.1)*

- SECC தரவுகளிலிருந்து PWL தயாரிப்பதற்கான செயல்முறையில் குறைபாடுகள் இருந்தன. சரிபார்ப்பின் போது, SECC தரவுடன் ஏதேனும் தனிப்பட்ட அடையாளங்காட்டியை (Unique identifier) இணைக்காதது மற்றும் SECC தரவை முழுமையாக கிராம சபைகள் சரிபார்க்கத் தவறியது போன்ற காரணங்களால் PWLக்கு தவறான தகவல்களை பதிவேற்றம் செய்ய வழிவகுத்தது. இது பயனாளிகளை அடையாளம் காணும் செயல்முறையை பாதிக்கிறது.

*(பத்தி 3.3)*

பயனாளியை அடையாளம் காண்பதற்கு அடிப்படையான SECC தரவில், “தெரியாது” என்று உள்ளீடு கொண்ட, பெயர் தரப்படாத, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட கணிசமான எண்ணிக்கையிலான குடும்பங்கள் உள்ளன. SECC தரவின் இந்தக் குறைபாட்டை தவறாகப் பயன்படுத்தி கணிசமான எண்ணிக்கையிலான வீடுகள் முறைகேடாக அனுமதிக்கப்பட்டன. மாதிரித் தொகுதிகளில், SECC தரவுகளின் பெயர் புலத்தில் “தெரியாது” என்ற உள்ளீட்டை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம், தகுதியற்ற பயனாளிகளுக்கு மொத்தம் 3,354 வீடுகள் முறைகேடாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டன. இதில் ₹ 50.28 கோடி முறைகேடான செலவு ஏற்பட்டது. மாநில அளவில் ஆய்வு மேற்கொண்டால், முறைகேடாக அனுமதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்.

- வீடுகளுக்கான ஒப்பளிப்பு ஆணை வழங்கும் நேரத்தில், PWLல் உள்ள ‘தெரியாது’ என்று பெயர் உள்ளீடு கொண்ட பயனாளிகளுக்குப் பதிலாக வேறு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.
- ‘தெரியாது’ என்று உள்ளீடு கொண்ட, பெயர் தரப்படாத பயனாளிகள் பெயரில் ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டு, உதவித் தொகை வழங்குவதற்காக வேறு குடும்பங்களைச் சேர்ந்த நபர்களின் வங்கிக் கணக்குகள் இணைக்கப்பட்டிருந்தன.
- தகுதியான பயனாளிகள் பெயரில் ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டன; ஆனால் உதவித் தொகை, தகுதியற்ற நபர்களின் வங்கிக் கணக்குகளுடன் மோசடியாக இணைக்கப்பட்டு செலுத்தப்பட்டது.

*(பத்தி 4.1)*

- 31 மார்ச் 2021 நிலவரப்படி, ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட 5.09 இலட்சம் வீடுகளில், 2.80 இலட்சம் வீடுகள் (55 விழுக்காடு) மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 0.89 இலட்சம் பயனாளிகளுக்கு முதல் தவணை வழங்கப்படவில்லை.

*(பத்தி 4.2.1 மற்றும் 4.2.2)*

♦ பெருமளவிலான கள ஆய்வுப் பதிவுகள் நேர்மையற்ற முறையில் கையாளப்பட்டன. தணிக்கையில் புவிசார் குறியீடு முறையில் மற்றும் வீட்டின் புகைப்படங்களின் நேர முத்திரையில் (Time Stamping) பல முரண்பாடுகள் காணப்பட்டன. பல வீடுகளின் இருப்பிடம் ஊராட்சி ஒன்றியம் வளர்ச்சி அலுவலகங்களிலேயே (Block Development Office- BDO) புவிசார் குறியீடு (Geotagging) செய்யப்பட்டுள்ளன.

*(பத்தி 5.3)*

# அத்தியாயம் I

## முன்னுரை

பிரதம மந்திரி
குடியிருப்பு திட்டம்
(ஊரகம்)

# அத்தியாயம் I

# முன்னுரை

## 1.1 திட்டம் பற்றிய விவரம்

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் - ஊரகம் (PMAY-G), அனைத்து வீடற்ற குடும்பங்களுக்கும், குடிசை வீடுகள் மற்றும் தளர்வுற்ற வீடுகளில் வசிக்கும் கிராமப்புற குடும்பங்களுக்கும், 2022ஆம் ஆண்டிற்குள் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர வீடுகள் (PUCCA House) வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. PMAY-G திட்டம் 01/04/2016 முதல் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. அருகாமையான இடங்களில் உள்ள பொருட்கள், வடிவமைப்புகள் மற்றும் பயிற்சி பெற்ற கொத்தனார்களைப் பயன்படுத்தி, பயனாளிகள் தாங்களாகவே தரமான வீடுகளைக் கட்டுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்திய அரசு (GoI) மற்றும் தமிழக அரசு (GoTN) இணைந்து முறையே 60:40 என்ற விகிதத்தில் திட்டத்திற்கு நிதியளிக்கிறது. GoTN, அதன் 40 விழுக்காடு பங்கிற்கு கூடுதலாக, RCC மேற்கூரை கட்டுவதற்காக வீட்டிற்கு தலா ₹ 50,000 வழங்குகிறது.

PMAY-Gன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- சமூகப் பொருளாதாரம் மற்றும் சாதிக் கணக்கெடுப்பு (SECC), 2011 (Socio Economic and Caste Census) தரவில் அளிக்கப்பட்டுள்ள வீட்டுவசதி அற்றோர் பற்றாக்குறை அளவுருக்களின்[1] (depriviation parameters) அடிப்படையில் பயனாளிகள் அடையாளம் கண்டு தெரிந்தெடுக்கப்பட்டு கிராம சபைகளால் சரிபார்க்கப்பட்டிருத்தல்.
- பயனாளிகளுக்கான அனைத்து நிதி உதவிகளும் நேரடி மானிய பரிமாற்றம் (Direct Benefit Transfer - DBT) முறையில் செய்யப்படுதல்.

---

இந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட சுருக்கங்கள் பக்கம் 99ல் உள்ள சுருக்க சொற்றொடரின் திரட்டில் பட்டியலிடப்பட்டுள்ளன.

[1] பற்றாக்குறை அளவுருக்கள் என்பது, இரண்டு அல்லது அதற்கும் குறைவான அறைகள் உடைய வீடுகள் கொண்ட, குடிசை மண் சுவர்கள் மற்றும் கூரை கொண்ட குடும்பங்கள், 16 முதல் 59 வயதுக்குட்பட்ட உறுப்பினர் இல்லாத குடும்பங்கள், 16 முதல் 59 வயதுக்குட்பட்ட ஆண் உறுப்பினர் இல்லாத பெண் தலைமைக் குடும்பம், மாற்றுத்திறனாளி உறுப்பினர் மட்டுமே கொண்ட குடும்பங்கள், SC/ST குடும்பங்கள், 25 வயதுக்கு மேற்பட்ட கல்வியறிவு இல்லாத உறுப்பினர் கொண்ட குடும்பங்கள் மற்றும் தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை உடலுழைப்பிலிருந்து பெறுகின்ற நிலமற்ற குடும்பங்கள், ஆகிய குடும்பங்களை உள்ளடக்கியது.

- *ஆவாஸ்சாஃப்ட்*[2] மற்றும் *ஆவாஸ்ஏப்*[3] (AwaasSoft and AwaasApp)ஐ பயன்படுத்தி முழுமையான மின்-ஆளுமை மாதிரியின் மூலம் பணிப்பாய்வு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு.
- அடிப்படை வசதிகளான கழிப்பறை, குடிநீர், மின்சாரம் போன்றவற்றை வழங்குவதற்காக பிற அரசுத் திட்டங்களுடன் ஒன்றிணைத்தல்.
- மாநில/மாவட்ட/ஊராட்சி ஒன்றிய/கிராம ஊராட்சி (Village Panchayat-VP) அளவில் குறைகள்/புகார்களை நிவர்த்தி செய்வதற்கான முறைமை.

## 1.2 தமிழ்நாட்டில் PMAY-G செயல்படுத்துதல்

SECC 2011ன் படி, தமிழ்நாட்டின் கிராமப்புற குடும்பங்களின் எண்ணிக்கை 1.01 கோடி; அதில் 47.05 இலட்சம் குடும்பங்கள் (47 விழுக்காடு) வீட்டுவசதி அற்றோர் அளவுருக்குள் இருந்தன. PMAY-Gன் கீழ், 2022ஆம் ஆண்டிற்குள் இரண்டு கட்டங்களாக 5.28 இலட்சம் நிரந்தர வீடுகளை தமிழகத்திற்கு கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. முதலாம் கட்டதின் கீழ், 2016-17 முதல் 2018-19 வரையிலான மூன்று ஆண்டுகளில் 3.28 இலட்சம் வீடுகளும், இரண்டாம் கட்டத்தின் கீழ், 2019-20 முதல் 2021-22 வரையிலான மூன்று ஆண்டுகளில் இரண்டு இலட்சம் வீடுகளும் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

GoTN, ஒவ்வொரு ஆண்டும் வருடாந்திர செயல் திட்டங்களை (Annual Action Plans - AAP) தயாரிக்கிறது. ஒப்பளிக்கப்பட்ட AAPன் படி, மாவட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் (Rural Development and Panchayat Raj Institutions - RD&PRI) அமலாக்கப்படுகிறது. ஊரக வளர்ச்சி இயக்குநர் (Director of Rural Development - DRD), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் (District Rural Development Agencies - DRDA) திட்ட இயக்குநர்கள் (Project Directors-PD) மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் வளர்ச்சி அலுவலர் (Block Development Officer -BDO) ஆகியோர் முறையே மாநிலம், மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றனர். PMAY-Gஐ செயல்படுத்துவதற்கான அமைப்பு விளக்கப்படம், **இணைப்பு 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 1.3 தணிக்கை நோக்கம்

ஊரக வளர்ச்சி அமைச்சகம் (Ministry of Rural Development - MoRD) வகுத்துள்ள வழிகாட்டுநெறிமுறைகளின்படி இந்தத் திட்டத்தின் அமலாக்கத்தை மதிப்பிடுவதற்காக இந்த செயலாக்க தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. செயலாக்க தணிக்கைக்கான நோக்கங்கள்:

- திட்ட வழிகாட்டுநெறிமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற நிதி விதிகளின்படி, நேரடி மானிய பரிமாற்றம் (Direct Benefit Transfer - DBT) மற்றும் மின்னணு தீர்வு அமைப்பின் (Electronic Clearance

[2] PMAY-G திட்டத்திற்கான இணைய அடிப்படையிலான, இடைநிலை, மின்னணு சேவை விநியோக தளம்.

[3] வீடுகளின் கட்டுமானத்தின் போது புவிசார் குறிப்பு மற்றும் நேரமுத்திரையிடப்பட்ட புகைப்படங்களைப் பிடிக்கும் மொபைல் செயலி.

System -ECS) மூலம் தகுதியான பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் நிதி வழங்கப்பட்டதா?;

- திட்டத்தின் கீழ் பயனாளிகளை அடையாளம் கண்டு தேர்வு செய்வதற்கு வெளிப்படையான மற்றும் போதுமான நடைமுறை பின்பற்றப்பட்டதா?;
- மற்ற திட்டங்களுடன் ஒன்றிணைத்தல், பயனாளிகள் ஆதரவு சேவைகள் உட்பட இத்திட்டத்தின் அமலாக்கம் திறம்படவும், பயனுள்ளதாகவும் இருந்ததா? மற்றும்
- உள் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு திறம்பட மேற்கொள்ளப்பட்டதா?.

ஆகியவற்றை உறுதி செய்வதற்காகும்.

## 1.4 தணிக்கை அளவுகோல்கள்

செயலாக்க தணிக்கைக்கான அளவுகோல்களின் முக்கிய ஆதாரங்கள்:

- PMAY-G செயல்படுத்துவதற்கான கட்டமைப்பு (PMAY-G வழிகாட்டு நெறிமுறைகள்);
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme MGNREGS) மற்றும் தூய்மை பாரத இயக்கம்- ஊரகம் (SBM-G) ஒருங்கிணைப்புக்கான வழிகாட்டு நெறிமுறைகள்;
- DBT செலுத்துதலுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் இந்திய அரசு (GoI) வழங்கிய DBT பற்றிய கையேடு;
- ஒப்பந்தச் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000 மற்றும் இந்திய அரசாலும் (GoI) தமிழக அரசாலும் (GoTN) அவ்வப்போது வெளியிடப்படுகின்ற அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் அறிவிப்புகளின் வெளிப்படைத்தன்மை.

## 1.5 தணிக்கையின் பரப்பு, முறைமை மற்றும் மாதிரிக்கான செயல்முறை

- இந்த செயலாக்க தணிக்கை, தமிழ்நாட்டில் ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2021 வரையிலான காலகட்டத்தில் PMAY-Gயின் செயல்பாட்டினை உள்ளடக்கியது.
- RD&PRI துறையின் கூடுதல் தலைமைச் செயலாளருடன் 14 டிசம்பர் 2020 அன்று நுழைவு கூட்டம் நடைபெற்றது. இதில் தணிக்கை நோக்கங்கள், பரப்பு மற்றும் முறைமை பற்றி விவரிக்கப்பட்டது. RD&PRI துறை செயலகம், ஊரக வளர்ச்சி இயக்ககம், எட்டு DRDAக்கள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பதிவுகளின் ஆய்வின் மூலம் டிசம்பர் 2020 முதல் அக்டோபர் 2021 வரை தணிக்கை நடத்தப்பட்டது.
- தணிக்கை, தமிழக அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்திடம் (MoRD) இருந்து *ஆவாஸ்சாஃப்ட்* தரவைப் பெற்று, PMAY-G

வழிகாட்டுநெறிமுறைகளுடன் இணங்குகிறதா என்று கண்டறிய தரவுகளை பகுப்பாய்வு செய்தது. மேலும், தணிக்கைக் குழு 1,121 பயனாளிகளின் வீடுகளின் கூட்டு நேரடி சரிபார்ப்பை (Joint Physical Verification -JPV) ஊராட்சி ஒன்றிய அளவிலான அதிகாரிகளுடன் இணைந்து நடத்தியது. கட்டமைக்கப்பட்ட கருத்தாய்வுக் கேள்விகள் பயன்படுத்தி 917 பயனாளிகளிடம் கருத்தாய்வு நடத்தப்பட்டது.

- தணிக்கை கண்டுபிடிப்புகள் குறித்து விவாதிக்க 9 பிப்ரவரி 2022 அன்று RD&PRI துறையின் முதன்மைச் செயலாளருடன் நிறைவுக் கூட்டம் நடைபெற்றது. நிறைவுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் 21 மார்ச் 2022 அன்று அரசு வழங்கிய பதில் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த அறிக்கை உருவாக்கப்பட்டது.

தணிக்கை, எட்டு மாவட்டங்கள், 18 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 91 கிராம ஊராட்சிகள் (VP) ஆகியவற்றை மாதிரிகளாகத் தேர்ந்தெடுத்து பதிவுகளின் விரிவான ஆய்வு, கூட்டு நேரடி சரிபார்ப்பு (JPV) மற்றும் பயனாளிகள் கருத்தாய்வு ஆகியவற்றை நடத்துகிறது. பிராந்திய வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை **அட்டவணை 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது, மேலும் மாதிரி செயல்முறை **இணைப்பு 1.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.1: கள ஆய்விற்க்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள்**

| வ. எண் | பிராந்தியம் (மாவட்டங்களின் எண்ணிக்கை) | ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (மொத்த ஒப்பளிப்புகளின் விழுக்காடு) | தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு (8) | 1,56,043 (39 விழுக்காடு) | 3 | நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருவாரூர் |
| 2 | வடக்கு (7) | 1,64,886 (41 விழுக்காடு) | 3 | தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் |
| 3 | தெற்கு (8) | 41,943 (10 விழுக்காடு) | 1 | ராமநாதபுரம் |
| 4 | மேற்கு (8) | 38,325 (10 விழுக்காடு) | 1 | ஈரோடு |
| | **மொத்தம் (31)** | **4,01,197 (100 விழுக்காடு)** | **8** | |

## 1.6 முந்தைய தணிக்கைகள்

1996-2016ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட முந்தைய இந்திரா குடியிருப்பு திட்டம் (Indira Awas Yojand -IAY) கிராமப்புற வீட்டு வசதித் திட்டதின் அமலாக்கம் குறித்த செயலாக்க தணிக்கையை 2014ஆம் ஆண்டில், இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர் (C&AG) மேற்கொண்டார். C&AGயின் தணிக்கை அறிக்கை, வீட்டுப் பற்றாக்குறையை மதிப்பிடாதது, பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் வெளிப்படைத் தன்மை இல்லாமை,

ஒருங்கிணைப்பின்மை, கண்காணிப்புக்கான வழிமுறைகளில் குறைபாடுகள் போன்ற சிக்கல்களை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய அரசு, PMAY-Gக்கான கட்டமைப்பை வடிவமைக்கும் போது, IAYஐ செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை கருத்தில் கொண்டது. ஆயினும், IAYன் செயல்திறனைப் பாதித்த சில சிக்கல்கள் PMAY-Gயையும் தொடர்ந்து பாதிக்கின்றன என்பதை தற்போதைய தணிக்கை வெளிப்படுத்தியது.

## 1.7 ஏற்பு

இந்த செயலாக்க தணிக்கையை மேற்கொள்வதில் துறை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட அலுவலகங்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் உதவியை தணிக்கை அங்கீகரிக்கிறது.

## 1.8 தணிக்கை கண்டுபிடிப்புகள்

தணிக்கை முடிவுகள் பின்வரும் அத்தியாயங்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.

- அத்தியாயம் II : நிதி மேலாண்மை
- அத்தியாயம் III : திட்டமிடல்
- அத்தியாயம் IV : திட்ட அமலாக்கம்
- அத்தியாயம் V : கண்காணிப்பு, உள் கட்டுப்பாடு மற்றும் குறைகள் நிவர்த்தி செய்தல்

# அத்தியாயம் II

# நிதி மேலாண்மை

# அத்தியாயம் II

# நிதி மேலாண்மை

## 2.1 PMAY-Gன் கீழ் வழங்கப்படும் உதவிகள்

PMAY-G பயனாளிகள் குறைந்தபட்சம் 269 சதுர அடி பரப்பளவில் ஒரு நிரந்தர[1] (pucca) வீட்டைக் கட்டுவதற்கு சமவெளிப் பகுதிகளில் உள்ள வீட்டுக்கு ₹ 1.20 இலட்சமும், மலைப்பாங்கான மற்றும் கடினமான பகுதிகளில்[2] ₹ 1.30 இலட்சமும் மானியமாகப் பெறத் தகுதியுடையவர்கள். இந்திய அரசு (GoI) மற்றும் தமிழக அரசு (GoTN) முறையே 60:40 என்ற விகிதத்தில் பயனாளிக்கு வழங்க வேண்டிய மானியத்தை பகிர்ந்து கொள்கின்றன. ஒவ்வொரு ஆண்டும், ஒப்பளிக்கப்பட்ட வருடாந்திர செயல்திட்டத்தின் (Annual Action Plan - AAP) அடிப்படையில், GoI தனது பங்கை GoTNக்கு இரண்டு தவணைகளில் வழங்குகிறது. மேலும் GoTN, இந்திய அரசின் (GoI) பங்கையும் அதன் சொந்த பங்கையும் பட்ஜெட் மூலம் இரண்டு தவணைகளில், DRDயினால் பராமரிக்கப்படும் சேமிப்பு வங்கிக் கணக்கில் வழங்குகிறது. இது மாநில மூலக் கணக்கு (State Nodal Account - SNA) என குறிப்பிடப்படும். SNA, ஆவாஸ்சாஃப்ட் மற்றும் பொது நிதி மேலாண்மை அமைப்புடன் (Public Finance Management System - PFMS) பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் நிதி பரிமாற்ற ஆணை (Fund Transfer Order - FTO) மூலம் மின்னணு முறையில் இயக்கப்படுகிறது.

பயனாளிகளுக்கு உரிய உதவித்தொகை நேரடியாக BDOக்களால் SNAவிலிருந்து FTOக்களாக நான்கு தவணைகளில் முறையே, ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் முதல் தவணையும், பீடம் நிலை (plinth level) வரை கட்டுமானம் முடிந்தவுடன் இரண்டாவது தவணையும், கூரை வார்ப்பு நிலை வரை முடிந்தவுடன் மூன்றாவது தவணையும் மற்றும் வீடு கட்டி முடித்தவுடன் இறுதி தவணையும் வழங்கப்படுகிறது.

திட்டத்தின் கீழ் சமவெளிப் பகுதிகளில் வீடு ஒன்றுக்கு வழங்கப்படும் ₹ 1.20 இலட்சமும், மலைப்பாங்கான பகுதிகளில் வழங்கப்படும் ₹ 1.30 இலட்சமும், வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் (Reinforced Cement Concrete - RCC) கூரையை உள்ளடக்கியதாக இல்லை. எனவே, RCC கூரையை வழங்கும் நோக்கில், 2016-17ஆம் ஆண்டிலிருந்து அனைத்து PMAY-G பயனாளிகளுக்கும் ₹ 50,000 கூடுதல் மானியமாக தனது நிதியிலிருந்து வழங்குகிறது. மேலும், 2020 டிசம்பரில், 2,57,925 முழுமையடையாத வீடுகளுக்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ₹ 70,000 விகிதம் ஒருமுறை கூடுதல் மானியத்தை GoTN அனுமதித்தது. இரண்டு நிதிகளும் SNAக்கு வெளியே RCC கூரை செலவுக் கணக்கில் வைக்கப்பட்டு, DRDAகள் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த உதவிகள் BDOக்களால் மின்னணு

---

1 தட்பவெப்ப நிலைகள் உள்ளிட்ட இயற்கையின் தாக்கத்தால் ஏற்படும் இயல்பான தேய்மானம் போன்றவற்றை நியாயமான பராமரிப்புடன் குறைந்தபட்சம் 30 ஆண்டுகளுக்காவது தாங்கும்திறன் கொண்ட வீடு.

2 கடினமான பகுதிகள்: பொருட்கள் குறைவாக கிடைப்பது, மோசமான சாலை இணைப்பு போன்ற காரணங்களால், கட்டுமானச் செலவு அதிகமாக இருக்கும் பகுதிகள் மற்றும் மாநில அரசுகளால் வகைப்படுத்தப்பட்ட பகுதிகள்.

அனுமதி அமைப்பு (Electronic Clearance System - ECS) மூலம் சம்பந்தப்பட்ட பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிதி பரிமாற்றம் செய்யப்படுகிறது.

திட்ட நிதியில், நான்கு விழுக்காடு வரை திட்டத்தை நிர்வகிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்; இதில் 0.5 விழுக்காட்டினை மாநில அளவில் தக்க வைத்துக் கொள்ளலாம் மற்றும் 3.5 விழுக்காடு மாவட்டங்களுக்கு, அவற்றின் இலக்குகளின் விகிதத்தில் விநியோகிக்கப்படுகிறது. மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் (VPகள் உட்பட) நிலைகளுக்கு முறையே 2 விழுக்காடு மற்றும் 1.5 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்ட வழிகாட்டுதல்களின்படி, இந்த நிதியானது, பணியாளர்களை பணியமர்த்துவதற்கான செலவுகள், பயனாளிகளுக்கான வாழ்விடம் மற்றும் வீடு குறித்தான விழிப்புணர்வு அறிவுறுத்தும் நடவடிக்கைகள், முன்மாதிரி வீடுகளின் கட்டுமானம், சமூக தணிக்கை, பணியாளர் பயிற்சி, கொத்தனார் பயிற்சி உள்ளிட்ட திட்ட செலவினங்களுடன் சேர்த்து மாநிலம், மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் திட்ட மேலாண்மை அலகு (Programme Management Unit - PMU) அமைப்பதற்கும் பயன்படுத்தப்படலாம். வழங்கப்பட்ட நிர்வாக நிதியும், திட்டநிதியும் தனித்தனியாகக் கணக்கிடப்பட வேண்டும். செப்டம்பர் 2019 முதல் திட்ட நிதியுடன் நிர்வாக நிதியும் SNAல் பராமரிக்கப்படுகிறது. வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட தலைப்புகளுக்குள் மட்டுமே இது பயன்படுத்தப்பட வேண்டும்.

## 2.2 இந்திய அரசிடமிருந்து தகுதியான மானியம் பெற இயலாமை

திட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் GoIன் பொது நிதி விதிகளின்படி, ஒப்புதல் அளிக்கப்பட்ட AAP, பயன்பாட்டுச் சான்றிதழ், தணிக்கைச் சான்றிதழ் மற்றும் திட்ட முன்னேற்ற நிலை ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலத்திற்கு மத்திய மத்திய அரசின் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**அட்டவணை 2.1**ல் விவரித்துள்ளபடி தமிழக அரசு (GoTN), மத்திய அரசிடமிருந்து (GoI) உரிய மானியங்களை முழுமையாகப் பெறவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது.

அட்டவணை 2.1 : மத்திய அரசு (GoI) மற்றும் தமிழக அரசு (GoTN) வழங்கும் மானியங்கள் பற்றிய விவரங்கள்

(₹கோடியில்)

| ஆண்டு | இலக்கு (வீடுகளின் எண்ணிக்கை) | ஒப்புதல் அளிக்கப்பட்ட மானியத்தின் பங்கு | | | உண்மையில் பெறப்பட்ட நிதி | | | குறைவாக பெறப்பட்ட இந்திய அரசின் பங்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | இந்திய அரசு (60 விழுக்காடு) | தமிழக அரசு (40 விழுக்காடு) | மொத்தம் | இந்திய அரசு | தமிழக அரசு | மொத்தம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9)=(3)-(6) |
| 2016-17 | 1,76,338 | 1,269.63 | 846.42 | 2,116.05 | 1,269.63 | 846.42 | 2,116.05 | 0 |
| 2017-18 | 1,30,214 | 937.54 | 625.03 | 1,562.57 | 937.54 | 625.03 | 1,562.57 | 0 |
| 2018-19 | 21,000 | 151.20 | 100.80 | 252.00 | 75.60 | 50.40 | 126.00 | 75.60 |
| 2019-20 | 2,00,000 | 1,440.00 | 960.00 | 2,400.00 | 0 | 0 | 0 | 1,440.00 |
| 2020-21 | இல்லை | | | | | | | |
| மொத்தம் | 5,27,552 | 3,798.37 | 2,532.25 | 6, 330.62 | 2,282.77 | 1,521.85 | 3,804.62 | 1,515.60 |

(ஆதாரம்: RD மற்றும் PRI துறையின் இயக்ககத்தின் தரவு)

பெறப்பட வேண்டிய தொகையான ₹ 3,798.37 கோடியில், அக்டோபர் 2021 நிலவரப்படி, ₹ 2,282.77 கோடி (60 விழுக்காடு) மட்டுமே மாநிலத்திற்குக் கிடைத்தது. இதைப்போன்று, தமிழக அரசின் (GoTN) முன்மொழிவானது பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் இல்லாததால், 2018-19ஆம் ஆண்டிற்கான இரண்டாவது தவணை மற்றும் 2019-20க்கான தவணைகளை மத்திய அரசு (GoI) வழங்கவில்லை என்று தணிக்கை கண்டறிந்துள்ளது. பின்வரும் காரணங்களுக்காக மீண்டும் முன்மொழிவு நிராகரிக்கப்பட்டது:

- வழங்கப்பட்ட நிதியில் 75 விழுக்காடு கட்டாயமாகப் பயன்படுத்தப்பட வேண்டியதற்கு எதிராக, ஜூலை 2021ல் தமிழக அரசு (GoTN) 70.89 விழுக்காட்டை மட்டுமே செலவிட்டது.
- 2018-19ஆம் ஆண்டில், முதல் தவணைக்கான FTOகள் உருவாக்குதலில் இலக்கிடப்பட்ட 100 விழுக்காட்டிற்கு எதிராக 94 விழுக்காடு மட்டுமே முடிக்கப்பட்டது. முந்தைய ஆண்டில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வீடுகளில், நிர்ணயிக்கப்பட்ட 80 விழுக்காட்டிற்கு எதிராக 73 விழுக்காடு மட்டுமே முடிக்கப்பட்டன.
- வீட்டுவசதி மற்றும் நிர்வாக நிதிக்கான தனி ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கையை தமிழக அரசு (GoTN) வழங்கவில்லை.
- வழிகாட்டுதல்களின்படி, SC/STக்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 60 விழுக்காட்டை விட, அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கும் அதன் நிறைவேறுதலும் குறைவாக இருந்தன.

இந்த நிதி நெருக்கடியின் விளைவாக, பயனாளிகளுக்கு பணம் செலுத்துவதற்கான FTOகளை துறையால் சரியான நேரத்தில் உருவாக்க முடியவில்லை, மேலும் RCC கூரை செலவுக் கணக்கிலிருந்து ₹ 45 கோடி தற்காலிகமாக (மார்ச் 2021) வேறு செலவினங்களுக்கு மடை மாற்றம் (diversion) செய்யப்பட்டது.

இவ்வாறு, இலக்குகளை அடைவதில் தாமதம், தணிக்கை அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் SC/ST பிரிவினருக்கான 60 விழுக்காடு இலக்கிற்காக திட்டமிடுதலில் உள்ள குறைபாடுகள் ஆகியவற்றால் ₹ 1,515.60 கோடி GoI உதவித்தொகை கிடைக்காமல் போனது.

மத்திய அரசின் (GoI) பங்கைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக GoTN பதிலளித்தது (மார்ச் 2022). GoTN FTOக்களை வழங்குவதற்கான நிதியை கூரை செலவு நிதியிலிருந்து எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தது. இதன் காரணமாக ஏற்கனவே திட்டத்தின் செயல்பாடு வெகுவாக பாதிக்கப்பட்டிருந்ததை தணிக்கை கண்டறிந்தது.

## 2.3 மாநில மூலக் கணக்கைப் பராமரிப்பதில் உள்ள குறைபாடுகள்

பயனாளிகளுக்கு அலகு செலவு உதவிக்காக மத்திய அரசு (GoI) மற்றும் தமிழக அரசிடமிருந்து (GoTN) பெறப்பட்ட அனைத்து மானியங்களும், திட்டத்தின் கீழ் அனைத்து கொடுப்பனவுகளும் SNA மூலமே செலுத்தப்படுகின்றன. பண ஏடு மற்றும் SNA தொடர்பான பிற பதிவுகளின் மதிப்பாய்வில், தணிக்கை பின்வரும் குறைபாடுகளைக் கண்டறிந்தது:

(i) மார்ச் 2019 வரையிலான காலப்பகுதிக்கான பண ஏடு (Cash Book) தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. பண ஏட்டின் நகலை மட்டுமே துறையானது தணிக்கைக்கு வழங்கியது. அதில், அனுமதிக்கப்படாத சமீபத்திய உள்ளீடுகள் கண்டறியப்பட்டன.

(ii) மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்குவதற்காக SNA பராமரிக்கப்படுகிறது. மூல வங்கியிலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து பரிவர்த்தனைகளையும் கணக்கு வைக்கும் இந்த முக்கிய செயல்பாடானது போதுமான பணியாளர்கள் இல்லாமல் மேற்கொள்ளப்படுகிறது. ஆவாஸ்சாஃப்ட்/PFMSல் உள்ள அனைத்துப் பரிவர்த்தனைகளையும் தனித்தனியாகப் பதிவு செய்வதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாதமும், வங்கி அறிக்கையிலிருந்து (Bank Statement) ஒவ்வொரு பண வரவு மற்றும் கொடுப்பனவுகளுக்கான தலா ஒரு ஒருங்கிணைந்த மொத்த பதிவு மட்டுமே பண ஏட்டில் செய்யப்பட்டது.

(iii) வங்கி அறிக்கையே பண ஏட்டில் பதிவு செய்யப்பட்டதால், ஒவ்வொரு மாதமும் வங்கி சமரசம் (Bank Reconciliation) 'இல்லை' என்று அளிக்கப்பட்டது.

(iv) SNA வங்கி அறிக்கையின் (Bank statement) தணிக்கை ஆய்வின்படி, வங்கி அறிக்கைகளில் தோன்றும் அடையாளம் காணப்படாத வரவுகள் மற்றும் பற்றுகள் DRDயால் சமரசம் செய்யப்பட்டு பதிவேற்றப்படவில்லை.

பண ஏட்டை முறையற்ற முறையில் பராமரித்தல் மற்றும் வங்கிக் கணக்கை சமரசம் செய்யாமை ஆகியவை கடுமையான குறைபாடுகளாகும், இது நிதியைத் தவறாகப் பயன்படுத்துதல் உட்பட பலதரப்பட்ட ஆபத்தான காரியங்களுக்கு நிதி நிர்வாகத்தை தடம் மாறச்செய்யும்.

அடுத்த நிதியாண்டு முதல் PMAY-Gக்காக தனி கணக்குப் பிரிவு உருவாக்கப்படும் என்று அரசு (GoTN) பதிலளித்தது (மார்ச் 2022). போதுமான தகவல் தொழில்நுட்ப (IT) காப்புப் பிரதியுடன் கூடிய கணக்குப் பிரிவை நிறுவுவதற்கு நிர்வாக நிதி பயன்படுத்தப்பட்டிருந்தால், நேர்மையான நிதி நிர்வாகத்திற்கு அது அதிக உத்திரவாதமளிக்கும் என்று தணிக்கை கருதுகிறது.

## 2.4 நிர்வாக நிதியின் முறையற்ற பயன்பாடு

2016-21 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தை நிர்வகிப்பதற்குப் பயன்படுத்த உரிய நிதி உதவியான ₹ 253.22 கோடிக்கு எதிராக, மத்திய அரசு (GoI) மற்றும் தமிழக அரசு (GoTN) ஆகியவை DRDஆல் பராமரிக்கப்படும் நிர்வாக நிதிக்காக ₹ 152.18 கோடி (60 விழுக்காடு) மட்டுமே அளித்தது. இதில், ₹ 101.41 கோடியை DRD மாவட்டங்களுக்கு அளித்தது. இருப்பினும், மாவட்டங்கள், செலவழிக்கப்படாத ₹ 61.64 கோடியை திருப்பி அளித்தன.

நிர்வாக நிதியின் பயன்பாடு பற்றிய ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- ஒப்பந்த ஊழியர்களை பணி அமர்த்துதல், விளம்பரம், கூட்டங்கள், பயிற்சிகள் போன்ற 13 அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளுக்கு நிர்வாகநிதி பயன்படுத்தப்பட வேண்டும். அக்டோபர் 2021 வரை, நிர்வாக நிதியில் 40 விழுக்காடு பெறப்படவில்லை மற்றும் பெறப்பட்ட பணமும் கூட முழுமையாக பயன்படுத்தப்படவில்லை. இதனால்,

அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளை திட்டமிட்ட முறையில் மேற்கொள்ள இயலவில்லை.

- DRD நிர்வாகச் செலவுகளின் கீழ் ₹ 3.95 கோடி செலவழித்துள்ளது. இதில், ₹ 2.18 கோடி (55 விழுக்காடு) மதிப்பிலான செலவு ஏற்றுக்கொள்ள முடியாதது என தணிக்கை கண்டறிந்தது. ஏனெனில், அவை பின்வரும் PMAY-G திட்ட தொடர்பு அல்லாத செயல்பாடுகளுக்கு செலுத்தப்பட்டது.
- திட்ட அமலாக்கத்தின் இறுதிக்கட்டத்தில் விளம்பரத்திற்காக ₹ 1.95 கோடி 2021ல் செலவிடப்பட்டது. மேற்கூறிய விளம்பரமானது, திட்டத்தின் தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் (Information, Education and Communication - IEC) நடவடிக்கையாக தகுதி பெறவில்லை என்று தணிக்கைப் பகுப்பாய்வில் கண்டறியப்பட்டது. ஏனெனில், இதில் PMAY-G பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.
- சென்னையில் சுற்றுலா மற்றும் தொழில்துறை கண்காட்சியில் விற்பனையகங்களுக்கான செலவுகள் (₹ 12.98 இலட்சம்), துறையின் குடிமக்கள் சாசனம் தயாரித்தலுக்கான செலவுகள் (₹ 5.46 இலட்சம்) போன்ற PMAY-G உடன் எந்த தொடர்பும் இல்லாத செலவினங்கள் PMAY-G நிர்வாக நிதியின் கீழ் பதிவு செய்யப்பட்டன.
- தொடர்பற்ற தலைப்புகளில் விருது விநியோகங்களை விளம்பரப்படுத்துவதற்காக (12 நாளிதழ்களில்) விளம்பரக் கட்டணமாக, PMAY-G நிர்வாக நிதிக் கணக்கிலிருந்து "எக்சலென்ட் 2 பப்ளிசிட்டிகள், சென்னை" க்கு ₹ 0.52 கோடி அளிக்கப்பட்டது.
- DRDAக்கள் செலவிட்ட ₹ 0.39 கோடியில் மற்ற திட்டங்களுக்கான செலவுகள் (₹ 0.31கோடி) மற்றும் அதன் தொடர்புடைய விளம்பர செலவுகள் (₹ 0.04 கோடி) ஆகியவை அடங்கும்.

மேலும், நான்கு மாதிரி மாவட்டங்களில்[3] ஒவ்வொன்றும் ₹ 10 இலட்சத்துக்கு மேலாக மொத்தம் ₹ 4.43 கோடிக்கு, தமிழ்நாடு ஒப்பந்தங்களில் வெளிப்படைத்தன்மை விதிகள், 2000-க்கு புறம்பாக 11 கொள்முதல்கள் செய்யப்பட்டன. இவற்றின் விவரங்கள் **இணைப்பு 2.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது. இதைப்போன்று, **இணைப்பு 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒன்பது நேர்வுகளில், திறந்த ஒப்பந்த செயல்முறையைத் (open tender) தவிர்க்க, ஒப்பந்தத்தில கோரப்படும் அளவினைப் பிரித்து, மொத்தம் ₹ 1.98 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

நிர்வாக நிதியைப் பயன்படுத்துவதற்கு மாவட்ட நிர்வாகத்திற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும், சரியான நடவடிக்கை எடுக்க விரிவான விசாரணையைத் தொடங்க உள்ளதாகவும் GoTN பதிலளித்தது (மார்ச் 2022). சம்மந்தபடாத விளம்பரங்களை வெளியிடுவதற்காகத் தவறாகப் பயன்படுத்திய நிதியைக் குறித்து பதிலில் குறிப்பிடப்படவில்லை.

[3] தர்மபுரி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் திருவாரூர்.

## 2.5 RCC கூரை செலவு நிதி செலவு செய்யப்படாமை

2016-18 ஆம் ஆண்டுகளுக்கான RCC கூரை விலையை பயனாளிகளுக்கு வழங்குவதற்காக, மாவட்டங்கள் மூலம் ஊராட்சி ஒன்றியங்களில் 3.06 இலட்சம் பயனாளிகளுக்கு ₹ 1,532 கோடியை DRD வழங்கியது. 2018-20ஆம் ஆண்டில் மத்திய அரசின் (GoI) மானியம் கிடைக்காத காரணத்தால், அந்த ஆண்டுகளுக்கான ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பயனாளிகளுக்கான RCC கூரைச் செலவை தமிழக அரசு (GoTN) வழங்கவில்லை. RCC கூரை செலவு உதவியானது SNA/DBTஉடன் ஒருங்கிணைக்கப்படாமல் ECS முறையில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

கூரை செலவுக்கான தமிழக அரசு மானியத்தின் வரவு மற்றும் பயன்பாடு பற்றிய ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- 2018-21ல் 18 மாதிரி ஊராட்சி ஒன்றியங்கள் வைப்பில் இருந்த வருடாந்திர சராசரி இறுதி நிலுவைகள் ₹ 17.40 கோடியாக (**இணைப்பு 2.3**) இருந்தது. இது ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு சராசரியாக ₹ 0.97 கோடியாகும். மேற்கூறிய கணக்கீட்டின் அடிப்படையில், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் வைத்திருக்கும் வருடாந்திர சராசரி இருப்பு தொகை ₹ 376.36 கோடியாக (388 x ₹ 0.97 கோடி) இருக்கும் என்று தணிக்கை மதிப்பிட்டுள்ளது. SNA போன்று, RCC கணக்கிற்கு DBTயை செயல்படுத்தியிருந்தால், இந்த நிதியை துறையால் சிறப்பாக நிர்வகிக்க இயன்றிருக்கலாம்.
- தமிழக அரசின் (GoTN) தற்போதைய உத்தரவுகளின்படி, நான்காவது தவணையுடன் பயனாளிகளுக்கு ₹ 50,000 கூரை விலை உதவி வழங்கப்பட வேண்டும். **அட்டவணை 2.2**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, மாதிரித் ஊராட்சி ஒன்றியங்கள் 18ல், 23,815 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருந்தாலும், வழங்கப்பட்ட பொருளின் விலையை குறைத்த பின் உள்ள RCC கூரையின் மீதத் தொகை, 18,892 பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை**.**

**அட்டவணை 2.2: RCC கூரை செலவு நிலுவையை செலுத்தாத விவரங்கள்**

| மாவட்டம் | மாதிரி ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | RCC கூரை செலவு மீதம் செலுத்தப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | RCC கூரை செலவு மீதம் செலுத்த வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | 2 | 3,336 | 772 | 2,564 |
| ஈரோடு | 2 | 1,100 | 1,100 | 0 |
| நாகப்பட்டினம் | 3 | 4,942 | 345 | 4,597 |
| ராமநாதபுரம் | 2 | 2,076 | 60 | 2,016 |
| திருச்சிராப்பள்ளி | 2 | 1,805 | 1,345 | 460 |
| திருவண்ணாமலை | 2 | 2,190 | 1,005 | 1,185 |
| திருவாரூர் | 2 | 3,125 | 46 | 3,079 |
| விழுப்புரம் | 3 | 5,241 | 250 | 4,991 |
| மொத்தம் | **18** | **23,815** | **4,923** | **18,892** |

(ஆதாரம்: மாதிரி ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்டங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவு)

சிமெண்ட், எஃகு போன்றவற்றை வழங்கியதற்காக பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையை சரிசெய்வதில் (Reconciliation) தாமதம் ஏற்பட்டதால், ஊராட்சி ஒன்றிய அளவிலான அலுவலர்கள், பயனாளிகளுக்கு உரிய உதவியை வழங்கவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் பணம் கிடைப்பதை உறுதி செய்ய, இது போன்ற இன்னல்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுவதாக GoTN பதிலளித்தது (மார்ச் 2022) **பத்தி 4.2.2ல்** சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, கூரை அமைப்பதின் செலவை உரிய நேரத்தில் வழங்காதது வீடுகளை கட்டுவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணிகளில் ஒன்று என்று தணிக்கை கண்டறிந்தது.

## 2.6 கூடுதல் கூரை மானியத்தின் அதிகப்படியான வெளியீடு மற்றும் தவறான வகைப்பாடு

2020 டிசம்பரில், பல்வேறு கட்டங்களில் வீடுகள் கட்டுமானம் முழுமையடையாமல் இருந்த 2,57,925 பயனாளிகளுக்கு கூடுதல் கூரை மானியமாக ₹ 1,805.48 கோடியை தமிழக அரசு (GoTN) அனுமதித்தது. ஒரு பயனாளிக்கான மானியம் கட்டுமானத்தின் நிலையைப் பொறுத்தது, வீட்டிற்கு ₹ 70,000 வரை வழங்கப்படக்கூடும்.

கட்டுமானத்தின் நிலையைப் பொறுத்து, கூடுதலான மானியத் தகுதி, வீட்டிற்கு ₹ 10,000 முதல் ₹ 70,000 வரை இருந்தபோதும், அனைத்து முழுமையற்ற வீடுகளுக்கும் ₹ 70,000 (GoTN) அனுமதியளித்தது கண்டறியப்பட்டது. இது **அட்டவணை 2.3**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி ₹ 294.46 கோடி கூடுதலாக அளிக்க வழிவகுத்தது.

**அட்டவணை2.3: அதிகப்படியான நிதிஅனுமதியின் விவரம்**

| கட்டுமானத்தின் நிலை | முழுமையடையாத வீடுகளின் எண்ணிக்கை | GO படி வீட்டிற்கு ₹ 70,000 வீதம் வழங்கப்பட்ட தொகை | ஜனவரி8, 2021 தேதியிட்டDRD செயல்முறை | | |
|---|---|---|---|---|---|
| | | | உரிய கூடுதல் உதவி (₹) | கட்டுமானத்தின் நிலை அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய தொகை (₹ கோடியில்) | அதிகப்படியாக அரசு விடுவித்த தொகை (₹ கோடியில்) |
| அடித்தளமட்டத்தின் கீழே | 1,42,081 | 994.57 | 70,000 | 994.57 | 0 |
| அடித்தளநிலை | 63,741 | 446.19 | 55,000 | 350.58 | 95.61 |
| வாயில் விட்டம் (லின்டெல்) நிலை | 35,086 | 245.60 | 40,000 | 140.34 | 105.26 |
| கூரை வார்ப்பு நிலை | 17,017 | 119.12 | 15,000 | 25.53 | 93.59 |
| மொத்தம் | **2,57,925** | **1,805.48** | | **1,511.02** | **294.46** |

(ஆதாரம்: DRD மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் PRI துறையின் தரவு)

அதிகப்படியாக விடுவிக்கப்பட்ட மானியமனது உடனடித் தேவையில்லாமல் அரசுக் கணக்கிற்கு வெளியே, வங்கிகளில் வைக்கப்பட்டிருப்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. வீட்டை முடிக்கப் போராடும் பயனாளிகளுக்கு உதவும் நோக்கில் கூடுதல் நிதி வழங்கப்பட்டதாக GoTN பதிலளித்து (மார்ச் 2022).

கூடுதல் நிதியை திட்ட உரிமைக்கு மேல் வழங்குவதின் GoTNன் கொள்கையை கேள்விக்குட்படுத்தாமல், உதவித் தொகை கணக்கீடு உண்மையான தேவையின் அடிப்படையில் இல்லை என்பதை தணிக்கை வலியுறுத்துகிறது.

மேலும், GoTNலிருந்து பெறப்பட்ட ₹ 1,805.48 கோடியில், ₹ 649.56 கோடி RCC கூரைச் செலவு என தவறாக வகைப்படுத்தப்பட்டு, மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது.

RCC கூரை மானியத்திற்கென ஒரு தனிப்பட்ட கணக்குத் தலைப்பு ஒதுக்கப்பட்டு, தனிப்பட்ட SNAவும் பராமரிக்கப்பட நிதித் துறையிடம் கோரப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). முறையான நிதி நிர்வாகத்திற்கு ஒரு பயனுள்ள கணக்கியல் அமைப்பு அவசியம் என்று தணிக்கை கருதுகிறது.

## 2.7 திட்ட நிதியை கிராம ஊராட்சி கணக்குகளுக்கு மாற்றுதல்

வானூர் ஊராட்சி ஒன்றியத்தில், BDOவின் கோரிக்கையின் அடிப்படையில் (பிப்ரவரி 2018 முதல் அக்டோபர் 2020 வரை), சம்பந்தப்பட்ட வங்கிகள், 477 பயனாளிகளின் முதல் தவணையாக ₹ 1.24 கோடியை ஊராட்சி ஒன்றிய/VP திட்டக் கணக்குகளுக்கு மாற்றியது. பின்னர், மேற்பார்வையாளர்/ஊராட்சி செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பயனாளிகளுக்கு ஒவ்வொரு பயனாளியைப் பொறுத்து தவணைகள் வழங்கப்பட்டன.

225 பயனாளிகளுக்கு ₹ 58.57 இலட்சம் வழங்கப்பட்ட பிறகு, 252 பயனாளிகளுக்கு உரிய மீதத் தொகையான ₹ 64.95 இலட்சம் ஊராட்சி ஒன்றிய/VPகணக்குகளிலேயே வைக்கப்பட்டது (செப்டம்பர் 2021).

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளை மீற வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் BDOக்கு ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). திட்ட நிதியை ஊராட்சி கணக்கிற்கு மாற்றுவது, அனைத்து நிலைகளிலும், திட்ட செயல்படுத்துதலில் கண்காணிப்பு இல்லாமல் போகும் அபாயம் நிறைந்ததாக இருப்பதை தணிக்கை கண்டறிந்தது.

## 2.8 பயனாளிகளுக்குத் தவணைகளை வழங்குதல்

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, முதல் தவணையானது ஒப்புதல் அளிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும். இருப்பினும், முதல் தவணை வழங்கப்படவேண்டிய, 4,19,279 நபர்களில், 3,25,427 பேருக்கு முதல் தவணை தாமதமாக வழங்கப்பட்டது **(விளக்கப்படம் 2.1)**.

**விளக்கப்படம் 2.1: ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பயனாளிகளுக்கு I தவணை வழங்குதல்**




(ஆதாரம்: MoRD ஆல் வழங்கப்பட்ட ஆவாஸ்சாஃப்ட் தரவு)

89,362 பயனாளிகளுக்கு முதல் தவணைத் தொகையான ₹ 232.60 கோடி வழங்கப்படவில்லை. 2019-20ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வீடுகளில், 84,955 பேருக்கு உதவி தொகை வழங்கப்படாத நிலையில், 2016-17 முதல் 2018-19 ஆம் ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட 4,407 வீடுகளுக்கும் முதல் தவணை இதுவரை வழங்கப்படவில்லை. இது பயனாளிகளுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உரிய பலன்களை மறுப்பதாக உள்ளது.

GoI நிதியைப் பெற்ற பிறகு தவணைகள் வழங்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). **பத்தி 4.2.1**ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, சரியான நேரத்தில் தவணைகளை வழங்காதது, வீடுகளை முடிக்காமல் இருப்பதற்கு காரணமாக அமைந்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது**.**

## 2.9 கவனத்திற்குரிய பிற குறிப்புகள்

### 2.9.1 தொழிலாளர் நல நிதியை அங்கீகாரமில்லாமல் திரும்பப் பெறுதல்

செப்டம்பர் 2010ல் வெளியிடப்பட்ட GOன் படி, வீடுகள் கட்டும் பணியில் பயனாளிகளே ஈடுபட்டு வருவதால், IAY, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் பணித் திட்டங்களில் இருப்பது போல், தொழிலாளர் நல நிதி (LWF), கட்டிட உரிமக் கட்டணம் போன்றவற்றை ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் பயனாளிகளிடமிருந்து பிடித்தம் செய்தல்கூடாது. PMAY-Gன் கீழ் பயனாளிகளுக்கு செலுத்தப்படும் கட்டணத்திலிருந்து LWF-ஐ பிடித்தம் செய்வது வழிகாட்டுநெறிமுறைகளில் (Guidelines) குறிப்பிடப்படவில்லை. மேலும், DRD/DRDAக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

இருப்பினும், 18 மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் நான்கில், PMAY-G திட்டத்தின் 1,925 பயனாளிகளிடமிருந்து ₹ 1700/- வீதம் ₹ 32.73 இலட்சம் LWF-க்காகப் பிடித்தம் செய்யப்பட்டது. இது ஒவ்வொரு பயனாளிக்கும்

கொடுக்கப்பட்ட மொத்தத் தொகையின் ஒரு விழுக்காடு ஆகும் (**அட்டவணை 2.4**).

**அட்டவணை 2.4:** பயனாளிகளின் **RCC** கூரை செலவு மானியத்திலிருந்து **LWF** பிடிப்பு விவரங்கள்

| ஊராட்சி ஒன்றியம் | பயனாளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளிடம் பிடிக்கப்பட்ட தொகை (₹) | LW வாரியத்திற்கு அனுப்பப்பட்ட தொகை (₹) |
|---|---|---|---|
| பவானி | 612 | 10,40,400 | 3,14,500 |
| ஹரூர் | 639 | 10,86,300 | 10,86,300 |
| காரிமங்கலம் | 233 | 3,96,100 | 0 |
| மொடக்குறிச்சி | 441 | 7,49,700 | 7,49,700 |
| மொத்தம் | **1,925** | **32,72,500** | **21,50,500** |

(ஆதாரம்: மாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்படட தரவு)

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் தாங்களாகவே வீடுகள் கட்ட வேண்டும் என்பதால், பயனாளிகளுக்குச் செலுத்தப்படும் தொகையில் இருந்து LWF கழிப்பது அனுமதிக்கப்படவில்லை மற்றும் அரசாங்கத்தின் எந்த உத்தரவுகளாலும் இச்செயல் ஆதரிக்கப்படவும் இல்லை.

பிடித்தம் செய்யப்பட்ட தொகையை பயனாளிகளுக்குத் திருப்பித் தருமாறு BDOகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

### 2.9.2 பயனாளியின் வங்கிக் கணக்குகளில் உதவித் தொகையை நேரடியாக வழங்குகையில் வங்கிகளுக்கு விடுக்கப்படும் அனுமதிக்கப்படாத கோரிக்கைகள்

மாதிரி ஊராட்சி ஒன்றியங்கள் 18ல், 11 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 2,350 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வழங்கப்பட்ட முதலாவது தவணையை தற்காலிகமாக நிறுத்துமாறு ஊராட்சி ஒன்றிய அலுவலர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் பணத்தை விடுவிக்க கோரிக்கைகள் வழங்கிய பிறகே பயனாளிகள் தங்கள் பணத்தை எடுக்க அனுமதிக்கப்பட்டனர். விவரங்கள் **அட்டவணை 2.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5 :** தவணை செலுத்துவதை நிறுத்துமாறு வங்கிகளுக்கு **BDO**கள் விடுத்த கோரிக்கைகளின் விவரங்கள்

| தவணை | பயனாளிகள் பணம் எடுப்பதை நிறுத்தும் கோரிக்கைகள் | பயனாளிகளுக்கு பண விடுவிப்பு கோரிக்கை | அதிகபட்ச நாட்கள் | குறைந்தபட்ச நாட்கள் |
|---|---|---|---|---|
| I | 2,350 | 201 | 1,400 | 4 |
| II முதல் IVவரை | 499 | 14 | 119 | 23 |

(ஆதாரம்: மாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெறப்பட்ட தரவு)

பயனாளிகள் தங்கள் கணக்கிலிருந்து பணம் எடுப்பதை நிறுத்தும் கோரிக்கைகளுக்கான காரணங்களும் அதைத்தொடர்ந்து அளிக்கப்படும் வழங்குதல் கோரிக்கைகளுக்கான காரணங்களும் பதிவு செய்யப்படவில்லை. இந்தக் தவணைகள் வழங்கலை நிறுத்துவதில் எந்த நியாயமும் இல்லை. ஏனெனில், மேற்பார்வையாளர்கள் வீட்டை ஆய்வு செய்யும் போதே, உரிமைகோரலின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்டது. பணம் செலுத்துவதை நிறுத்துவதற்கான அங்கீகரிக்கப்படாத கோரிக்கையைத் தவிர்க்க கடுமையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக GoTN பதிலளித்தது (மார்ச் 2022). இத்தகைய நடைமுறைகள், வெளிப்படைத்தன்மையை பாதிக்கும் என்று தணிக்கை கண்டறிந்தது, எனவே, சரிபார்க்கப்பட்ட பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் பணம் வழங்கப்படுவதை உறுதிசெய்ய, துறையின் உள் கட்டுப்பாட்டு வழிமுறைகளை வலுப்படுத்த வேண்டுவது அவசியமாக உள்ளது.

## 2.10 முடிவுரை

வீடுகள் கட்டி முடிக்கப்படுவதில் இலக்கினை அடைய தாமதம், SC/ST பயனாளிகளின் இலக்கை எட்டாதது மற்றும் பயனாளிகளுக்கு முதல் தவணையை கூட வழங்காதது போன்ற காரணங்களால், மார்ச் 2021 நிலவரப்படி, ₹ 1,515.60 கோடி மத்திய உதவி பெறப்படாமல் போனது. RCC கூரை செலவு உதவிக்கான நிதியை வழங்காதது மாதிரித் ஊராட்சி ஒன்றியங்களில் முடிக்கப்பட்ட 23,815 வீடுகளில் 18,892 பயனாளிகளிக்கு (79 விழுக்காடு) நிதிச் சுமையை ஏற்படுத்தியது. கூடுதல் செலவின உதவிக்காக ₹ 294.46 கோடியை கூடுதலாக வழங்குதல், கூரைக் கணக்கிலிருந்து ₹ 45 கோடியை மாற்றுதல், கணக்குகள் பராமரிப்பில் உள்ள குறைபாடுகள் மற்றும் நிர்வாக நிதியை தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவை நிதி நிர்வாகத்தை பாதித்த மற்ற சிக்கல்களாகும். திட்ட நிர்வாகத்திற்கான பணியாளர்களை பெருக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டிய நிர்வாக நிதி, அதற்குப் பதிலாக தகுதியற்ற மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத செயல்களுக்குச் செலவிடப்பட்டது.

## 2.11 பரிந்துரைகள்

- ♦ மத்திய உதவியை உரிய நேரத்தில் வெளியிடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை GoTN கடைபிடிக்க வேண்டும்.
- ♦ நிர்வாக நிதியானது PMUக்கு கூடுதல் பணியாளர்களை பணியமர்த்துதல், பயிற்சி, திட்டத்தை மேம்படுத்துதற்கான செயல்களை அதிகரிப்பது போன்ற தகுதியான நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
- ♦ SNA பண ஏடு முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும். அனைத்து FTO உள்ளீடுகளும் தினசரி பதிவு செய்யப்பட வேண்டும். மற்றும் பணஏடு நிலுவைகள் வங்கி அறிக்கைகளுடன் அவ்வப்போது சரிசெய்யப்பட வேண்டும்.

# அத்தியாயம் III

# திட்டமிடல்

## அத்தியாயம் III

## திட்டமிடல்

### 3.1 வருடாந்திர செயல் திட்டம் (Annual Action Plan – AAP)

மாநிலத்திற்கான AAP ஆனது, முன்னுரிமை குடும்பங்களுக்கு வீடுகள் வழங்குவதை நிறைவேற்றிட, கையாளப்பட வேண்டிய உத்தியைக் கோடிட்டுக்காட்டும் மாவட்ட வாரியான திட்டங்களை உள்ளடக்கியது. இத்திட்டம், கொத்தனார் பயிற்சித்திட்டம், கட்டுமானப் பொருட்களுக்கான ஆதாரங்கள், பயனாளிகளுக்கான கடன் வழங்குதல், பலதரப்பட்ட வீட்டு வகைகளின் மேம்பாடு மற்றும் விநியோகத் திட்டம், பயனாளிகளுக்கு திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்/பயிற்சிகூடங்கள் (Work Shop) மற்றும் பிற திட்டங்களுடன் ஒன்றிணைதல் மூலம் பயனாளிகளுக்கு கிடைக்க கூடிய அனைத்து பலன்கள், ஆகியவற்றை உள்ளடக்கியது.

AAPல் உள்ள குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன:

#### 3.1.1 வங்கிக் கடன் இணைப்புக்கான இலக்குகளை நிர்ணயம் செய்யாதது

கூடுதல் நிதி உதவி தேவைப்படும் பயனாளிகளுக்கு மாறுபட்ட வட்டி விகிதத்தின் (differential rate of interest - DRI) கீழ் ₹ 70,000 வரை கடனைப் பெற வசதி செய்து தரவேண்டும் என்று திட்ட வழிகாட்டுதல்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும், AAPகள், வங்கிகள் மூலம் நிதி உதவியை வழங்குவதற்கான எந்த இலக்கையும் அல்லது செயல் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மாதிரி மாவட்டங்கள் எதிலும், பயனாளிகளுக்கு நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், கட்டுமானத்திற்கான கூடுதல் செலவுகளை நேர்கொள்ள கடன் வசதி வழங்கப்படவில்லை. தற்போதைய கட்டண அட்டவணையின்படியான கட்டுமானச் செலவு ₹ 3.00 இலட்சம். இது, GoI மற்றும் GoTN ஆகியவற்றால் வழங்கப்படும் மொத்த மானியங்களான ₹ 2.05 இலட்சத்தை விட அதிகமாக இருப்பதால், கூடுதல் நிதி உதவி இன்றியமையாதது என்று தணிக்கை கண்டறிந்தது.

இது தொடர்பாக, மதிப்பாய்வு செய்யப்பட்டு, பாதிக்கப்படக்கூடிய வகையைச் சேர்ந்த பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). நிதி பற்றாக்குறையை வீடுகள் கட்டி முடிக்கப்படாததற்கு பயனாளிகளால் அடிக்கடி கூறப்படும் காரணங்களில் ஒன்றாக குறிப்பிடுவதால், வீடுகளை விரைவாக முடிக்க வங்கிகள் மூலம் கடன்களை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

#### 3.1.2 கொத்தனார் பயிற்சித் திட்டத்தை நடத்தாமை

ஒவ்வொரு ஆண்டும், PMAY வழிகாட்டுநெறிமுறைகளின் கீழ், கொத்தனார்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான மாநில அளவிலான இலக்கை AAP நிர்ணயிக்கிறது. இருப்பினும், பயிற்சிக்காக கொத்தனார்களை சேர்த்தல், பயிற்சி வழங்குநர்களைக் கண்டறிதல் போன்றவற்றில் AAP எந்த இலக்கையும் நிர்ணயிக்கவில்லை.

இதன் விளைவாக, PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள் கொத்தனார் பயிற்சி திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய போதிலும், 2016-21ஆம் ஆண்டில், PMAY-Gன் இந்த கூறு மாநிலத்தில் செயல்படுத்தப்படவில்லை. இப்பயிற்சிக்கு 1.41 இலட்சம் பதிவு செய்துள்ள பயனாளிகள் உட்பட 2.89 இலட்சம் நபர்கள் இருந்தாலும், முறையற்ற திட்டமிடல் காரணமாக கொத்தனார் பயிற்சிக்கு DRD ஏற்பாடு செய்யவில்லை.

தேவைக்கேற்ப, அனைத்து மாவட்டங்களிலும் கொத்தனார் பயிற்சித் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று தமிழக அரசு (GoTN) பதிலளித்தது (மார்ச் 2022). முறையான பயிற்சியானது கட்டுமானப் பணியை விரைவுபடுத்துவதோடு, கட்டுமானப் பொருட்களை திறமையாகப் பயன்படுத்துவதையும் உறுதி செய்யும் என்று தணிக்கை கருதுகிறது.

### 3.1.3 மற்ற திட்டங்களுடன் ஒன்றிணைவதற்கான திட்டம் இல்லாமை

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS), ஸ்வட்ச் பாரத் மிஷன் (SBM), பிரதம மந்திரி உஜ்வால் யோஜனா (PMUY), தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம் (NRDWP) போன்றவற்றுடன் ஒன்றிணைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. AAP நிலையிலேயே திட்டமிடப்பட்டு இலக்குகளை நிர்ணயிக்க பிற திட்டங்களுடன் ஒன்றிணைவது அவசியமாக்குகிறது. இருப்பினும், AAP, MGNREGS தவிர, மற்ற திட்டங்களுடன் ஒன்றிணைவதற்கான எந்த இலக்கையும் கொண்டிருக்கவில்லை. **அட்டவணை 3.1**ல் கொடுக்கப்பட்டுள்ள படி, 18 மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், மூன்று திட்டங்களுக்கு மட்டுமே ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 3.1: மற்ற திட்டங்களுடன் ஒன்றிணைதல்

| வ. எண் | ஒருங்கிணைப்பு செயல்பாடு | தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படும் ஊராட்சி ஒன்றியங்கள் |
|---|---|---|
| 1 | பயனாளிகளுக்கு MGNREGS கீழ் 90 நாள் ஊதியம் | அனைத்து 18 ஊராட்சி ஒன்றியங்களில் |
| 2 | (SBM-G) அல்லது MGNREGS கீழ் கழிப்பறைகள் | அனைத்து 18 ஊராட்சி ஒன்றியங்களில் |
| 3 | PMUYஇன் கீழ் LPG இணைப்புகள் | அனைத்து 18 ஊராட்சி ஒன்றியங்களில் |
| 4 | NRDWP/ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் பாதுகாப்பான குடிநீருக்கான ஏற்பாடு | 6* |
| 5 | தீன்தயாள் உபாத்யாயா கிராம் ஜோதி யோஜனாவின் (DDUGJY) கீழ் மின் இணைப்பு | இல்லை |
| 6 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் அமைச்சகம் (MNRES)ஆல் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | இல்லை |
| 7 | பயனாளிகளின் நலனுக்கான நிறுமச் சமூக பொறுப்பு (CSR) முயற்சிகள்** | 2 |

* பகுதியாக மேற்கொள்ளப்பட்ட 6 ஊராட்சி ஒன்றியங்கள்

** 916 பயனாளிகளுக்கு NLC நிறுவனத்திடமிருந்து CSR நிதியாக ₹ 5,000

(ஆதாரம்: மாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவு)

**பத்தி 5.2ல்** விவரிக்கப்பட்டபடி, வழிகாட்டுநெறிமுறைகளில் குறிப்பிடப்பட்ட பயனுள்ள ஒருங்கிணைப்பு மாநிலத்தில் எட்டப்படவில்லை. திட்டமிடல் இல்லாமை மற்றும் அத்தகைய நடவடிக்கைகளை கண்காணிக்க மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை உருவாக்காதது, இதற்கு காரணம் என்பதை தணிக்கை கண்டறிந்தது.

அனைத்து முடிக்கப்பட்ட வீடுகளுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து BDOகளுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). மேலும், இது மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிக்கப்படுகிறது. இருப்பினும், இந்த செயல்முறை மேலிருந்து-கீழ் திட்டமிடல் மற்றும் இலக்கு கண்காணிப்பு மூலம் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.

## 3.2 பயனாளிகளை அடையாளம் காண திட்டமிடல்

PMAY-G செயல்படுத்தல் சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பு (SECC) தரவுகளின் அடிப்படையில் நிரந்தர காத்திருப்பு பட்டியல் (PWL) தயாரிப்பில் தொடங்குகிறது. மண் சுவர் மற்றும் கூரையுடன் கூடிய வீடுகளில் குடியிருப்போர், மற்றும் வீடு இல்லாதோர் என வகைப்படுத்தப்பட்ட அனைத்து குடும்பங்களையும் PWL உள்ளடக்கியது. பயனாளியை அடையாளம் காண்பதற்கான அளவுகோல்கள் **இணைப்பு 3.1ல்** விவரிக்கப்பட்டுள்ளன. PWL தயாரிப்பதற்கு பின்பற்றப்படும் செயல்முறை **விளக்கப்படம் 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.1: PWL தயாரிப்பதற்கான செயல்முறை**

| | |
|---|---|
| SECC தரவு | SECCன் படி (தமிழ்நாட்டில் 15.86 இலட்சம்) தகுதியான குடும்பங்களின் பட்டியல்கள் கிராம சபை மூலம் சரிபார்ப்பதற்காக VPகளுக்கு அனுப்பப்பட்டது |
| கிராம சபை மூலம் சரிபார்ப்பு | கிராம சபைகள் குடும்பங்களைச் சரிபார்த்து, 4.78 இலட்சம் குடும்பங்களைத் தகுதியற்றவை என்று நிராகரித்தது. |
| மாவட்ட அளவில் மேல்முறையீட்டு குழு | மாவட்ட அளவில் மூன்று பேர் கொண்ட மேல்முறையீட்டுக் குழு, கிராம சபைகள் தயாரித்த பட்டியல்களில் நீக்கம் மற்றும் தரவரிசைக்கு எதிரான புகார்களைத் தீர்த்தது. |
| PWL தயாரித்தல் | மேல்முறையீட்டுக் குழுவின் பரிசீலனைக்குப் பிறகு, ஒவ்வொரு VPக்கான பயனாளிகளின் PWLகள் தயாரிக்கப்பட்டு PMAY-G இணையதளத்தில் பதிவேற்றப்பட்டன. (11.08 இலட்சம்) |
| கிராம சபையால் PWL பற்றிய அவ்வப்போது ஆய்வு | நிரந்தர இடம்பெயர்வு, வாரிசு இல்லாத இறப்பு போன்ற காரணங்களால் PWL-ல் சேர்க்கப்பட்ட பின்னர் தகுதியற்றவர்களாக மாறிய பயனாளிகள், PWL காலமுறை மதிப்பாய்வு வழியாக கிராம சபையின் மூலம் விலக்கப்பட்டனர் (4.80 இலட்சம்) |
| இறுதி PWL தயாரித்தல் | இறுதி PWLல் 6.28 இலட்சம் குடும்பங்கள் இருந்தன. |

(ஆதாரம்: PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள் மற்றும் ஆவாஸ்சாஃப்ட் தரவு)

மாநிலத்திற்கு MoRD நிர்ணயித்த ஆண்டு இலக்குகள் மற்றும் GoTNஆல் நிர்ணயிக்கப்பட்ட மாவட்ட மற்றும் சமூக வகை வாரியான இலக்குகளின் அடிப்படையில், PMAY-Gன் கீழ் உள்ள வீடுகளின் எண்ணிக்கைக்கான கிராம அளவிலான இலக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சமூகப் பிரிவிற்கும் முன்னுரிமைப் பட்டியலின்படி PWLஇலிருந்து பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆண்டுத் தேர்வுப் பட்டியல் (Annual Select List-ASL) தயாரிக்கப்பட்டு அவர்களின் விவரங்கள் *ஆவாஸ்சாஃப்ட்டி*ல் பதிவு செய்யப்படுகின்றன. பதிவின் போது, MGNREGS வேலை அட்டை, ஸ்மார்ட்/குடும்ப அட்டை, ஆதார் அட்டை (ஒப்புதலுடன்) போன்ற உண்மை பதிவுகள், வங்கிக் கணக்கு விவரங்கள், நிலப் பதிவுகள் ஆகியவை சரிபார்க்கப்பட்டு *ஆவாஸ்சாஃப்ட்டி*ல் பதிவேற்றப்படுகின்றன.

### 3.2.1 SC/STக்கான இலக்குகளை நிர்ணயம் செய்யாமை

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, அனுமதிக்கப்பட்ட வீடுகளில் 60 விழுக்காடு இலக்கு SC/ST பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். PWLல் உள்ள அனைத்து SC/ST குடும்பங்களிற்கு இத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்பட்ட பின் PWLல் உள்ள அனைத்து SC/ST குடும்பங்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், தற்போது PWLல் SC/ST குடும்பங்கள் இல்லை என்றும் தலைமைச் செயலர் மட்டத்தில் சான்றிதழை அரசு சமர்ப்பிக்க வேண்டும். அதன்பிறகு, PWLல் SC/STக்கான இருப்பு இலக்கு மற்ற பிரிவினருக்கு ஒதுக்கப்படலாம்.

மார்ச் 2021 நிலவரப்படி, SC/ST பயனாளிகளுக்கு 3.05 இலட்சம் வீடுகள் (5.09 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளில் 60 விழுக்காடு) ஒதுக்கும் இலக்குக்கு எதிராக, 2.31 இலட்சம் மட்டுமே எட்ட முடிந்தது. 3.05 இலட்சம் SC/ST குடும்பங்களை உள்ளடக்கும் இலக்குக்கு எதிராக, PWL நிலையில் அடையாளம் காணப்பட்ட உண்மையான எண்ணிக்கை 2.62 இலட்சம் மட்டுமே என்று தணிக்கை கண்டறிந்தது. எனவே, இத்திட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய முடியவில்லை.

காரணங்களை ஆய்வு செய்ததில், தணிக்கை கண்டறிந்தது:

- **பத்தி 3.5ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, 'தானியங்கு சேர்க்கை' அளவுகோல்களின் கீழ் மொத்தம் 24,779 SC/ST பயனாளிகள் மற்றும் 1 முதல் 5 இடர்பாடு மதிப்பெண்கள் உள்ளவர்கள் சரியான காரணமின்றி நிராகரிக்கப்பட்டனர்.
- மொத்தம் 70,171 குடும்பங்கள் 'பரிந்துரைக்கப்பட்டவர் இல்லாமல் மரணம்' என்று காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டன. SECC பயனாளிகளின் தரவைச் சரிபார்த்ததில், இந்தக் குடும்பங்களில் 63,221 குடும்பங்களில் மனைவி அல்லது மகன்/மகள் இருவரும் இருப்பது கண்டறியப்பட்டது, அவர்களில் 24,935 பேர் SC/ST பயனாளிகள்.
- **பத்தி 4.1ல்** விவரிகப்பட்டுள்ளபடி தகுதியற்ற குடும்பங்களுக்கான அனுமதியின் பகுப்பாய்வில், 326 SC/ST பயனாளிகளின் வீடுகளுக்கான ஒப்பளிப்பு SC/ST அல்லாத குடும்பங்களுக்கு மாற்றப்பட்டு, பணம் செலுத்தப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது.

தகுதியான பல SC/ST குடும்பங்கள் வீட்டு மனைகள் கொண்டிருக்கவில்லை .இது, SC/ST குடும்பங்களைப் பொறுத்தமட்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய

இயலவில்லை என்று GoTN பதிலளித்தது. வருவாய்த் துறையுடன் போதுமான ஒருங்கிணைப்பு இல்லாததால் இலவச வீட்டு மனைகள் வழங்குவதில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாக தணிக்கை கண்டறிந்தது.

**பத்தி 3.2.2ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி நிலமற்ற பயனாளிகளுக்கு நிலம் வழங்குவதற்கான திட்டமிடல் பயனற்றது என்று பதில் உறுதிப்படுத்தியது.

### 3.2.2 நிலமற்ற பயனாளிகள் பற்றிய தரவுகளில் முரண்பாடுகள்

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, PWL இறுதி செய்யப்பட்டவுடன் நிலமற்ற பயனாளிகளுக்கு நிலம் வழங்குவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும். மாநிலங்கள் நிலமற்ற பயனாளிகளுக்கு நிலம் வழங்குவதை MoRD அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, PMAY-G வீடுகளுக்கு நிலமற்ற பயனாளிகளே மிகவும் தகுதியானவர்கள் என்ற திட்ட வழிகாட்டுதல்களை மீண்டும் வலியுறுத்தியது. **அட்டவணை 3.2ல்** விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு ஆதாரங்களில் இருந்து தமிழ்நாட்டில் நிலமற்ற குடும்பங்களின் விவரங்களை தணிக்கை தொகுத்தது. நிலம் வழங்கப்பட வேண்டிய பயனாளிகள் பற்றிய தெளிவான எண்ணிக்கை GoTNஇடம் இல்லை என்பது கண்டறியப்பட்டது.

**அட்டவணை 3.2: நிலமற்ற பயனாளிகளுக்கு நிலங்களை வழங்குதல் - இலக்குகள் மற்றும் சாதனைகள்**

| நிலமற்ற குடும்பங்களின் ஆதாரம் பற்றிய விவரங்கள் | **2016-17** முதல் இத்திட்டத்தை செயல்படுத்தும் போது இருந்த நிலமற்ற பயனாளிகளின் எண்ணிக்கை | நிலம் வழங்கப்பட்ட பயனாளிகள் (விழுக்காடு) |
|---|---|---|
| AAP 2018-19 | 77,485 | 10,328 (*13*) |
| AAP 2020-21 | 50,350 | 6,632 (*13*) |
| AAP 2021-22 | 50,350 | 7,049 (*14*) |
| 2021-22கான அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் கூட்டத்தின் விவர சுருக்கம் (பிப்ரவரி 2021) | 31,192 | 2,975 (*10*) |

(ஆதாரம்: வருடாந்திர செயல் திட்டம் 2018-19 முதல் 2021-22 வரை மற்றும் பிப்ரவரி 2021 ல் அதிகாரமளிக்கப்பட்ட குழு கூட்டத்தின் விவர சுருக்கம்)

பிப்ரவரி 2018ல், PWL கீழ் நிலமற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 77,485 எனக் கொடுக்கப்பட்டது மற்றும் அவர்களில் 13 விழுக்காட்டிற்கு வீடுகள் கட்டுவதற்கு நிலம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும், 2021-22 ஆம் ஆண்டிற்கான அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் விவர சுருக்கங்களில், மொத்த நிலமற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 31,192 எனக் காட்டப்பட்டுள்ளது. மேலும் அவர்களில் 10 விழுக்காட்டிற்கு நிலம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இலக்குகளை 46,293 (77,485 - 31,192) மற்றும் சாதனைகளை 7,353 (10,328 - 2,975) ஆக காரணங்கள் ஏதும் இன்றி குறைக்கப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. நிலமற்ற குடும்பங்கள் மற்றும் நிலம் வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையில் விவரிக்கப்படாத குறைப்பு, தரவினை நம்பகத்தன்மையற்றதாக ஆக்குகிறது.

நிலமற்ற குடும்பங்களுக்கு பட்டா வழங்க, மாவட்ட அளவிலான தரவு சேகரிக்கப்பட்டு, மாநில, மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் பணிக்குழு

அமைக்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). ஆயினும், PWLல் நிலமற்ற குடும்பங்கள் பற்றிய தரவுகளில் பரந்த மாறுபாட்டின் காரணங்களுக்கான விளக்கம் பதிலில் இல்லை.

## 3.3 கிராம சபைகள் மூலம் சரிபார்ப்பதில் குறைபாடுகள்

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, கிராம சபைகள் PWLல் சேர்ப்பதற்காக SECC தரவுகளில் உள்ள குடும்பங்களைச் சரிபார்க்கும். SECC தரவுகளில் உள்ள 15.86 இலட்சம் குடும்பங்களில், 2.03 இலட்சம் குடும்பங்களில் (13 விழுக்காடு) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் "தெரியாதவை" என்று பதிவாகின அல்லது காலியாக வைக்கப்பட்டுள்ளன என்பதை தணிக்கை கண்டறிந்தது. SECC குடும்பங்களின் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை கிராமசபைகள் சரிபார்க்கத் தவறியதால், 1.23 இலட்சம் குடும்பங்கள் பெயர் புலத்துடன் PWLக்கு மாற்றப்பட்டன. SECC தரவு, MGNREGS வேலை அட்டை எண், ஆதார் எண் அல்லது குடும்ப அட்டை/ஃஸ்மார்ட் கார்டு எண் போன்ற தனித்துவமான வெளிப்புற பயனாளிகள் அடையாளங்காட்டிகளுடன் இணைக்கப்படவில்லை என்பதை பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. SECC தரவுகளில் உள்ள ஒரே பயனாளி அடையாளங்காட்டி குடும்ப உறுப்பினர்களின் பெயர் மற்றும் வயது மட்டுமே ஆகும். கிராம சபைகள், சரிபார்ப்புச் செயல்பாட்டின் போது தனிப்பட்ட அடையாளங்காட்டிகள் எதையும் பதிவேற்றம் செய்யாததால் பயனாளிகளை அடையாளம் காணும் செயல்முறை மீறப்பட்டது. இது, **பத்திகள் 4.1.1, 4.1.2** மற்றும் **4.1.ல்** விரிவாக விவரிக்கப்பட்டுள்ளபடி, 14,636 நபர்களுக்கு (5.09 இலட்சம் வீடுகளின் மொத்த அனுமதியில் 2.88 விழுக்காடு) வீடுகளின் முறைகேடான ஒப்பளிப்பிற்கு வழிவகுத்தது.

PWL தயாரிக்கும் போது, ஊராட்சி அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால், சிறப்பு அலுவலர்கள் பதவியில் உள்ள ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் கிராமசபை கூட்டங்களை ஏற்பாடு செய்தனர். எனவே, பெயர் குறிப்பிடாமல் பயனாளிகளின் விவரங்களை தொகுத்தது, இந்தப் பொறுப்பில் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகளின் புறக்கணிப்பே காரணமாகும் என்று தணிக்கை கண்டறிந்தது.

SECC தரவுக்கு வெளிப்புற அடையாளங்காட்டியுடன் இணைப்பு இல்லை என்பதால் அதன் உண்மைத்தன்மையை சரிபார்ப்பது கடினம் என்று GoTN ஏற்றுக்கொண்டது (மார்ச் 2022). தணிக்கையின் பரிந்துரை செயல்படுத்தப்படும் என்றும் GoTN பதிலளித்தது. தகுதியற்ற பயனாளிகள், திட்டத்தின் பலனைப் பெறாமல் இருப்பதை உறுதிசெய்ய பொருத்தமான காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

### 3.3.1 SECC/PWL தரவுகளை விளம்பரப்படுத்தாமை

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறையை பரந்த அளவில் விளம்பரப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 91 மாதிரி VPகள் அனைத்தும் SECC, PWL, ASL மற்றும் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளின் விவரங்களை அச்சு, மின்னணு ஊடகங்கள் அல்லது சுவர் ஓவியங்கள் மூலம் பரப்பவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. நாகப்பட்டினம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் JPVன் போது, 188 உண்மை பயனாளிகளின் PMAY-G அடையாள எண்கள் (IDs)/பெயர்கள்,

தகுதியற்ற குடும்பங்களுக்கு வீடுகளை வழங்க தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்றும் உண்மை பயனாளிகளுக்கு அவர்களின் PMAY-G அடையாள எண்கள் (IDs)/பெயர்களில் அத்தகைய வீட்டு ஒப்பளிப்புகள் இருப்பதே அறியவில்லை என்றும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. தகுதியற்ற 188 குடும்பங்களுக்கு தவணைத் தொகையை வழங்குவதில் ஏற்பட்ட நிதி இழப்பு ₹ 1.98 கோடி.

IEC நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தாதது மற்றும் அசல் பயனாளிகளின் பட்டியலுக்கு பரவலான விளம்பரம் வழங்கப்படாதது, இதுபோன்ற முறையற்ற ஒப்பளிப்புக்கு வழிவகுத்தது கண்டறியப்பட்டது. இதன் விளைவாக, PMAY-G பயனாளிகள் அல்லாதவர்களால் வீடுகள் கட்டப்பட்டன மற்றும் **பத்தி 4.1ல்** விவரிக்கப்பட்டபடி, PMAY-G வீடுகள் அவர்களுக்கு அனுமதிப்பது குறித்து உண்மை பயனாளிகள் அறியவில்லை.

பயனாளிகளின் தரவை சரியான முறையில் விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). இருப்பினும், மார்ச் 2022 வரை DRD எந்த செயல் திட்டத்தையும் தயாரிக்கவில்லை.

## 3.4 PWLல் உள்ள பிழைகள்

திட்டமிடல் கட்டத்தில், PWLல் உள்ள பல்வேறு வகையான பிழைகள், கீழே விவரிக்கப்பட்டபடி திட்ட அமலாக்கத்தை வெகுவாக பாதித்தன:

### 3.4.1 PWLல் தகுதியற்ற குடும்பங்களைச் சேர்த்தல்

#### *(அ) குடும்பத்தில் ஒருவரை அரசு ஊழியராகக் கொண்ட குடும்பங்கள்*

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளில் கொடுக்கப்பட்டுள்ள 'தானியங்கு விலக்கு' அளவுகோல்களின்படி, அரசு ஊழியரை[1] உறுப்பினராகக் கொண்ட குடும்பங்கள் PWLயிலிருந்து விலக்கப்பட வேண்டும். இருப்பினும், அவற்றில் சிலருக்கு **அட்டவணை 3.3ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி PMAY-Gன் கீழ் வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3: அரசுப் பணியைப் பணியாகக் கொண்ட குடும்பங்கள்**

| பணி வகை | உள்ளடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | | ஒப்புதல் அளிக்கப்பட்ட வீடுகள் | | |
|---|---|---|---|---|---|
| | SECC | PWL | எண்ணிக்கை | SECCன் விழுக்காடாக அனுமதி | செலவினம் (₹ இலட்சத்தில்) |
| அரசுப்பணி | 273 | 136 | 94 | *34.43* | 73.42 |
| இராணுவம் | 199 | 61 | 54 | *27.13* | 50.97 |
| அஞ்சல் துறை | 245 | 93 | 39 | *15.92* | 33.68 |
| ரயில்வே | 115 | 54 | 51 | *44.35* | 49.66 |
| காவல் துறை | 152 | 50 | 37 | *24.34* | 33.16 |
| மொத்தம் | **984** | **394** | **275** | ***27.95*** | **240.89** |

(ஆதாரம்: MoRD வழங்கிய தரவுகளின் பகுப்பாய்வு)

[1] அரசு வேலை, ராணுவம், வழக்கறிஞர், மருத்துவர், போலீஸ், ஆடிட்டர், ஓய்வூதியம் பெறுபவர் போன்றவை.

மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், மேற்கண்ட 275 குடும்பங்கள் இயல்புநிலையில் தகுதியற்றவர்களாக இருந்தபோதிலும், இந்த தகுதியற்ற நபர்களுக்கு வீடுகள் அனுமதிக்கப்பட்டு ₹ 2.41 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டது. வீடுகள் அனுமதிப்பதற்கான காரணங்கள் பதிவு செய்யப்படவோ, தணிக்கைக்கு விளக்கப்படவோ இல்லை.

திட்ட வழிகாட்டுதல்களை கட்டாயமாகப் பின்பற்றவும், தகுதியற்ற நபர்களை அடையாளம் காண ஒரு சரிபார்ப்புக் குழுவை அமைக்கவும் DRDAகளின் அனைத்து PDகளுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). மேற்கூறிய பதிலின் அடிப்படையில் எடுக்கப்படும் திருத்த நடவடிக்கை எதிர்நோக்கப்படுகிறது (மார்ச் 2022).

### *(ஆ) நிரந்தர வீடுகளை வைத்திருக்கும் குடும்பங்கள்/நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள்*

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, ஏற்கனவே நிரந்தர வீடுகள் வைத்திருக்கும் குடும்பங்கள், பிற அரசாங்கத் திட்டங்களின் கீழ் வீடுகள் கொண்டவர்கள் மற்றும் நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள் PWLலிருந்து விலக்கப்பட வேண்டும். இருப்பினும், அவற்றில் சிலருக்கு **அட்டவணை 3.4ல்** காட்டப்பட்டுள்ளபடி PMAY-Gன் கீழ் வீடுகள் அனுமதிக்கப்பட்டன.

**அட்டவணை 3.4 : பிற திட்டங்களின் கீழ் நிரந்தர வீடுகள் வைத்திருக்கும் குடும்பங்கள் அல்லது இடம்பெயர்ந்தவர்கள்**

| காரணம் | உள்ளடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | | ஒப்புதல் அளிக்கப்பட்ட வீடுகள் | | |
|---|---|---|---|---|---|
| | SECC | PWL | எண்ணிக்கை | SECCஇன் விழுக்காடாக அனுமதி | செலவினம் (₹ இலட்சத்தில்) |
| CMSPGHன்[2] கீழ் ஏற்கனவே வீடு உள்ளமை | 384 | 166 | 139 | *36.20* | 111.49 |
| IAYன் கீழ் ஏற்கனவே வீடு உள்ளமை | 1,894 | 1,368 | 1,205 | *63.62* | 884.09 |
| ஏற்கனவே சொந்தமாக கான்கிரீட் வீடு உள்ளமை | 1,313 | 792 | 590 | *44.94* | 489.51 |
| நிரந்தர இடம்பெயர்வு | 243 | 199 | 172 | *70.78* | 113.64 |
| மொத்தம் | **3,834** | **2,525** | **2,106** | ***54.93*** | **1,598.73** |

(ஆதாரம்: MoRD வழங்கிய தரவுகளின் பகுப்பாய்வு)

JPVன் போது, அரசாங்கத் திட்டங்களின் கீழ் ஏற்கனவே வீடுகளைக் கொண்டிருந்த தகுதியற்ற பயனாளிகளுக்கு PMAY-G வீடுகள் ஒதுக்கப்பட்டமையை தணிக்கை கண்டறிந்தது. ஏற்கனவே வீடுகளைக் கொண்டிருந்த தகுதியில்லாத 2,106 குடும்பங்களுக்கு, PMAY-G வீடுகள் வழங்கப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. இதனால், தகுதியற்ற நபர்களுக்கு ₹ 15.99 கோடி உதவி வழங்கப்பட்டது.

தகுதியற்ற 2,381 குடும்பங்கள், அதாவது, அரசு ஊழியர்கள் (275), ஏற்கனவே சொந்தமாக அல்லது பல்வேறு திட்டங்களின் கீழ் நிரந்தர வீடுகளைக் கொண்ட நபர்கள் (2106) குறித்த விவரங்கள் PWL தயாரிப்பதற்கு முன், கிராம

[2] முதலமைச்சரின் சூரிய சக்தியால் இயங்கும் பசுமை வீடு திட்டம்.

சபைகள்/மேல்முறையீட்டுக் குழுக்களால் சரிபார்க்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. இதன் விளைவாக தகுதியற்ற உதவியாக ₹ 18.40 கோடி (₹.2.41 கோடி + ₹. 15.99 கோடி) அனுமதிக்கப்பட்டது.

SECC தரவுத்தளத்திலிருந்து தகுதியான மற்றும் தகுதியற்ற பயனாளிகளை அடையாளம் காண மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). அதன் அடிப்படையில் தகுதியில்லாத நபர்களுக்கு மேலும் தவணை செலுத்தப்படமாட்டாது என்றும் ஏற்கனவே செலுத்திய தவணைத் தொகை வசூலிக்கப்படும் என்றும் தவறிய அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பதிலளித்தது. திட்டமிடப்பட்ட திருத்த நடவடிக்கைகளுக்கான காலக்கெடுவை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும்.

## 3.5 தகுதியான பயனாளிகளைச் சேர்க்காதது

‘தானியங்கு சேர்க்கை’யின் கீழ் வரும் அனைத்து குடும்பங்களும் PWLல் சேர்க்கப்பட வேண்டும். SECCல் உள்ள 15.86 இலட்சம் குடும்பங்களில், 4.78 லட்சம் குடும்பங்கள் நிராகரிக்கப்பட்டன, 4.80 இலட்சம் குடும்பங்கள் பின்னர் விலக்குதல் செய்யப்பட்டன.

### 3.5.1 ‘தானியங்கு சேர்க்கைக்கு’ (Automatic Inclusion) தகுதி பெற்ற குடும்பங்களை நிராகரித்தல்

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, தங்குமிடம் இல்லாத குடும்பங்கள், ஆதரவற்றோர், பிறரை எதிர்பார்த்து வாழும் நபர்கள், கழிவுகளைச் சுத்தம் செய்பவர்கள், பழங்குடியினர் மற்றும் சட்டப்பூர்வமாக விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் ஆகியோர் பயனாளிகளாக ‘தானியங்கு சேர்க்கைக்கு’ தகுதியுடையவர்கள். ‘தானியங்கிச் சேர்ப்பிற்கு’ தகுதி பெற்ற 19,065 குடும்பங்களில், 5,526 குடும்பங்கள் கிராம சபையால் நிராகரிக்கப்பட்டு, மேல்முறையீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டன. 5,526 நிராகரிக்கப்பட்ட குடும்பங்களில், 4,871 குடும்பங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைக் காட்டி நிராகரிக்கப்பட்டன மற்றும் 655 குடும்பங்கள் சரியான காரணங்களை பதிவு செய்யாமையால் நிராகரிக்கப்பட்டன. இந்த 655 நிராகரிப்புகளில் 531குடும்பங்கள் (81 விழுக்காடு) SC/ST சமூகத்தைச் சேர்ந்தவை **(இணைப்பு 3.2)**.

### 3.5.2 அதிக பற்றாகுறை மதிப்பெண்களைக் (Deprivation score) கொண்ட குடும்பங்களை நீக்குதல்

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய முன்னுரிமையை ‘பற்றாகுறை மதிப்பெண்[3] தீர்மானிக்கிறது. “பிற குடும்பங்கள்” (மேலே குறிப்பிட்டுள்ள ‘தானியங்கிச் சேர்த்தல்’ தவிர்த்து) பிரிவின் கீழ் 1 முதல் 5 வரையிலான ‘பற்றாகுறை மதிப்பெண்’ கொண்ட குடும்பங்களில், 57,131 குடும்பங்களின் நிராகரிப்பிற்கான காரணங்கள் வெறுமையாகவோ

[3] பற்றாக்குறை அளவுருக்கள் என்பது, (i) 16 முதல் 59 வயதுக்குட்பட்ட உறுப்பினர் இல்லாத குடும்பங்கள், (ii) 16 முதல் 59 வயதுக்குட்பட்ட ஆண் உறுப்பினர் இல்லாத பெண் தலைமைக் குடும்பம், (iii) 25 வயதுக்கு மேற்பட்ட கல்வியறிவு இல்லாத உறுப்பினர் கொண்ட குடும்பங்கள் (iv) மாற்றுத்திறனாளி உறுப்பினர் மட்டுமே கொண்ட குடும்பங்கள், மற்றும் (v) தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை உடலுழைப்பிலிருந்து பெறுகின்ற நிலமற்ற குடும்பங்கள், ஆகிய குடும்பங்களை உள்ளடக்கியது.

அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களாகவோ இருந்தது. 655 குடும்பங்கள் ஏற்றுக்கொள்ள இயலாத காரணங்களை காட்டி நிராகரிக்கப்பட்டன, இதில் 24,248 (42 விழுக்காடு) SC/ST குடும்பங்கள்.

மேலும், பூஜ்ஜிய பற்றாகுறை மதிப்பெண்ணைக் கொண்ட 1,08,828 குடும்பங்கள் PWLல் சேர்க்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட 1 முதல் 5 வரையிலான பற்றாக்குறை மதிப்பெண்களைக் கொண்ட குடும்பங்கள் ஏற்கத்தக்க காரணமின்றி நிராகரிக்கப்பட்டமை கண்டறியப்பட்டது. இக்குடும்பங்கள் SECCல் சேர்க்கப்பட்ட போதிலும், தவறாக நிராகரிக்கப்பட்டதால், PMAY-Gன் கீழ் அவர்களுக்கு வீடுகள் மறுக்கப்பட்டன.

GoTN, தணிக்கை முடிவுகளை ஏற்றுக்கொண்டு, தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளுக்குக் காரணமான அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், PMAY-G அல்லது மாநில திட்டங்களின் கீழ் வரும் பயனாளிகளுக்கு, அவர்களின் தற்போதைய நிலையைக் கண்டறிந்து, வீடுகளை அனுமதிப்பதற்கான சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்படும் என்றும் பதிலளித்தது (மார்ச் 2022). மேற்கூறிய பதிலின் அடிப்படையிலான மறுசீரமைப்பு நடவடிக்கை எதிர்நோக்கப்படுகிறது (மார்ச் 2022).

## 3.6 PWL தயாரிப்பதில் மாவட்டங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு

PWLல் சேர்க்கப்பட்ட பயனாளிகளின் பட்டியலை, நிராகரிப்பு மற்றும் விலக்குதலுக்குப் பிறகு உள்ள SECC தரவுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் பகுப்பாய்வு செய்யப்பட்து. தணிக்கையின் கண்டுபிடிப்புகள் **இணைப்பு 3.3**ல் கொடுக்கப்பட்டுள்ளன, மற்றும் விவரங்கள் **விளக்கப்படம் 3.2**ல் விளக்கப்பட்டுள்ளன**.**

**விளக்கப்படம் 3.2: நிராகரிப்பு/விலக்குதலுக்குப் பிறகு SECC குடும்பங்களில் இருந்து PWL தயாரிப்பின் மாவட்ட வாரியான பகுப்பாய்வு**




(ஆதாரம்: ஆவாஸ்சாஃப்ட் தரவின் பகுப்பாய்வு)

SECCயிலிருந்து PWLக்கு எடுத்துச்செல்லப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை, மாவட்டங்களிடையே 11 முதல் 61 விழுக்காடு வரை பரவலாக மாறுபடுகிறது. இது மாநில அளவில் சராசரி 40 விழுக்காடாக உள்ளது. மாதிரி மாவட்டங்களில் SECC யிலிருந்து PWLக்கு எடுத்துச்செல்லப்பட்ட பட்டியலின் பகுப்பாய்வு **அட்டவணை 3.5ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.5: SECCலிருந்து PWLக்கு சேர்க்கப்பட்ட பயனாளிகளின் விவரங்கள்**

| மாவட்டம் | | ஈரோடு | ராமநாதபுரம் | திருவாரூர் | நாகப்பட்டினம் |
|---|---|---|---|---|---|
| **SECCயிலுள்ள ஒட்டுமொத்த PWL (விழுக்காடு)** | | **15 விழுக்காடு** | **36 விழுக்காடு** | **51 விழுக்காடு** | **61 விழுக்காடு** |
| அரசு ஊழியர் (பத்தி 3.4.1 (அ)) | SECC | 7 | 32 | 72 | 76 |
| | PWL | 2 | 7 | 41 | 41 |
| | PWLயிலிருந்து SECC (விழுக்காட்டில்) | *(29)* | *(22)* | *(57)* | *(54)* |
| | அனுமதிக்கப்பட்டது | 1 | 7 | 20 | 21 |
| சொந்த வீடு (பத்தி 3.1.4 (ஆ)) | SECC | 0 | 0 | 2 | 70 |
| | PWL | 0 | 0 | 1 | 66 |
| | PWLயிலிருந்து SECC (விழுக்காட்டில்) | NA | NA | *(50)* | *(94)* |
| | அனுமதிக்கப்பட்டது | 0 | 0 | 1 | 4 |

(ஆதாரம்: ஆவாஸ்சாஃப்டில் பகுப்பாய்வு)

அனைத்து மாவட்டங்களிலும் தகுதியற்ற குடும்பங்கள் SECCலிருந்து PWLக்கு எடுத்துச்செல்லப்பட்டது கண்டறியப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்டத்தில், SECCயில் உள்ள 76 அரசு ஊழியர்களில் 41 பேர் PWLக்கு எடுத்துச்செல்லப்பட்டு அதில் 21 நபர்களுக்கு வீடுகள் அனுமதிக்கப்பட்டன. நாகப்பட்டினம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில், PWL-ல் சேர்க்கப்பட்டுள்ள பயனாளிகளின் பட்டியல் PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி வெளியிடப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.

கிராம சபைகள் அனுமதியின் போது சிறப்பு அதிகாரிகளாக இருந்த BDOவின் சரிபார்ப்பு செயல்முறையில் முறைகேடுகள் மற்றும் சீரான தரநிலை இல்லாதது போன்ற காரணங்களால், சில மாவட்டங்கள் SECCஇலிருந்து PWLக்கு அதிக சேர்க்கை விகிதத்தைக் கொண்டிருந்தன என்றும் இதன் விளைவாக தகுதியற்ற குடும்பங்கள் சேர்க்கப்படவேண்டியதாயிற்று என்றும் அனுமானிக்கப்படுகிறது. இது, **பத்தி 4.1ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி சந்தேகத்திற்குரிய முறைகேடான ஒப்பளிப்புகளுக்கு இடமளித்தது.

மாவட்ட நிர்வாகத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைத் தடுக்க மாவட்ட அளவில் வீட்டு வசதிப் பிரிவு பலப்படுத்தப்படும் என்றும் GoTN பதிலளித்தது (மார்ச் 2022). இப்பதிலின் அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கை எதிர்நோக்கப்படுகிறது (மார்ச் 2022).

## 3.7 முடிவுரை

திட்டமிடலின் குறைபாடுகள் காரணமாக, தேவைப்படும் பயனாளிகளுக்கான கடன் உதவி செய்து தரப்படவில்லை, தேவை இருந்தபோதிலும் கொத்தனார் பயிற்சி திட்டத்தை செயல்படுத்தவில்லை மற்றும் பிற திட்டங்களுடன் ஒருங்கிணைப்பில் குறைபாடுகள் கண்டறியப்பட்டன. மேலும், வீட்டு மனைகள் தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கையை உறுதிசெய்வதில் குறைபாடுள்ள திட்டமிடல் காரணமாக SC/ST பயனாளிகளுக்கு 60 விழுக்காடு வீடுகளை அரசால் வழங்க முடியவில்லை. பணியாளர் ஒதுக்கீட்டிலும் குறைபாடுகள் இருந்தன, இதன் விளைவாக திட்டத்தின் அமலாக்கம் மற்றும் கண்காணிப்பு உகந்த நிலையில் இல்லாமல் போயிற்று.

கிராம சபை அளவிலான சரிபார்ப்பு செயல்முறை, திட்டத்தை செயல்படுத்துவதில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய தவறிவிட்டது. மாதிரி கிராம ஊராட்சிகள் எதுவும் திட்டத்திற்கு தேவையான பயனாளிகளின் பட்டியலை வெளியிடவில்லை.

## 3.8 பரிந்துரைகள்

- PMAY-G வீட்டைக் கட்டுவதற்கான செலவு அரசாங்கத்தால் வழங்கப்படும் பல்வேறு மானியங்களை விட கணிசமாக அதிகமாக இருப்பதால், தேவையுள்ள பயனாளிகளுக்கு வங்கிக் கடன் பெற வழிவகுக்கலாம்.
- பயனாளிகள் மீதான நிதிச்சுமையைக் குறைக்க, பிற அரசாங்கத்திட்டங்களுடன் ஒன்றிணைவது உறுதி செய்யப்படலாம்.
- வீட்டு மனைகள் இல்லாத காரணத்தால் பயனாளிகள் நிராகரிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய நிலமற்ற குடும்பங்களின் உண்மையான தரவுத்தளம் தயாரிக்கப்படலாம்.
- துறை, எதிர்காலத் திட்டங்களில், பயனாளிகளின் தரவுத்தளத்தைத் தயாரிக்கும்போது தனித்துவமான அடையாளங்காட்டிகள் இருத்தலை உறுதிசெய்யலாம்.
- எதிர்காலத் திட்டங்களில் நிர்ணயிக்கப்படும் இலக்குகள் பாதிக்கபடாத வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்படவும், கண்காணிக்கபடவும் போதுமான பணியாளர்கள் PMUல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

# அத்தியாயம் IV

# திட்ட அமலாக்கம்

# அத்தியாயம் IV

# திட்ட அமலாக்கம்

## 4.1 வீடுகளுக்கான ஒப்பளிப்பு அளித்தல்

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள், பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான நோக்கம் மற்றும் சரிபார்க்கக்கூடிய செயல்முறையை வழங்குகிறது. MGNREGS வேலை அட்டை எண், பரிந்துரைக்கப்பட்டவரின் பெயர், ஆதார் எண் (ஒப்புதலுடன்) மற்றும் வங்கிக் கணக்கு எண் ஆகியவை சரிபார்க்கப்பட்டு பதிவேற்றப்பட்ட பிறகு, ஒவ்வொரு பயனாளிக்கும் அவரது PMAY-G அடையாள எண்ணுடன் (ID) ஆவாஸ்சாஃப்ட்டில் தனித்தனியாக ஒப்பளிப்பு ஆணை உருவாக்கப்படுகிறது. PMAY-G அடையாள எண்ணுடன் (ID) கூடிய ஒப்பளிப்பு ஆணை பயனாளியின் பெயரிலோ அல்லது SECC பட்டியலில் உள்ள அவரது/ அவளது குடும்ப உறுப்பினர்களின் பெயரிலோ வழங்கப்படுகிறது. PWLல் உள்ள பயனாளியின் அல்லது குடும்ப உறுப்பினரின் பெயர் "தெரியாது" என்றோ அல்லது பதிவிடப்படாமலோ இருந்தால், பதிவுசெய்யப்பட்ட MGNREGS வேலை அட்டையில் உள்ள பெயருக்கு அனுமதி ஆணை வழங்கப்படும். இந்த நோக்கத்திற்காக, "பெயர் தெரியாத பயனாளியின் பெயரை MGNREGAவில் உள்ள பெயருடன் மாற்றுதல்" என்ற ஒரு முகப்பு (SECCன் படி) வழங்கப்படுகிறது.

தணிக்கையில் வீடுகள் ஒப்பளிப்பு தொடர்பான பின்வரும் முறைகேடுகள் கண்டறியப்பட்டன.

## தகுதியற்ற குடும்பங்களுக்கு சந்தேகத்திற்குரிய மோசடியான ஒப்பளிப்பு வழங்கியமை

### 4.1.1 தகுதியற்ற நபர்களுக்கு வீடுகள் வழங்குதல்

SECC பட்டியல் தரவுகளில் உள்ள பெயர்களில் இருந்து ஒப்பளிப்பு ஆணையில் மாறுபடும் பெயர் கொண்ட பயனாளிகளைத் தணிக்கை சரிப்பார்த்தது. இது போன்ற 981 பிரிவுகளில் (18 மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் 8ல்), SECC பட்டியலில் உண்மை பயனாளிகள் மற்றும் சரியான பெயர்களைக் கொண்ட பிற குடும்ப உறுப்பினர்கள் இருந்த போதிலும், குடும்ப உறுப்பினர் பட்டியலில் 'தெரியாத' என்ற உள்ளீடு ஒப்பளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

SECC தரவில் உள்ள "தெரியாத" என்ற பெயர், தகுதியற்ற நபர்களின் பெயருக்கு மாற்றப்பட்டது. ஆவாஸ்சாஃப்டின் "பெயர் தெரியாத பயனாளியின் பெயரை (SECCன் படி) MGNREGAவில் உள்ள பெயருடன் மாற்றுதல்" என்ற முகப்பை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் இது செய்யப்பட்டது. MGNREGS வேலை அட்டையின் பெயரை "தெரியாத" பெயருக்குப்பதிலாக மாற்றுவதற்கு முகப்பு அனுமதிக்கிறது. இருப்பினும், எந்தவொரு MGNREGS அட்டையையும் PMAY-G அடையாள எண்ணுடன் இணைக்க முடியும் என்றும் இதற்க்காக இரண்டு பதிவுகளிலும் உள்ள வீட்டு உறுப்பினர்களின் பெயர்கள் பொருந்த வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது. தகுதியான பயனாளி அல்லது அவரது குடும்ப உறுப்பினரின் பெயரில் உள்ள "தெரியாதவர்"

என்பது மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த வேறு நபரைக் கொண்டு மாற்றப்பட்டு, தகுதியற்ற நபரின் பெயரில் PMAY-G வீட்டிற்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுடனான தணிக்கை மேற்கொண்ட JPVயில் 981 பதிவுகளில் 160ல், தவறான பயனாளிகளிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது, JPVன் போது தகுதியற்ற நபர்களுக்கு வீடுகளை அனுமதிப்பதற்கு வசதியாக பதிவுகளை தவறாக்கியதற்கான ஒரு எடுத்துக்காட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**குறிப்பிட்ட நேர்வு பற்றிய ஆய்வு**

திரு.அம்மாசி வேலாயுதம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் (இப்போது மயிலாடுதுறை மாவட்டம்) மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் கொற்கை கிராமப் பஞ்சாயத்தில் **விளக்கப்படம் 4.1ல்** காட்டப்பட்டுள்ள ஒரு குடிசையில் தனது மனைவி திருமதி. தங்கச்சியம்மாள் உடன் வசிக்கிறார். அவரது குடும்ப அட்டை எண் xxxx xxxx 0031.

அவர் PMAY-G பயனாளி மற்றும் நிரந்தர காத்திருப்புப் பட்டியலில் (PWL) தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரது PMAY-G அடையாள எண் (ID) TN 1514619 ஆகும். அவர் SC சமூகத்தைச் சேர்ந்தவர்.

விளக்கப்படம் 4.1: திரு.அம்மாசி வேலாயுதத்தின் குடிசை வீடு



குடும்பத்தின் இரண்டாவது உறுப்பினருக்கான குடும்ப உறுப்பினர் விவரங்கள், அதாவது பெயர், தந்தையின் பெயர், தாயின் பெயர் மற்றும் உறவு ஆகியவை "தெரியாதவை" என பதிவேற்றப்பட்டுள்ளன

அவர் MGNREGSன் கீழ் பதிவு செய்யப்பட்டவர். அவரது வேலை அட்டை எண் TN-14-007-020-020/118A

PMAY-G வீடானது குடும்பத்தில் உள்ள எந்த நபருக்கும் வழங்கப்படலாம். SECCல் பதிவேற்றப்பட்ட அத்தகைய ஒதுக்கீட்டாளரின் பெயர் "தெரியாது" என்று இருக்குமெனில் ஆவாஸ்சாஃப்டில் உள்ள ஊராட்சி ஒன்றியத்தைப் பயன்படுத்தி அந்தந்த MGNREGS வேலை அட்டையில் உள்ள அந்த குடும்ப உறுப்பினரின் சரியான பெயருக்கு அதை மாற்றலாம். இருப்பினும், ஆவஸ்சாஃப்டில் சரிபார்ப்புக் கட்டுப்பாடு இல்லாதலால், எந்த MGNREGS வேலை அட்டையும் PMAY-G அடையாள எண்ணுடன் (ID) இணைக்கப்படலாம்.

இந்த தவறான செயல்பாட்டினை வீடு பதிவு மற்றும் ஒப்பளிப்பின் போது, ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் முறைகேடாக பயன்படுத்தியுள்ளனர். திரு அம்மாசி வேலாயுதம் அல்லது அவரது மனைவி திருமதி. தங்கச்சியம்மாளை

தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக. “தெரியாத” என்று பெயர் உள்ளிடப்பட்ட குடும்ப உறுப்பினரான தங்கச்சியம்மாளின் பதிவை, பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த MGNREGS வேலை அட்டை எண் TN-14-007-020-020/239A கொண்ட வேறு வீட்டைச் சேர்ந்த திரு செந்திலை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் தேர்ந்தெடுத்தனர். நான்கு தவணைகளாக (**விளக்கப்படம்** 4.2) ₹ 1.20 இலட்சம் திரு. செந்திலுக்கு வழங்கப்பட்டது

**விளக்கப்படம் 4.2: திரு செந்திலுக்கு ஒப்பளிக்கப்பட்டு கட்டப்பட்ட வீடு**




திரு. செந்தில், SECC பயனாளியான திரு அம்மாசி வேலாயுதத்துடன் தொடர்புடையவர் அல்ல. திரு. செந்திலின் குடும்ப அட்டை எண் XXXX XXXX 2579 ஆகும். இப்படியாக, ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் உண்மையான பயனாளியைத் தேர்வு செய்யாமல், தகுதியற்ற நபருக்கு சந்தேகத்திற்குரிய வகையில் முறைகேடாக வீட்டை ஒதுக்கியுள்ளனர்.

பயனாளிகள் பட்டியலை முறையாக வெளிப்படுத்தாததால், உண்மையான பயனாளி திரு. அம்மாசி வேலாயுதம் தனக்கு PMAY-G வீடு ஒதுக்கப்பட்டது தெரிந்துகொள்ள முடியாமல் போனது.

(ஆதாரம்: JPV)

மேலே உள்ள விளக்கம் பற்றிய கூடுதல் விவரங்கள் **இணைப்பு 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

உண்மை பயனாளிகளைப் பார்வையிட்டபோது, அவர்களின் PMAY-G அடையாள எண்கள் (ID) தகுதியற்ற நபர்களுக்கு அனுமதி வழங்குவதற்காக தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்ற உண்மையை அவர்கள் அறியாமல் இருந்தது கண்டறியப்பட்டது. தகுதியில்லாத நபர்களுக்கு வீடுகள் வழங்கியதால் ஏற்பட்ட முறைகேடான செலவு ₹ 1.86 கோடி ஆகும்.

மேலும், முழு மாநிலத்திற்கான PMAY-G தரவை பகுப்பாய்வு செய்ததில், 125 மாதிரிகள் அல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 5,949[1] இனங்களில் தகுதியான பயனாளிகளின் பெயர் புலத்தில் உள்ள “தெரியாத” என்ற பதிவு, இதே முறையில் மாற்றப்பட்டது கண்டறியப்பட்டது. 5,949 இனங்களில், 595 இனங்கள் (10 விழுக்காடு) தணிக்கையில் சரிபார்க்கப்பட்டது. இதில், மாற்றப்பட்ட பெயர்களில் 566 பேர்களுக்கு பதிலாக மாற்றப்பட்ட பெயர்களின் உரிமையாளர்கள்

[1] மாநிலத்தில் குடும்ப உறுப்பினராக “தெரியாதவர்கள்” அனுமதிக்கப்பட்ட பயனாளிகளில், 10,771 வழக்குகள் குறைந்தபட்சம் ஒரு குடும்ப உறுப்பினருக்கு சரியான பெயர் இருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிகளில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்ட 981 வழக்குகளைத் தவிர்த்து, சரியான பெயர்களைக் கொண்ட குறைந்தபட்சம் இரண்டு குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட 5,949 வழக்குகளைத் தணிக்கை தேர்ந்தெடுத்தது.

தகுதியான குடும்பங்களின் உறுப்பினர்கள் இல்லை[2] என்று கண்டறியப்பட்டது. மீதியுள்ள 5,354 உறுப்பினர்களை சரிபார்த்து, அரசுக்கு ஏற்பட்ட இழப்பைக் கண்டறியவும், இந்த முறைகேடுகளுக்கான பொறுப்பை நிர்ணயிக்கவும் துறை செயல்முறைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய 1,547 சந்தேகத்திற்குரிய மோசடி ஒப்பளிப்புகள் (981 + 566) காரணமாக அரசாங்க கருவூலத்திற்கு மதிப்பிடப்பட்ட இழப்பு **இணைப்பு 4.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி ₹ 27.52 கோடி ஆகும். DRDAகளின் சம்பந்தப்பட்ட PDகள் பயனாளிகளின் தகுதியை சரிபார்க்க அறிவுறுத்தப்படுவர். மேலும் தவறான பதிவேடுகளுக்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

### 4.1.2 "தெரியாதவர்" என்ற பெயரில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு தகுதியற்ற நபர்களுக்கு பணம் செலுத்தியமை

எட்டு மாதிரி மாவட்டங்களில் ஏழில்[3], 967 உறுப்பினர்களில் 693 பேருக்கு, "தெரியாத" என்ற பெயரில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தது தணிக்கையில் கண்டறியப்பட்டது. இதனால், PMAY-G அடையாள எண்ணுடன் (IDs) இணைக்கப்பட்ட குடும்பத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாத நபர்களுக்கு பணம் ஒழுங்கற்றதாக செலுத்தப்பட்டு இருந்தது.

இந்த உறுப்பினர்களில், PMAY-G அடையாள எண்ணுடன் (ID) தொடர்புடைய குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களின் விவரங்கள் உள்ளது கண்டறியப்பட்டது. எனவே, "தெரியாத" என்ற பெயரில் ஒப்பளிப்பு வழங்க வேண்டியது அவசியம் அற்றதாக உள்ளது. மேலும், மேலே உள்ள அனைத்து உறுப்பினர்களிலும், "தெரியாத" என்ற பெயரில் குறிப்பிட்ட பயனாளியின் குடும்ப உறுப்பினருக்கு ஒப்பளிப்பு வழங்குவது முற்றிலும் அவசியமாயினும், இவ்வுறுப்பினரின் பெயரை ஆவோஸ்சாஃப்ட் மென்பொருளின் ஊராட்சி ஒன்றியத்தின் அடிப்படையில் சரியான நபருக்கு மாற்ற துறை அங்கீகாரம் பெற்றுள்ளது. BDOகள் அதை சரிசெய்யத் தவறிவிட்டதன் விளைவாக தகுதியற்ற நபர்களுக்கு PMAY-G வீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

மேற்கண்ட 693 இனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 இனங்களில் பிளாக் அதிகாரிகளுடன் நடத்திய JPVன் போது இந்த உண்மை உறுதிப்படுத்தப்பட்டது. (விழுப்புரத்தில் 20 இனங்கள், தருமபுரியில் ஐந்து இனங்கள், திருவாரூரில் மூன்று இனங்கள், ஈரோடு மாவட்டத்தில் இரண்டு இனங்கள்[4]).

தகுதியற்ற நபர்களுக்கு வீடுகளை அனுமதிப்பதற்கு ஏதுவாக பதிவுகளை பொய்யாக்கியதற்கான விளக்கமான நேர்வு, **இணைப்பு 4.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது

[2] 595ல், 29 வழக்குகள் தகுதியானவை மற்றும் 566 வழக்குகள் தகுதியற்றவை ஆகும். அதாவது, 482 வழக்குகளில் வெவ்வேறு குடும்பங்களின் வேலை அட்டைகளை இணைப்பதன் மூலம் பெயர்கள் மாற்றப்பட்டன, மேலும் 84 வழக்குகளில், வேலை அட்டைகள் பொருந்தாமலோ அல்லது அந்தந்த VPகள் மற்றும் பெயர்களில் உள்ள பெயர்களிலோ இல்லை. பத்தி 3.1.3ல் விவரிக்கப்பட்ட வழக்குகளைப் போன்று தொடர்பில்லாத இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களின் பெயரில் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டன.

[3] திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைத் தவிர்த்து. இம்மாவட்டத்தில் "தெரியாத" என்ற பெயர் கொண்ட குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 18 ஒப்பளிப்புகளும் சரியானவை.

[4] தகுதியில்லாத குடும்பங்களுக்கு அனுமதி வழங்கிய 30 வழக்குகளில், ₹ 0.40 கோடி வழங்கப்பட்டது.

கூடுதலாக, மாநிலம் முழுவதும் உள்ள ஒப்பளிப்புத் தரவுகளின் பகுப்பாய்வில், இதே போன்ற 1,229 உறுப்பினர்கள் "தெரியாத" என்ற பெயரில் அனுமதி பெற்றுள்ளனர். தணிக்கையில், மேற்கூறிய உறுப்பினர்களில் 123 (10 விழுக்காடு) சரிபார்க்கப்பட்டு, அவற்றில் 114 தகுதியற்றவை என்று கண்டறியப்பட்டது. மாநில அளவில் இதேபோன்ற செயல்பாடு இந்த முறைகேடின் பெரும்பான்மையினை வெளிப்படுத்தும்.

சந்தேகத்திற்குரிய மோசடி ஒப்பளிப்புகள் 807 (693+114)ஆல், அரசு கருவூலத்திற்கு ஏற்பட்ட இழப்பு ₹ 14.11 கோடி ஆகும் ( **இணைப்பு 4.4**).

இந்த இனங்களை சரிபார்க்க சம்பந்தப்பட்ட PD, DRDAக்கு அறிவுறுத்தப்படும் என்றும், மோசடி செய்யப்பட்டது கண்டறியப்பட்டால், வழங்கப்பட்ட தொகை வசூலிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் GoTN பதிலளித்தது (மார்ச் 2022). தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டவற்றை அமலாக்கம் செய்வதில் குறைபாடுகள் உள்ளதாக துறையின் பதில் உறுதிப்படுத்துகிறது.

### 4.1.3 பயனாளியின் பெயரில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு தகுதியற்ற நபருக்கு பணம் செலுத்தப்பட்டமை

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளின்படி, பதிவு செய்யும் போது வங்கிக் கணக்கு விவரங்கள் சரிபார்க்கப்பட வேண்டும் மற்றும் PWLஇல் உள்ள பெயர்கள் வங்கிக் கணக்கு வைத்திருப்பவரின் பெயருடன் பொருந்த வேண்டும். அதன்பிறகு, வங்கிக் கணக்குகள் ஆவாஸ்சாஃப்டில் பதிவுசெய்யப்படும் மற்றும் குறிப்பிட்ட கோரிக்கையுடன் மட்டுமே மாற்றங்களைச் செய்ய முடியும். அதாவது தவறான வங்கிக் கணக்கு எண், கடன் கணக்கு எண், ₹ 10,000-க்கு மேல் பணத்தை எடுக்க முடியாது என்ற கட்டுப்பாடு கொண்ட சிறு சேமிப்புக் கணக்கு எண், பயனாளியின் மரணம், போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே வங்கிக் கணக்கை மாற்றும் கோரிக்கை ஏற்கப்பட வேண்டும். நிதி மாற்ற ஆணை - FTO வெளியிடப்பட்ட பிறகு வங்கிக் கணக்கை மாற்றுவது, மாநில அளவில் மட்டுமே இயலும்.

PMAY-Gன் கீழ் வீடுகளின் ஒப்பளிப்பின் பகுப்பாய்வில், தணிக்கை பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

**(i) திருவண்ணாமலை மாவட்டத்தின் ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியம்:** தகுதியில்லாத நபர்கள் PMAY-Gன் கீழ் வீடுகளைப் பெறுவது தொடர்பாக பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் 11 வட்டாட்சியர்களிலும் மாவட்ட நிர்வாகம் சரிபார்ப்பு நடவடிக்கை நடத்தியது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

SECC பட்டியலில் இல்லாத 352 தகுதியற்ற குடும்பங்களுக்கு, வீடுகள் அனுமதிக்கப்பட்டிருந்தன மற்றும் சம்பந்தப்பட்ட ஒன்பது ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் மற்றும் ஏழு பஞ்சாயத்து கிளார்க்குகள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. ஊராட்சி ஒன்றிய/VP அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டனர் (நவம்பர் 2019). மேலும், மேற்கண்ட தகுதியற்ற 352 நபர்களுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன.

இந்த 352 வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதாலும், இலக்கை எட்டுவதில் பாதிப்பை ஏற்படுத்தியதாலும், ஜவ்வாது மலை BDO வீடுகளை ஆய்வு

செய்த பிறகு அடுத்த தவணைகளை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர், சரிபார்ப்பு அறிக்கையின் அடிப்படையில், 352 பேரில் 350 பேர் வீடற்றவர்கள் என்றும், SECCஇல் அவர்களின் பெயர் சேர்க்கப்படாத காரணம் மட்டுமே தவிர, அவர்கள் மத்திய மற்றும் மாநில அரசின் வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் வீடுகள் பெற முழுமையான தகுதியுடையவர்கள் என்றும் கண்டறிந்தார். வீடு கட்டுமானத்தின் உண்மையான நிலைகளின் அடிப்படையிலேயே தவணைகள் விடுவிக்கப்பட்டன என்று அவர் முடிவு செய்தார்.

ஏழு பஞ்சாயத்து எழுத்தர்களின் இடைநீக்க உத்தரவு பின்னர் (நவம்பர் 2020) ரத்து செய்யப்பட்டது மற்றும் ஒன்பது ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கு எதிரான விசாரணை இன்னும் இறுதி செய்யப்படவில்லை (அக்டோபர் 2021).

பின்வரும் காரணங்களுக்காக ஆட்சியர் அளித்த காரணங்களை ஏற்க முடியாது என்று தணிக்கை கண்டறிந்தது:

- SECCயிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மையான பயனாளிகளின் PMAY-G அடையாள எண்கள், தகுதியற்ற நபர்களுக்கு PMAY வீடுகளை ஒதுக்குவதற்காக தவறாகப் பயன்படுத்தப்பட்டதால், PMAY-G வீடுகளைப் பெறுவதற்கான வாய்ப்பை இழந்துள்ளனர்.
- SECCக்கு வெளியே உள்ள குடும்பங்களுக்கு PMAY-G வீடுகளை வழங்க மாவட்ட நிர்வாகத்திற்கு அதிகாரம் இல்லை.

ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுடனான JPVயின் போது, ஜவ்வாது மலையின் நான்கு VPகளில் தகுதியற்ற 28 குடும்பங்களின் வங்கிக் கணக்குகளுக்கு நிதி வழங்கப்பட்டது. ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முழு ஒப்பளிப்புகள் பற்றிய தணிக்கை பகுப்பாய்வில், ஏற்கனவே கண்டறியப்பட்ட 352 இனங்களைத் தவிர, 49 ஒத்த முறையற்ற அனுமதி இனங்கள் கண்டறியப்பட்டது.

**(ii) திருவண்ணாமலை மாவட்டத்தின் கீழ்பென்னாத்தூர் மற்றும் செங்கம் ஊராட்சி ஒன்றியங்கள்:** DRDA திருவண்ணாமலையில் புகார் கோப்புகளை ஆய்வு செய்தபின், ஆவூர் VP மற்றும் குயிலம் VPகளில் JPVகளைத் தணிக்கை மேற்கொண்டது. **அட்டவணை 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி தகுதியற்ற நபர்கள் உண்மையான பயனாளிகளின் பெயரில் வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டு, அவர்களின் வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்பட்டது கண்டறியப்பட்டது.

**அட்டவணை 4.1: ஆவூர் மற்றும் குயிலம் VPகளில் நடத்தப்பட்ட JPV பற்றிய விவரங்கள்**

| VP | ஊராட்சி ஒன்றியம் | JPV செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | தகுதியில்லாத குடும்பங்கள் பணம் பெற்ற விவரங்கள் | பணம் செலுத்தப்பட்டது (₹இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| ஆவூர் | கீழ்பென்னாத்தூர் | 10 | 2 | 2.80 |
| குயிலம் | செங்கம் | 11 | 11 | 12.78 |

(ஆதாரம்: மாதிரி மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பதிவுகள்)

தயாரிக்கப்பட்ட பதிவுகளின்படி, துறையால் கள அளவில் உண்மைகள் மட்டுமே சரிபார்க்கப்பட்டன. மேலும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**(iii) திருவாரூர் மாவட்டத்தின் மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம்:** திருவாரூர் மாவட்டத்தின் மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில், உதவித் திட்ட அலுவலர்/DRDA, இரண்டு தனித்தனி கள ஆய்வு அறிக்கைகளில், ஆவணச்

சரிபார்ப்பின் போது தகுதியற்ற நபர்களின் வங்கி விவரங்கள் 2016-20 காலகட்டங்களில் பதிவு செய்யப்பட்டு இருப்பதைச் சுட்டிக்காட்டினர். மேலும், ஆவாஸ்சாஃப்டில் தொடர்பில்லாத நபர்களின் புவிசார் குறியீடுகள் பதிவேற்றப்படுவதன் மூலம் தகுதியற்ற நபர்களுக்கு தவணைகளை செலுத்த வசதியாக மாற்றப்பட்டதையும் சுட்டிக்காட்டினர். தகுதியற்ற நபர்களுக்கு வீடுகளை ஒதுக்க, 190 உண்மையான பயனாளிகளின் PMAY-G ID மற்றும் பெயர்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டன. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட VPகளின் JPVன் மூலம் தணிக்கை இதனை உறுதி செய்தது. தணிக்கையில், 15 உறுப்பினர்களில் (cases), தகுதியற்ற நபர்களுக்கு பணம் செலுத்தப்பட்டது கண்டறியப்பட்டது. இன்னும் மூன்று இனங்களில் வீடுகள் மற்றும் உண்மையான பயனாளிகள் இரண்டுமே கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும், வீடு கட்டப்படாமல் பணம் செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது. JPVன் போது தகுதியற்ற நபர்களுக்கு வீடுகளை அனுமதிப்பதற்கு வசதியாக பதிவுகளை பொய்யாக்கியதற்கான ஒரு எடுத்துக்காட்டு **விளக்கப்படம் 4.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது**:**

**விளக்கப்படம் 4.3: PMAY-G ID TN 1268176, தலையமங்கலம் VP, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், திருவாரூர் மாவட்டம்**







உண்மையான பயனாளியின் வீடு திருமதி. வீரப்பன் ஆண்டாள் (இடது) மற்றும் வீட்டைக் கட்டிய மாற்றபட்ட பயனாளி திரு ஜம்புநாதன் தங்கவேலுக்கு PMAY-G வீடு வழங்கப்பட்டது

(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

**(iv)** ஈரோடு மாவட்டத்தின் மொடக்குறிச்சி மற்றும் பவானி ஊராட்சி ஒன்றியங்கள்: இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும், BDOக்கள் மற்றும் திட்ட இயக்குநர் (PD), DRDA ஈரோடு ஆகியோரின் கோரிக்கையின் அடிப்படையில், DRD, 35 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளை, முதலில் பதிவேற்றப்பட்டவை சேமிப்பு வங்கி கணக்குகள் அல்ல என்ற அடிப்படையில் மாற்றினார். மேலும் ஆய்வு செய்ததில், BDOக்கள் வங்கிக் கணக்குகளை மாற்றுவதற்கு தவறான காரணங்களைக் கூறி, உண்மை பயனாளிகளைப் போன்ற பெயர்களைக் கொண்ட தகுதியற்ற 35 மாற்றுக் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, முறையற்ற முறையில் உண்மை பயனாளிகளை மாற்றியுள்ளனர். பின்னர், BDOக்கள் ஏற்கனவே உள்ள 35 பயனாளிகளின் வங்கிக் கணக்கு எண்களை மாற்றுமாறு ஈரோடு PD/DRDAவிடம் கோரினார். ஆனால், கோரப்பட்ட வங்கிக் கணக்கு எண்கள் ஏற்கனவே உள்ள பயனாளிகளுக்குப் பதிலாக புதிதாக அடையாளம் காணப்பட்ட நபர்களுக்கு சொந்தமானது என்ற உண்மையை மறைத்தார். இதையடுத்து, வங்கி கணக்கு எண்கள் மாற்றப்பட்டு, புதிய கணக்குகளுக்கு பணம் மாற்றப்பட்டது.

இந்த கண்டுபிடிப்பு மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாதிரி VPக்களின் JPVயின் போது தணிக்கையில் உறுதி செய்யப்பட்டது.

தகுதியற்ற நபர்களுக்கு வீடுகளை அனுமதிப்பதற்கு வசதியாகப் பதிவேடுகளைப் பொய்யாக்குவதற்கான எடுத்துக்காட்டு நேர்வு **இணைப்பு 4.5**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பவானி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாதிரி VPகளின் JPVயின் போது, தணிக்கையில் இதே போன்ற தகுதியற்ற ஒப்பளிப்பிற்கான கூடுதலாக 21 இனங்கள் கண்டறியப்பட்டன. எனவே, **அட்டவணை 4.2**ல் கொடுக்கப்பட்டுள்ள படி, தகுதியற்ற 660 குடும்பங்களின் வங்கிக் கணக்குகளில் சந்தேகத்திற்குரிய மோசடியான பணம் வழங்கியமையால், அரசுக்கு நேரிடக்கூடிய இழப்பு ₹ 11.34 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை **4.2:** தகுதியற்ற குடும்பங்களின் வங்கிக் கணக்குகளுக்கு தவணை செலுத்துதல்

(₹இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | தகுதியற்ற குடும்பங்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை | அரசின் உறுதியளிக்கப்பட்ட பொறுப்பு | மொத்த இழப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஈரோடு | பவானி | 21 | 39.17 | 0.00 | 39.17 |
| 2 | ஈரோடு | மொடக்குறிச்சி | 35 | 59.88 | 0.00 | 59.88 |
| 3 | திருவண்ணாமலை | செங்கம் | 11 | 12.78 | 6.17 | 18.95 |
| 4 | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை | 401 | 337.07 | 349.78 | 686.85 |
| 5 | திருவண்ணாமலை | கீழ்பென்னாத்தூர் | 2 | 2.80 | 1.00 | 3.80 |
| 6 | திருவாரூர் | மன்னார்குடி | 190 | 181.26 | 144.37 | 325.63 |
| மொத்தம் | | | **660** | **632.96** | **501.32** | **1,134.28** |

(ஆதாரம்: MoRDஆல் வழங்கப்பட்ட மாதிரித் ஊராட்சி ஒன்றியங்களின் பதிவுகள் மற்றும் ஆவாஸ்சாஃப்ட் தரவுகள்)

**பத்திகள் 4.1.1, 4.1.2** மற்றும் **4.1.3**களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மேற்கூறிய இனங்களிலும், 3,014 தகுதியற்ற குடும்பங்களுக்கு சந்தேகத்திற்குரிய மோசடி ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டு நிதி வழங்கியது, பொறுப்பு வகிக்கும் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் மற்றும் அந்தந்த BDOகளின் கூட்டு இல்லாமல் சாத்தியமில்லை.

ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியத்தின் ஆறு அதிகாரிகள் தங்கள் தரப்பில் தவறிழைத்ததற்காக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர், மற்ற ஊராட்சி ஒன்றியங்களில் சந்தேகத்திற்குரிய அனைத்து இனங்களையும் சரிபார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் GoTN பதிலளித்தது (மார்ச் 2022). சந்தேகத்திற்குரிய மோசடித் ஒப்பளிப்புகளில் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடையே கூட்டு இருப்பதாக தணிக்கை கண்டுபிடிப்புகளுக்கான பதில் உறுதிப்படுத்துகிறது. இத்தகைய செயல்கள் மீண்டும் நிகழாமல் இருக்க துறை வலுவான தடுப்பு நடவடிக்கையுடன் கூடிய ஒரு பயனுள்ள நடைமுறையை உருவாக்க வேண்டும்.

### 4.1.4 SECC தரவுகளில் உள்ள முரண்பாடுகள் ஒப்பளிப்பின் போதும் சரி செய்யப்படாமை

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள் மற்றும் GoTN வழங்கிய உத்தரவுகள், SECC தரவுகளில் உள்ள குறைபாடுகளை கிராம சபைகள் சரிசெய்ய வலியுறுத்துகிறது. ஆயினும், கிராம சபைகள் SECC தரவுகளில் உள்ள முரண்பாடுகளை **(இணைப்பு 4.6)** சரி செய்யவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. இது ஆவாஸ்சாஃப்டில் தவறான தரவுகளை பதிவேற்ற வழிவகுத்தது.

- பெயர்கள் புலங்களில் உள்ளீடுகள் "தெரியாதவை" அல்லது வெறுமையாகப்(blank) பதிவேற்றப்பட்டன.
- இயல்பு மீறிய வயது குழுக்கள் - சிறார்கள், மற்றும் 100 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மற்றும் தேவையற்ற குறிப்புக்கள் SECC தரவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, SECC தரவுகளில் உள்ள குறைபாடுகள் PWLக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் கணிசமான எண்ணிக்கையிலான தகுதியற்ற/தவறான குடும்பங்களுக்கு வீடுகள் அனுமதிக்கப்பட்டன.

உதாரணமாக, 2,486 SECC குடும்பங்கள் தங்கள் அனைத்து குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் SECC தரவுகளில் "தெரியாதவை" எனக் கொண்டிருந்தன. இதில், 1,268 பதிவுகள் PWLக்கு அனுப்பப்பட்டு, 1,000 வீடுகள் இறுதியாக அனுமதிக்கப்பட்டன. சரிபார்ப்புக்கான ஒரே அளவுகோல் பயனாளியின் பெயர் மட்டுமே. இருப்பினும், அவை கிடைக்காத காரணத்தால் கிராம சபைகள் இது போன்ற "தெரியாத" என்று பெயர் கொண்டவர்களை பயனாளிகளாகச் சேர்த்தனர். இந்த 1,000 வீடுகளுக்கு ₹ 8.65 கோடி வழங்கப்பட்டது. தனித்துவ அடையாளங்காட்டி இல்லாததால், வீடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளின் உண்மைத்தன்மை சந்தேகத்திற்குரியதாக இருந்தது.

இவ்வாறு, மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் தணிக்கை செய்ததில், SECC தரவின் பெயர் பகுதியில் "தெரியாத" என்பதைத் தவறாகப் பயன்படுத்தியதன் மூலம் தகுதியற்ற பயனாளிகளுக்கு மொத்தம் 3,354 வீடுகள்[5] முறைகேடாக அனுமதியளிக்கப்பட்டது. இதில் ₹ 50.28 கோடி முறைகேடான செலவினம் ஏற்பட்டது.

"தெரியாத" என்று பெயர் உள்ளிடப்பட்ட குடும்ப உறுப்பினர்களைப் பயன்படுத்தி வீடுகள் வழங்கப்பட்ட தகுதியில்லாத பயனாளிகளின் விவரங்களை சேகரிக்க கள அளவிலான கணக்கெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தேவையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியது. மேற்குறிப்பிட்ட பதிலின் அடிப்படையில் (மார்ச் 2022) எடுக்கப்படும் சீரமைப்பு நடவடிக்கை எதிர்நோக்கப்படுகிறது. அரசின் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை மற்றும் சரிசெய்தல் நடவடிக்கைகளைத் தொடங்கும் வகையில், DRD மூலம் மாநில அளவில் முன்னிலைப்படுத்தப்பட்ட சிக்கல்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, மாநில அளவிலான இழப்பு வெளிப்படுத்தப்படவேண்டும்.

---

5 ஒப்பளிப்பின் போது 1,547 "தெரியாதவர்" என்பதைத் தகுதியற்ற நபருடன் மாற்றுவதன் மூலம் (பத்தி 4.1.1)+807 "தெரியாதவர்"க்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் வங்கிக் கணக்கை மாற்றுவதன் மூலம்(பத்தி 4.1.2)+ அனைத்து குடும்ப உறுப்பினர்களும் "தெரியாத" என்ற உள்ளீடு கொண்ட 1,000 வழக்குகள் ,இவை மூலம் முழு மாநிலத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட தரவு பகுப்பாய்வு ஆகும்(பத்தி 4.1.4).

## 4.2 வீடுகள் கட்டுதல்

### 4.2.1 வீடுகளை கட்டி முடிக்காமை

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள் மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஒப்பளிப்புகளின்படி, அனுமதிக்கப்பட்ட வீடுகள் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 12 மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். மார்ச் 2021 நிலவரப்படி, **விளக்கப்படம் 4.4ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, அனுமதிக்கப்பட்ட வீடுகளில் 55.03 விழுக்காடு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.




(ஆதாரம்: MoRD ஆல் வழங்கப்பட்ட ஆவாஸ்சாஃப்ட் தரவு)

2.29 இலட்சம் (44.97 விழுக்காடு) முடிக்கப்படாத வீடுகளின் மதிப்பாய்வில், 0.89 இலட்சம் வீடுகளுக்கு (39 விழுக்காடு) முதல் தவணை வழங்கப்படவில்லை என்பதையும் அதற்கான காரணங்கள் பதிவேடுகளில் குறிப்பிடப்படவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது. மேலும், பின்வரும் இனங்களில் தவணைகள் வெளியிடப்பட்ட போதிலும், மார்ச் 2021 நிலவரப்படி வீடுகள் இன்னும் முடிக்கப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

- கட்டி முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ள வீடுகளில், 1.13 இலட்சம் வீடுகள் ஓராண்டுக்கும் மேலாக அதாவது நிர்ணயிக்கப்பட்ட காலத்தை தாண்டி நிலுவையில் உள்ளன.
- **பத்திகள் 4.1.1 முதல் 4.1.3 வரை** விவாதிக்கப்பட்டபடி, சந்தேகத்திற்கிடமான முறையில் ஒதுக்கப்பட்ட 3,014 வீடுகளில் 755 வீடுகள் முழுமையடையாத வீடுகளை உள்ளடக்கியதாக தணிக்கை மேலும் கண்டறிந்தது.

மாவட்ட வாரியான பகுப்பாய்வில் (**இணைப்பு 4.7**) மாநிலத்தில் முழுமையற்ற வீடுகள் அதிகபட்சமாக கடலூர் மாவட்டத்திலும் (73 விழுக்காடு) அரியலூர் மாவட்டத்திலும் (67 விழுக்காடு) உள்ளன என்பதை வெளிப்படுத்தியது. மாறாக, முடிக்கப்பட்ட வீடுகளின் விழுக்காட்டில் ஈரோடு மாவட்டமும் (99 விழுக்காடு), அதை தொடர்ந்து திருப்பூர் மாவட்டமும் (94 விழுக்காடு) முதலிடத்தில் உள்ளன. மேலும் மாவட்ட வாரியான பகுப்பாய்வு **விளகப்படம் 4.5ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

விளகப்படம் **4.5:** முழுமையடையாத வீடுகளின் மாவட்ட வாரியான பகுப்பாய்வு




(ஆதாரம்: MoRDயிலிருந்து பெறப்பட்ட ஆவாஸ்சாஃப்ட் தரவு)

ஊராட்சி ஒன்றியங்களில் போதிய நிர்வாக பணியாளர்கள் இல்லாமை வீடுகளின் நிறைவு விகிதங்கள் மாறுபடுவதற்கான காரணங்களில் ஒன்றாகும். ஊராட்சி ஒன்றியங்கள், தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு (ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட DEOகள் தவிர) திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இது தோராயமாக மாநிலத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சமமாகவே இருந்தது. அனுமதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அனைத்து மாவட்டங்கள்/ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிர்வாக நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், திட்டத்தை செயல்படுத்த தேவையான பணியாளர்ககளை தெரிவுசெய்ய/அமர்த்த பயன்படுத்தப்படவில்லை.

வீடுகளின் அதிக ஒதுக்கீடு காரணமாக, சில மாதிரி ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்டங்களில் மற்ற ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்டங்களைக் காட்டிலும் அதிக பணிச்சுமை (7 முதல் 8 மடங்கு வரை) இருப்பதாகத் தணிக்கை கண்டறிந்தது. இது **பத்தி 5.6**ல் விவரிக்கப்பட்டபடி, திட்டத்தின் முழுமையான செயல்படுத்துதலை பாதித்தது.

GoI உதவி பெறுதலில் தாமதம் மற்றும் அதன் விளைவாக மாநிலப் பங்கை வெளியிடுவதில் தாமதம், பயனாளிகளின் தரப்பில் தாமதம், ஆள் பற்றாக்குறை போன்ற பல சிக்கல்கள் தாமதத்திற்கு பங்களித்தன என்று GoTN பதிலளித்தது

(மார்ச் 2022). இத்திட்டத்தை கள அளவில் செயல்படுத்துவதை வலுப்படுத்த, மாவட்ட அளவில் கூடுதல் பணியாளர்கள் வழங்கப்படும் என்றும் GoTN கூறியது. துறை சரியான நேரத்தில் நிதி பெறுதலுக்கும், பணியாளர்ககளுக்காக மானியத்தைப் பயன்படுத்துவதற்கும், UCகளை உரிய நேரத்தில் சமர்ப்பிக்க முயற்சிக்க வேண்டும்.

### 4.2.2 வீடுகள் கட்டுவதில் தாமதம்

2016-21ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட 5,08,641 வீடுகளில், 2021 மார்ச் வரை 2,79,950 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு வாரியாக மற்றும் கால வாரியாக முடிக்கப்பட்ட வீடுகள் **அட்டவணை 4.3ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4.3: ஆண்டு வாரியாக முடிக்கப்பட்ட வீடுகள்

| ஒப்பளிப்பு ஆண்டு | கட்டுமானம் முடிக்கப்பட்ட வீடுகள் | 1 வருடத்திற்குள் முடிக்கப்பட்டவை | தாமதமாக முடிக்கப்பட்டவை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1-2 ஆண்டுகள் | 2-3 ஆண்டுகள் | 3 ஆண்டுகளுக்கு மேல் | மொத்தம் |
| 2016-17 | 1,38,007 | 55,260 | 57,062 | 18,517 | 7,168 | 82,747 |
| 2017-18 | 92,606 | 61,685 | 23,889 | 6,862 | 170 | 30,921 |
| 2018-19 | 12,070 | 8,695 | 3,134 | 241 | 0 | 3,375 |
| 2019-20 | 37,267 | 29,951 | 7,316 | 0 | 0 | 7,316 |
| 2020-21 | Nil | Nil | Nil | Nil | Nil | Nil |
| மொத்தம் (விழுக்காடு) | **2,79,950** | **1,55,591** ***(55.57)*** | **91,401** ***(32.64)*** | **25,620** ***(9.15)*** | **7,338** ***(2.62)*** | **1,24,359** ***(44.43)*** |

(ஆதாரம்: MoRD ஆல் வழங்கப்பட்ட ஆவஸ்சஃப்ட் தரவு)

1,24,359 வீடுகள் (44.43 விழுக்காடு) நிர்ணயிக்கப்பட்ட ஒரு வருட காலக்கெடுவைத் தாண்டி கட்டி முடிக்கப்பட்டது..

கோவிட்-19 ஊரடங்கு, பொருட்கள் மற்றும் பணியாளர்கள் போன்றவை கிடைக்காததால் தாமதம் ஏற்பட்டது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022) மார்ச் 2020ல் தான் தொற்றுநோய் தோன்றியதால், தாமதத்திற்கு கோவிட்-19 காரணம் என்ற பதில் ஏற்கத்தக்கதாக இல்லை. ஏனெனில், தொற்று நோய் தோன்றுவதற்கு மிகவும் முன்னதாக அனுமதிக்கப்பட்ட வீடுகள் இன்னும் முடிக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

### 4.2.3 தவணைகள் விடுவிக்கப்பட்ட பின்னரும் வீடுகளின் கட்டுமானப் பணிகளைத் தொடங்காமை

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள், கட்டுமானப் பணிகளை 12 மாதங்களுக்குள் முடிப்பதற்கு வசதியாக முதல் தவணை உதவியை ஒப்பளிப்பு கிடைக்கப்பட்ட 15 நாட்களுக்குள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாதிரி எடுக்கப்பட்ட எட்டு மாவட்டங்களில் உள்ள பதிவேடுகளை ஆய்வு செய்ததில், மார்ச் 2021 நிலவரப்படி, 21,511 பயனாளிகள் **இணைப்பு 4.8ல்**

கொடுக்கப்பட்டுள்ள படி, முதல் மற்றும் இரண்டாவது தவணைகளைப் பெற்ற பிறகும் கூட வீடுகளைக் கட்டத் தொடங்கவில்லை. மார்ச் 2021 நிலவரப்படி, இந்தப் பயனாளிகளுக்கு ₹ 66.73 கோடி வழங்கப்பட்டுள்ளது என்று தணிக்கை கண்டறிந்துள்ளது. இதில், 9,845 பயனாளிகள் (46 விழுக்காடு) வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகியும் வீடு கட்டுமானப்பணி தொடங்கவில்லை.

JPVயின் போது, 917 உறுப்பினர்களில் 37 பேருக்கு, 12.56 இலட்சம் ரூபாய் தவணையாக செலுத்தப்பட்ட போதிலும், வீடுகள் கட்டும் பணி தொடங்கப்படவில்லை. நிதிப் பற்றாக்குறையை முக்கியக் காரணமாக பயனாளிகள் குறிப்பிடுகின்றனர்.

பயனாளிகளின் ஒத்துழையாமையினாலும் கோவிட்-19 காரணமாக பொருட்கள் கிடைக்காததாலும், இந்த 21,511 வீடுகளின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை என்று GoTN பதிலளித்தது. (மார்ச் 2022) தொற்றுநோய்க்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட இந்த வீடுகளை தொடங்காததற்கு கோவிட்-19ஐக் காரணம் கூறுவது தவறானது என்று தணிக்கை கண்டறிந்தது. மேலும், திட்ட வழிகாட்டுதல்களிலோ அல்லது திட்டத்தை செயல்படுத்துவதற்காக GoTN வழங்கிய உத்தரவுகளிலோ பயனாளிகள் நிதி தவறாகப் பயன்படுத்துவதை சரிபார்க்க எந்த ஏற்பாடும் இல்லை.

### 4.2.4 பயனாளிகளுக்குத் துறைசார்ந்த பொருள் வழங்கல்

PMAY-G வழிகாட்டுநெறிமுறைகள், வரையறுக்கப்பட்ட விலையில் சிமெண்ட், ஸ்டீல் போன்றவற்றை துறைவாரியாக பெறுவதற்கு வழிவகுக்கிறது மற்றும் வழங்கப்பட்ட பொருட்களின் விலையானது பயனாளிகளுக்கு வழங்கப்படும் மானியத்தில் இருந்து கழிக்கப்பட வேண்டும். மாதிரி ஊராட்சி ஒன்றியங்கள் 18ல், 16 ஊராட்சி ஒன்றியங்களில் சிமெண்ட், ஸ்டீல் மற்றும் கதவுகள்/ஜன்னல்கள், DRDA மூலம் மையப்படுத்தப்பட்ட முறையில் வாங்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டன. இருப்பினும், காரிமங்கலம் மற்றும் ஹரூர் ஆகிய இரண்டு மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில், பொருட்கள் வழங்கப்படாததாலும் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்வதற்கான பொருள் விலை அதிகமாக இருப்பதாலும் பயனாளிகளுக்கு அதிக நிதிச்சுமை ஏற்படுகிறது.

***சிமெண்ட் வழங்கல்:*** அம்மா சிமெண்டின்[6] விலை ஒரு மூட்டைக்கு ₹ 190 முதல் ₹ 216 வரையும், TANCEM சிமெண்டின் விலை ஒரு மூட்டைக்கு ₹ 266 முதல் ₹ 285 ஆகவும் இருந்தது. மாதிரி 18 ஊராட்சி ஒன்றியங்களில், அம்மா சிமென்ட் மூன்று பிளாக்குகளிலும் TANCEM சிமென்ட் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டும் வழங்கப்பட்டது.

DRDயின் அறிவுறுத்தல்களின்படி (அக்டோபர் 2019), அம்மா சிமென்ட் வழங்குவதற்கு PMAY-G பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அம்மா சிமென்ட் ஒரு மூட்டைக்கு ₹ 69-76 வரை மலிவானது. அம்மா சிமென்ட் வழங்கப்படாததால், ஒவ்வொரு பயனாளிக்கும் நிதிச் சுமை ₹ 7,200 முதல் 8,000 வரை கூடுதலாக இருந்ததாக, தணிக்கை மதிப்பீடு செய்தது. அம்மா சிமென்ட் தட்டுப்பாடு மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் கிடங்குகள் இல்லாத காரணத்தால்,

6 அம்மா சிமென்ட் வழங்கும் திட்டம் என்பது தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் மூலம் மானிய விலையில் சிமெண்டை கொள்முதல் செய்து குறைந்த விலையில் வழங்கும் GoTNன் முயற்சியாகும்.

பயனாளிகளுக்கு தேவையான அளவு அம்மா சிமெண்ட் வழங்க முடியவில்லை என்று துறை பதிலளித்தது. இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு- SOR 2015-16ஐ அடிப்படையாகக் கொண்டு ஒரு அலகிற்கு (UNIT COST) ₹ 1.70 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளதால், சிமெண்ட் விலையில் ஏதேனும் அதிகரிப்பு, வீடு கட்டுவதை சாத்தியமற்றதாக மாற்றிவிடும். இதனால் மேற்கூறப்பட்ட துறையின் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

*பிற பொருட்கள் வழங்கல்:*

- தொட்டியம் மற்றும் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியங்களில் 7.78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான இரும்பு கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போடப்பட்டுள்ளது.
- வானூர் ஊராட்சி ஒன்றியத்தில், ₹ 31.02 இலட்சம் மதிப்புள்ள 57.976 மெட்ரிக் டன் (MT) எஃகு மற்ற திட்டங்களுக்கு செலவிடப்பட்டது.
- மயிலாடுதுறை மற்றும் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியங்களில், PMAY-G பயனாளிகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்குவதற்காக, பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனாவுடன் (PMUY) ஒன்றிணைதல் கோரப்பட்டாலும், ₹ 7.73 இலட்சம் மதிப்புள்ள 1,546 சுல்லா அடுப்புகள் (Chullah stoves) DRDA ஒப்பளிப்பு பெறாமலேயே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இதற்கான தொகை பயனாளிகளின் RCC தொகைகளிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டது.

தணிக்கை கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் சரியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). கட்டுமானப் பொருட்களின் வழங்கல் இல்லாமல் குறைந்த விலையில் வீடு கட்டுவது சாத்தியமில்லை என்று தணிக்கை மீண்டும் வலியுறுத்துகிறது. இது பயனாளிகளின் சுமையை கணிசமாகக் குறைக்கும்.

### 4.2.5 கூட்டு நேரடி சரிபார்ப்பு - வசதிகளை வழங்குதல்

சோதனை சரிபார்க்கப்பட்ட VPகளில், 559 முடிக்கப்பட்ட வீடுகளில், **விளக்கப்படம் 4.5ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, JPV பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது .

விளக்கப்படம் 4.6: கட்டி முடிக்கப்பட்ட 559 வீடுகளில் உள்ள வசதிகள் பற்றிய விவரங்கள்




(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பிலிருந்து தரவு சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டது)

- SBM அல்லது MGNREGS உடன் இணைப்பதன் மூலம் 85 விழுக்காடு வீடுகளில் (478) கழிவறைகள் உள்ளன. 15 விழுக்காடு வீடுகளில் (81) கழிவறை இல்லை.
- LPG இணைப்புகள் 86 விழுக்காடு வீடுகளில் (480) கிடைத்தன. இருப்பினும், 15 விழுக்காடு குடும்பங்கள் மட்டுமே (84) PMUY உடன் இணைப்பதன் மூலம் LPG இணைப்பைப் பெற்றுள்ளன.
- 53 விழுக்காடு வீடுகளில் (294) குடிநீர் இணைப்புகள் உள்ளன, ஆனால் எந்த இணைப்புகளும் NRDWP/JJM உடன் இணைப்பதன் மூலம் வழங்கப்படவில்லை.
- 85 விழுக்காடு வீடுகளில் (477) மின்சார இணைப்புகள் உள்ளன. இந்த எல்லா நிகழ்வுகளிலும், DDUGJY உடன் எந்தவிதமான ஒருங்கிணைப்பும் இல்லாமல், வீடுகள் தாங்களாகவே மின் இணைப்புகளைப் பெற்றுள்ளன.

PMAY-G கீழ் கட்டப்பட்ட கணிசமான எண்ணிக்கையிலான வீடுகளில், மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்படாததால் அடிப்படை வசதிகள் கிடைக்காமற் போனதை தணிக்கை கண்டறிந்தது.

கட்டப்பட்ட வீடுகளுக்கு அடிப்படை வசதிகளை மற்ற திட்டங்களுடன் இணைப்பதன் மூலம் வழங்க அனைத்து மாவட்டங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

## 4.3 முடிவுரை

SECC தரவுகளின் பெயர் பகுதியில் "தெரியாத" என்ற உள்ளீட்டை தவறாகப் பயன்படுத்தியதன் மூலம், தகுதியற்ற பயனாளிகளுக்கு மொத்தம் 3,354 வீடுகள்[7] முறைகேடாக அனுமதியளிக்கப்பட்டதாக மாதிரித் ஊராட்சி ஒன்றியங்களில் தணிக்கை கண்டறிந்தது. இதில் முறைகேடாக ₹ 50.28 கோடி

[7] ஒப்பளிப்பின் போது 1,547 "தெரியாதவர்" என்பதைத் தகுதியற்ற நபருடன் மாற்றுவதன் மூலம் (பத்தி 4.1.1)+807 "தெரியாதவர்"க்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் வங்கிக் கணக்கை மாற்றுவதன் மூலம்(பத்தி 4.1.2)+ அனைத்து குடும்ப உறுப்பினர்களும் "தெரியாத" என்ற உள்ளீடு கொண்ட 1,000 வழக்குகள் ,இவை மூலம் முழு மாநிலத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட தரவு பகுப்பாய்வு ஆகும்(பத்தி 4.1.4).

செலவழிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட 5.09 இலட்சங்களில் 1.13 இலட்சம் வீடுகள், நிர்ணயிக்கப்பட்ட ஒரு வருடத்திற்கு மேல் முடிக்கப்படாமல் இருந்தது. துறைசார்ந்த விலையில் சிமென்ட், எஃகு போன்றவற்றை வழங்குவதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் பயனாளிகளுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தியது.

## 4.4 பரிந்துரைகள்

- SECC தரவின் பெயர் உள்ளீட்டில் “தெரியாத” என்ற நேர்வுகளை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம், சந்தேகத்திற்குரிய முறைகேடான ஒப்பளிப்புகள் மற்றும் பணம் செலுத்துதல் தொடர்பான சிக்கலை GoTN சரிசெய்ய வேண்டும். மேலும் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் சரிசெய்தல் நடவடிக்கைகளைத் தொடங்க, மாநில அளவில் முன்னிலைப்படுத்தப்பட்ட சிக்கல்களை விரிவாக ஆய்வு செய்ய உத்தரவிட வேண்டும்.
- பயனாளிகளின் தரவு எந்தப் பிழையும் இல்லாமல் பதிவேற்றப்பட வேண்டும். வங்கிக் கணக்குகள், வேலை அட்டைகள் போன்றவற்றை இணைப்பது உரிய கவனத்துடன் செய்யப்பட வேண்டும். தரவு உள்ளீடு, சரிபார்ப்பு மற்றும் அங்கீகாரம், ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட மூன்று நிலை அதிகாரிகளும் பிழைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.
- பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காக கள ஊழியர்களிடையே கடமைகளை தெளிவாகப் பிரிப்பது உறுதி செய்யப்பட வேண்டும். பயனாளிகளை அடையாளம் காணுதல், கட்டுமானத்தின் நிலைகளை ஆய்வு செய்தல் மற்றும் ஆய்வு பதிவுகளை சரிபார்த்தல் ஆகியவை நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.
- பயனாளிகள் சரியான நேரத்தில் வீடுகளை முடிக்க வசதியாக, துறைசார்ந்த விலையில் சிமென்ட், ஸ்டீல் போன்றவற்றை உரிய நேரத்தில் வழங்குவதை GoTN உறுதி செய்ய வேண்டும்.

# அத்தியாயம் V

## கண்காணிப்பு, உள் கட்டுப்பாடு மற்றும் குறைகள் நிவர்த்தி செய்தல்

## அத்தியாயம் V

## கண்காணிப்பு, உள் கட்டுப்பாடு மற்றும் குறைகள் நிவர்த்தி செய்தல்

### 5.1 திட்ட மேலாண்மை அலகு செயல்பாட்டில் உள்ள குறைபாடுகள்

திட்டத்தை செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகளை மேற்கொள்வதற்காக பிரத்யேக மாநில திட்ட மேலாண்மை அலகு (State Programme Management Unit PMU) அமைப்பதை திட்ட வழிகாட்டுதல்கள் ஊர்ஜிக்கின்றன. மாநில PMU, மாநில நோடல் அதிகாரியால் வழிநடத்தப்பட வேண்டும் மற்றும் நியமிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்த பணியாளர்களால் ஆதரிக்கப்பட வேண்டும். இதேபோன்ற ஏற்பாடுகள் மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலான PMUக்களிலும் பின்பற்றப்பட வேண்டும்.

மாநில, மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலான PMUக்கள் அமைக்கப்பட்டதாக துறை தெரிவித்துள்ளது. ஆயினும், நிதி விவகாரங்கள் மற்றும் சமூக அணிதிரட்டல் நிபுணர் போன்ற முக்கிய பதவிகள் காலியாக உள்ளதையும் மிக குறைந்த பணியாளர்களுடன் மட்டுமே மாநில PMU செயல்படுவதையும் தணிக்கை கண்டறிந்தது. மாநில ஒருங்கிணைப்பாளர், ஊரக வளர்ச்சிக்கான கூடுதல் இயக்குநர் (வீட்டுவசதி) மற்ற மாநில வீட்டுத் திட்டங்களையும் கவனித்துக்கொள்கிறார். மேலும், பயிற்சி ஒருங்கிணைப்பாளர், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் இருப்பதாகக் கூறப்பட்டது. மாதிரி மாவட்டங்கள்/ஊராட்சி ஒன்றியங்களில், மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவிலான PMUக்கள் அமைக்கப்படவில்லை என்பதையும், வழக்கமான ஊழியர்கள், சில ஒப்பந்த ஊழியர்களுடன், PMUகளின் செயல்பாடுகளை மேற்கொள்வதையும் தணிக்கையில் கண்டறிந்தது.

மாநில PMUன் செயல்பாட்டில் உள்ள திறமையின்மை பின்வரும் இன்னல்களுக்கு பங்களித்தது:

- **GoI மானியம் பெறப்படாதது:** பயன்பாட்டுச் சான்றிதழ், தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள் மற்றும் செலவின அறிக்கைகள் தவறாகத் தயாரிக்கப்பட்டு, தாமதமாகச் சமர்ப்பிக்கப்பட்டதால், 2018-19 ஆம் ஆண்டிற்கான GoI மானியங்கள் (I தவணை) தாமதமாக பெறப்பட்டது மற்றும் 2018-19 (II தவணை) மற்றும் 2019-20 ஆண்டுகளுக்கான மானியங்கள் வழங்கப்படவில்லை. மொத்தத் ஒப்புதல்களுக்கான GoI நிதியில் நாற்பது விழுக்காடு, மார்ச் 2021 வரை பெறப்படவில்லை.
- **யூனிட் விலை அதிகரிப்பு:** மாநில PMU, செயல்பாட்டில் இருந்தால், திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட யூனிட் விலையை அதிகரிக்க MoRD க்கு முன்மொழிந்திருக்கலாம். தமிழகத்தில் பொதுப்பணித்துறையால் கடினமான பகுதிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ள பல இடங்கள் மாநிலத்தில் உள்ளதாக தணிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரிடம் யூனிட் விலையை

உயர்த்துவதற்கான முன்மொழிவு அளிக்கப்பட்ட போதிலும், MoRDயிடம் இதற்கு தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, மேலும் மாநிலம் முழுவதும் அதே யூனிட் விலையான ₹ 1.20 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டது. மாநில PMU, அதன் சட்டப்பூர்வ செயல்பாடுகளில் ஒன்றை திறம்பட மேற்கொள்ளவில்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

- **மாநில மூல கணக்கு மேலாண்மை (SNA):** மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகளுக்கு திட்ட நிதியிலிருந்து பணம் செலுத்துவதற்காகவும் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் நிர்வாக நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவுகளுக்காவும் DRDல் SNA பராமரிக்கப்படுகிறது. இதற்கு, போதுமான உதவிப் பணியாளர்கள் தேவை. போதிய ஆதரவு பணியாளர்கள் இல்லாததால், SNAக்கான பணப் பதிவேட்டில், வரவு மற்றும் செலவினங்கள் மாதத்திற்கு தலா ஒரு உள்ளீடாக மட்டுமே பதிவு செய்யப்பட்டது. இதன், விளைவாக, வங்கி அறிக்கையிலும் பணப்பதிவேட்டிலும் விவரிக்கப்படாத வரவுகள்/பற்றுகள் உள்ளது கண்டறியப்பட்டது. இது, முறைகேடுக்கான வாய்ப்பை வழங்குகிறது.

இந்த அறிக்கையின் முந்தைய அத்தியாயங்களில், பயனாளிகளைத் தேர்வு செய்தல், பயனாளிகளுக்கான ஆதரவு சேவைகளை வழங்குதல் மற்றும் திட்டத்தின் ஒட்டுமொத்த அமலாக்கம் தொடர்பான சிக்கல்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

மாநில PMU மற்றும் மாவட்ட PMUக்கள் முறையே இயக்ககம் மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட விரிவான முன்மொழிவு தயாரிக்கப்படுகிறது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

## 5.2 குழுக்கள் அமைக்கப்படாமை

திட்ட வழிகாட்டுதல்களின்படி, வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வைக்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். குழுக்கள் AAPயின் பல்வேறு கூறுகளை செயல்படுத்தும் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை கொண்டிருக்க வேண்டும். மாநில அளவிலான குழுவிற்கு தலைமைச் செயலாளர் தலைமை தாங்குவார் மற்றும் குழுவின் அமைப்பு அரசால் தீர்மானிக்கப்படும். இந்தக் குழு வருடத்திற்கு இரண்டு முறையாவது கூடும்.

இதேபோல், மாவட்ட அளவிலான குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமை தாங்குவார்கள் மற்றும் மாவட்ட அளவில் உள்ள குழுக்களின் அமைப்பு மாநில அரசால் தீர்மானிக்கப்படும். குழுக்கள் வருடத்தில் ஒவ்வொரு காலாண்டிலும் கூடும்.

மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்படவில்லை என்று தணிக்கை, DRD மற்றும் மாதிரி மாவட்டங்களின் பதிவுகளின் ஆய்விலிருந்து கண்டறிந்தது.

மேற்கண்ட குழுக்கள் அமைக்கப்படும் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

## 5.3 கண்காணிப்பில் பெரும் முறைகேடுகள்

கட்டுமானத்தின் கட்டம் வாரியான முன்னேற்றத்தின் உண்மை நிலையை கண்காணிக்க, ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேற்பார்வையாளர்கள் எடுக்கும் புவிசார் குறிப்பிடப்பட்ட மற்றும், தேதி மற்றும் நேர முத்திரையிடப்பட்ட புகைப்படங்களை "ஆவாஸ்சாஃப்ட்" மற்றும் "ஆவாஸ்ஏப்" போர்ட்டல்களில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். "ஆவாஸ்சாஃப்ட்" போர்ட்டலில் பதிவேற்றம் செய்யப்பட்ட கட்டுமானங்களின் பல்வேறு நிலைகளில் செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையிலேயே தவணைகள் வழங்கப்படுகின்றன.

MoRDயிலிருந்து பெறப்பட்ட தமிழ்நாட்டிற்கான PMAY-G தரவு மற்றும் "ஆவாஸ்சாஃப்ட்" போர்ட்டலில் பதிவேற்றப்பட்ட ஆய்வுத் தரவு ஆகியவை தணிக்கை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் கொடுக்கப்பட்டுள்ளபடி பல்வேறு வகையான பெரும் முறைகேடுகள் கண்டறியப்பட்டன. **(அட்டவணை 5.1)**.

**அட்டவணை 5.1: கண்காணிப்பு இல்லாததால் ஏற்படும் முறைகேடுகள்**

| வ.எண் | கண்டறியப்பட்ட முக்கிய முறைகேடுகள் | சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் / வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தவணைகளை வழங்குவதற்கு கட்டுமானத்தின் நிலை வாரியான புகைப்படங்களை முறைகேடாக சித்தரிப்பதின் மூலம் பதிவுகளைத் தவறாக்குதல் | மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் 378 |
| 2 | நிலை வாரியான புகைப்படங்களை பு விசார் குறியீடு செய்வதில் உள்ள முரண்பாடுகள் | |
| | (அ) கட்டுமான நிலை வாரியான புகைப்படங்களை வெவ்வேறு இடங்களில் எடுத்தல் | அனுமதிக்கப்பட்ட 5.09 இலட்சம் வீடுகளில் 21,492 வீடுகள் (4.23 விழுக்காடு) |
| | (ஆ) ஒரே இடத்தில் (ஊராட்சி ஒன்றிய அலுவலகம்) எடுக்கப்பட்ட பல வீடுகளின் புகைப்படங்கள் (1000க்கும் மேற்பட்டவை) | அனுமதிக்கப்பட்ட 5.09 லட்சம் வீடுகளில் 57,837 வீடுகளின் புகைப்படங்கள் (11.37 விழுக்காடு). |
| 3 | புகைப்படங்களை நேர முத்திரையிடுதலில் உள்ள முரண்பாடுகள் | மாநிலத்தில் நிலைவாரியாக எடுக்கப்பட்ட 21.30 லட்சம் புகைப்படங்களில் சம்பந்தப்பட்ட 7,90,505 புகைப்படங்கள் (37 விழுக்காடு). |

(ஆதாரம்: ஆவாஸ்சஃப்ட் தரவுகளின் தணிக்கை பகுப்பாய்வு)

கண்காணிப்பின் குறைபாடுகள், தவறான பதிவுகள் உருவாக்கப்பட்டு தவணை முறையில் உதவி பெறுவதற்கு வழிவகுத்தமை, பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

### 5.3.1 கட்டுமானத்தின் நிலைகளை கண்காணிக்காமை

ஆவாஸ்சாஃப்டில் பதிவேற்றப்பட்ட கட்டுமான நிலை வாரியான புகைப்படங்களுக்கு ஏற்ப நிலை வாரியான தவணைகள் செலுத்தப்பட வேண்டும். மாதிரி ஊராட்சி ஒன்றியங்களில் பதிவேற்றப்பட்ட ஆவாஸ்சாஃப்ட் புகைப்படங்களின் சோதனைச் சரிபார்ப்பில், தவணைகளைப் பெறுவதற்கு நிலை வாரியான புகைப்படங்களைத் தவறாகச் சமர்ப்பித்ததால் 378 பதிவுகள்

தவறானதாக இருப்பது தெரியவந்தது. இவற்றில் கிழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்தில், நாகப்பட்டினம் DRDAஆல் அடையாளம் காணப்பட்ட 163 இனங்களும் அடங்கியுள்ளன. **(இணைப்பு 5.1)**.

பதிவுகளின் பொய்மைப்படுத்தல், மற்றவற்றிற்கு இடையே, பின்வரும் வகையான தவறுகளை உள்ளடக்கியது:

(i) ஆவாஸ்சாஃப்ட் போர்ட்டலில் கட்டி முடிக்கப்படாத வீடுகள் பதிவேற்றப்பட்டன, ஆனால், கட்டுமானம் பூர்த்தி செய்யப்பட்டதாகக் காட்டப்பட்டு முழுப் பணம் செலுத்தப்பட்டது.

(ii) ஒரே வீட்டின் கட்டுமானத்தின் புகைப்படம், வெவ்வேறு பயனாளிகளுக்கு பதிவேற்றப்பட்டது.

(iii) ஒரு வீட்டின் வெவ்வேறு கட்டுமான நிலைகளுக்கு வெவ்வேறு வீடுகளின் புகைப்படங்கள் பதிவேற்றப்பட்டன.

(iv) கட்டுமானத்தின் அனைத்து நிலைகளுக்கும் ஒரே புகைப்படம் பதிவேற்றப்பட்டது.

JPV நடத்தப்பட்ட போது, 917 உறுப்பினங்களில் 103ல்[1], கட்டுமானத்தின் நிலை தவறாகக் குறிப்பிடப்பட்டது கண்டறியப்பட்டது. மேற்கூறியவற்றில் 21 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வீடுகள் கட்டப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது; ஆனால் ஆவாஸ்சாஃப்டில் பதிவேற்றப்பட்ட தவறான படங்களின் அடிப்படையில் ரூ. 25.20 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும், இந்த வீடுகளின் நிலை ஆவாஸ்சாஃப்டில் 'முடிந்தது' எனக் காட்டப்பட்டது. JPVன் போது அடையாளம் காணப்பட்ட விளக்க வழக்குகள் (cases) விளக்கப்படம் 5.1ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 5.1: திரு. கதிர்வேல் கல்லணை (TN2410331), T.V.நல்லூர் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம்**



முடிக்கப்பட்ட நிலைக்கான கட்டணத்தை வெளியிட ஆவாஸ்சாஃப்டில் பதிவேற்றப்பட்ட புகைப்படத்தின்படி



JPV நேரத்தில் தளத்தில் புவிசார் குறியீடு செய்யப்பட்ட உண்மையான நிலை

(ஆதாரம்: கூட்டு நேரடி சரிபார்ப்பு)

மேற்கூறப்பட்ட அனைத்து உறுப்பினங்களிலும், கட்டுமானப் பணிகளின் நிலைகளைத் தவறாக சமர்ப்பித்தமை, தவணைகள் முறையற்ற வகையில் வழங்கப்படுதலுக்கு ஏதுவாக இருந்ததை தணிக்கை கண்டறிந்தது. இச்செயலுக்கு, தவறான புவிசார் குறியிடப்பட்ட புகைப்படங்களை எடுத்தல், தவணைகளை வெளியிடுவதற்குமுன் புகைப்படங்களை சரிபார்க்காமை மற்றும் சில

[1] தவணைகள் செலுத்தப்பட்டன; கட்டுமானம் தொடங்கப்படவில்லை -IV (21), III (8), II (9) மற்றும் I (11); அடித்தளநிலைக்கு செலுத்தப்பட்ட தவணைகள் -IV (7), III (2)) மற்றும் II (10); பீடம் நிலைக்கு செலுத்தப்பட்ட தவணைகள் -IV (20) மற்றும் III (15).

பயனாளிகளின் வசதிக்காக சந்தேகத்திற்குரிய மோசடியான முறையில் பணம் வழங்கப்பட்டமை போன்றவற்றில் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் தங்கள் பணிகளைச் செய்யத் தவறியதே காரணமாக கருதப்படுகிறது.

### 5.3.2 நிலை வாரியான புகைப்படங்களின் புவிசார் குறியீட்டில் முரண்பாடுகள்

**இணைப்பு 5.2ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, கட்டப்பட்ட வீடுகள் கட்டுமானத்தின் பல்வேறு கட்டங்களைக் குறிக்கும் பொருத்தமான வண்ணக் குறியீட்டுடன் புவிசார் குறியீடு செய்யப்பட்டன. ஒரு VPல் உள்ள PMAY-G வீட்டிற்கு, அதிகபட்சம் இரண்டு தனித்துவமான இடங்கள் இருக்கக்கூடும். அவை, ஒன்று பழைய வீட்டிற்கும் மற்றொன்று முன்மொழியப்பட்ட வீடும், அதைத் தொடர்ந்து அதே இடத்தில் கட்டுமானப் பணிகளுக்கும் ஆன இடம். மார்ச் 2021 நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட 5,08,641 PMAY-G வீடுகள் புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளன. PMAY-G தொடர்பான தரவை பகுப்பாய்வு செய்யும் போது தணிக்கை மூன்று வகையான முரண்பாடுகளைக் கண்டறிந்தது, அவை கீழே விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன:

#### *(i) இரண்டிற்கு மேற்பட்ட ஒருங்கிணைப்புக்கள் உள்ள வீடுகள்*

எந்த வீடும் இரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியும் பொருட்டு தணிக்கை PMAY-G தரவைச் சரிபார்த்த விவரங்கள் **அட்டவணை 5.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 5.2: இரண்டு ஆயங்களுக்கு மேல் உள்ள வீடுகள்

| தனிப்பட்ட இடங்களின் எண்ணிக்கை | PMAY-G வீடுகள் | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | 4,00,288 | ஏற்கனவே உள்ள வீட்டை இடித்துவிட்டு அதே இடத்தில் வீடு கட்டப்பட்டிருக்கலாம் |
| 2 | 86,861 | தற்போதுள்ள வீட்டிலிருந்து வேறு இடத்தில் வீடு கட்டப்படுவதற்கான சாத்தியமானவை |
| 3 | 18,140 | 21,492 இனங்களில், கட்டுமானத்தின் பல்வேறு கட்டங்களுக்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்கள் காட்டப்பட்டுள்ளன. இதற்கு சாத்தியமில்லை. |
| 4 | 3,196 | |
| 5 | 155 | |
| 6 | 1 | |
| மொத்தம் | **5,08,641** | |

(ஆதாரம்: MoRDஆல் வழங்கப்பட்ட ஆவாஸ்சாஃப்ட் தரவு)

21,492 இனங்களில், இரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் வீடுகளுக்கு புவிசார் குறியீடு செய்வது சாத்தியமில்லாத ஒன்றாகும். இந்த 21,492 இனங்களில் புவிசார் குறியீடு செய்யப்பட்ட தரவுகள் வழிகாட்டுதல்களின்படி உள்ளதா என்று சரிபார்க்காமல் மொத்தம் ₹ 247.78 கோடி வழங்கப்பட்டதாக தணிக்கை கண்டறிந்துள்ளது.

#### *(ii) ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளைக் கொண்ட ஒருங்கிணைப்புக்கள்*

பொதுவாக, ஒரு இடத்தின் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒற்றை PMAY-G வீட்டை மட்டுமே குறிக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகளின்

படங்கள் ஒரே ஒருங்கிணைப்பில் இருக்கக்கூடாது. PMAY-G தரவைச் சோதனை சரிபார்ப்பு செய்ததில் பல நேர்வுகளில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகள் ஒரே ஒருங்கிணைப்புகளில் அமைந்திருப்பதை தணிக்கை கண்டறிந்தது. மேலும் சரிபார்த்ததில், 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் குறைந்தபட்சம் 57,837 மாறுபட்ட வீடுகளின் படங்கள் புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளமை **(இணைப்பு 5.3)** அதிகாரிகள் வீட்டை நேரடி ஆய்வு செய்து புகைப்படம் எடுப்பதற்குப் பதிலாக, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் இருந்தே புவிசார் குறியீடு[2] செய்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இது திட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த முக்கியமான உள் கட்டுப்பாட்டு நெறிமுறையை முறியடிகின்றது.

வரைபடத்தில் புவிசார் குறியீடு செய்யப்பட்ட இடங்களின் விவரங்கள் **இணைப்பு 5.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

### *(iii) உண்மையான வீட்டின் இருப்பிடங்களுடன் தொடர்பில்லாத தொலைதூர இடங்களில் புவிசார் குறியீடு*

மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தொலைதூர இடங்களில் புவிசார் குறியீடு செய்யப்பட்ட வீடுகளின் விவரங்கள் தணிக்கையில் கண்டறிந்தவாறு கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

- திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள 110 வீடுகளின் புவிசார் குறியீடானது, மாநிலத்திற்க்கு உள்ளாகவே தொலை தூரங்களில் உள்ள இடங்களில் செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, இம்மாவட்டங்களில் சில வீடுகளின் புகைப்படங்கள், உதகமண்டலம் (7), எழும்பூர் ரயில் நிலையம் அருகில் (98), மற்றும் DRD அலுவலகம், சைதாப்பேட்டை (5) ஆகிய இடங்களில் புவிசார் குறியீடு செய்யப்பட்டன.
- 35 இனங்களில், இடங்கள் மாநிலத்திற்கு வெளியே புவிசார் குறியீடு செய்யப்பட்டன. எ.கா., உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், அசாம், புது தில்லி, உத்தரகண்ட், மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், ஜார்கண்ட், முதலியன. இவை, **இணைப்பு 5.5ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி 962 முதல் 2,429 கிலோமீட்டர் வரையிலான தொலைவில் உள்ளவை ஆகும்.

தொலைதூர இடங்களில் புவிசார் குறியீடு செய்யப்பட்டதற்கான எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

[2] ஏற்கனவே உள்ள வீடுகளின் பல்வேறு நிலைகளின் இருப்புப் படங்களிலிருந்து புகைப்படம் எடுப்பதன் மூலம் புவிசார் குறியீடு செய்யப்பட்டது.

**விளக்கப்படம் 5.2: உதகமண்டலத்தில் உள்ள ஒரு இடத்தில் வீட்டின் புகைப்படங்களுடன் புவிசார் குறியீடு செய்யப்பட்டது**





**திருமதி. முனியம்மாள் (TN1194827), பெருங்களத்தூர் VP, செய்யார் பிளாக், திருவண்ணாமலை மாவட்டம்**

**உதகமண்டலத்தில் உள்ள இடத்தை காட்டுகிறது**

(ஆதாரம்: ஆவாஸ்சாஃப்ட் தரவுகளின் தணிக்கை பகுப்பாய்வு)

**விளக்கப்படம் 5.3: எழும்பூர் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள வீட்டின் புகைப்படங்களுடன் இருப்பிடம் புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளது**





**திருமதி கிருஷ்ணவாணி மோகன்(TN 1206200), கீழ்வெள்ளியூர் VP, தெள்ளர் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம்**

**இந்த இடம் எழும்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ளது**

(ஆதாரம்: ஆவாஸ்சாஃப்ட் தரவுகளின் தணிக்கை பகுப்பாய்வு)

இதே போன்ற எடுத்துக்காட்டு இனங்கள், **இணைப்பு 5.6ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 5.4: சிவகங்கை மாவட்டத்தில் கட்டப்பட்ட வீடு, சண்டிகரில் புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளது**




**(திரு சி வி சின்னதம்பி (TN 1275886), ஒக்குப்பட்டி ஊராட்சி, சிவகங்கை மாவட்டம்)**

(ஆதாரம்: ஆவாஸ்சாஃப்ட் தரவுகளின் தணிக்கை பகுப்பாய்வு)

இதே போன்ற எடுத்துக்காட்டு இனங்கள், **இணைப்பு 5.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர்பில்லாத இடங்களில் செய்யப்பட்ட தவறான புவிசார் குறியீடு மேற்பார்வையாளர்களால் சரிபார்க்கப்படாததால், ஆவாஸ்சாஃப்டில் சேர்க்கப்பட்டது. திட்ட வழிகாட்டுநெறிமுறைகள், 10 விழுக்காடு வீடுகள், ஊராட்சி ஒன்றியம் அளவிலான பொறியாளர்களாலும், இரண்டு விழுக்காடு, வீடுகள் மாவட்ட அளவிலான நிர்வாகப் பொறியாளர்களாலும் சரிபார்ப்பதற்கு வழிவகுக்கிறது.

கண்காணிப்பில் உள்ள குறைபாடுகள், புவிசார் குறியீடு மற்றும் நேர முத்திரையின் மூலம் மின்-ஆளுமை செய்யும் நோக்கத்தை முறியடித்தது மட்டுமல்லாமல், தகுதியற்ற நபர்களுக்கு வீடுகள் மற்றும் தவணைகளை வழங்குவதில் சந்தேகத்திற்குரிய முறைகேடான ஒப்பளிப்புக்கும் அவற்றை தவறாகப் பயன்படுத்தியது. இத்திட்டத்தின் அமலாக்கத்தின் போது இந்த பெரும்பான்மையான உள் கட்டுப்பாட்டு முறைகேடு தடையின்றித் தொடர்ந்தது.

### 5.3.3 புகைப்படங்களின் நேர முத்திரையில்[3] உள்ள முரண்பாடுகள்

ஆய்வின் போது எடுக்கப்பட்ட அனைத்து படங்களும் நேர முத்திரையிடப்பட வேண்டும். மேற்பார்வையாளர் வீட்டை ஆய்வு செய்து ஆய்வு விவரங்களை ஆவாஸ்சாஃப்டில் பதிவேற்றுவார். இருப்பினும், தொடர்பான பதிவேடுகளை சரிபார்க்கும் போது பின்வரும் முரண்பாடுகளை தணிக்கை கண்டறிந்தது.

2016-21ஆம் ஆண்டில், ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட 5,08,641 வீடுகளுக்கு 21,29,709 புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, புவிசார் குறியீடு செய்யப்பட்டு, நேர முத்திரையிடப்பட்டது. தணிக்கை இந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்ட தேதி/நேரம் மற்றும் புவிசார் குறியீடு விவரங்களை சரிபார்த்ததில், 7,90,505 புகைப்படங்கள் (37 விழுக்காடு) ஆவாஸ்சாஃப்டில் இரவில் (இரவு 7 மணி முதல் காலை 6 மணி வரை) நேர முத்திரையிடப்பட்டிருப்பதைக் கண்டறிந்தது. மேலும், JPVக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 917 வீடுகளுக்குப் பதிவேற்றப்பட்டப் புகைப்படங்களை தணிக்கை சரிபார்த்ததில், ஆவாஸ்சாஃப்டில் இரவில் நேர முத்திரையிடப்பட்ட 720 நேர்வுகளின் புகைப்படங்கள் உண்மையில் பகலில் எடுக்கப்பட்டவை என்பதைக் கண்டறிந்தது.

[3] நேர முத்திரை என்பது ஒரு ஆவணத்தின் உருவாக்கம் மற்றும் மாற்றியமைக்கும் நேரத்தைப் பாதுகாப்பாகக் கண்காணிப்பது ஆகும்.

விளக்கப்படம் 5.5: திருமதி. விஜயா (TN1180342), பெருங்களத்தூர், VP, செய்யார் ஊராட்சி ஒன்றியம் திருவண்ணாமலை மாவட்டம்

22/10/2020 அன்று 01:38:00 மணிக்கு கூரை வார்ப்பு ஆய்வு செய்யப்பட்டது



விளக்கப்படம் 5.6: சுப்பிரமணியன் ராமலிங்கம் (TN2074880), ஆதனக்குறிச்சி VP, முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ராமநாதபுரம் மாவட்டம் 01/03/2018 அன்று 01:44:00 அளவில் கட்டிட முடிவு நிலை ஆய்வு செய்யப்பட்டது.



(ஆதாரம்: ஆவாஸ்சாஃப்ட் தரவுகளின் தணிக்கை பகுப்பாய்வு)

மேற்கூறப்பட்ட பல சந்தர்ப்பங்களில், ஆய்வு நேரத்தில் தரவுகளை பதிவேற்றுவதற்குப் பதிலாக, அதிகாரிகள் வீடுகளின் இருப்புப் படங்களையே படம் பிடித்திருக்கலாம் என்று தணிக்கை கண்டறிந்தது. கீழே கொடுக்கபட்டுள்ள எடுத்துக்காட்டு நேர்வுகளிலிருந்து இது தெரிந்து கொள்ளப்படுகிறது.

விளக்கப்படம் 5.7: திருமதி. ஆனந்தி, (TN 1037886), ஆனந்தாண்டவபுரம் VP,



மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்

விளக்கப்படம் 5.8: திருமதி. உத்திராபதி அல்லியம்மாள், (TN 1768596) இஞ்சிக்கொல்லை



VP, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்

(ஆதாரம்: ஆவாஸ்சாஃப்ட் தரவுகளின் தணிக்கை பகுப்பாய்வு)

இதுபோன்ற இனங்களில் கூட, பயனாளிகளுக்குப் பணம் செலுத்தப்பட்டமை, மாநிலத்தில் நடைமுறையில் உள்ள கண்காணிப்பு வழிமுறைகளின் மீது கேள்விகளை எழுப்புவதாக உள்ளது. தவறான ஆய்வுப் பதிவுகளால், திட்டத்தின் சரிபார்ப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு பயனற்றதாகிவிட்டது. இதனால் கீழே கொடுக்கப்பட்டுள்ள விளைவுகள் ஏற்படலாம் என அறியப்படுகிறது:

- பயனாளிகள் வீட்டின் கட்டுமானத்தில் எந்த முன்னேற்றத்தையும் காட்டாமல் தவணைகளைப் பெற வசதி செய்தல்,
- வீடுகளைக் கட்டாமல் தவணைகளை தவறாகக் கோருதல்,
- PMAY-G அல்லாத நபர்களுக்கு வீடுகளை மாற்றுதல்.

**இணைப்பு 5.3**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, 19 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலேயே[4] 57,837 வீடுகளின் புகைப்படங்கள் புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

கண்காணிப்பாளர்களின் தவறான புவிசார் குறியீடு, துணை BDO/BDO/ பொறியாளர் ஆகியவர்களால் சரிபார்க்கப்படவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது. இவர்கள், FTOகளை உருவாக்கும் முன்பே அவற்றைப் பரிசோதிக்க வேண்டும்.

அனைத்து மாவட்டங்களும் நிலை வாரியான புகைப்படங்களின் புவிசார் குறியிடலைச் சரிபார்த்து, DRDக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). அறிக்கையின் அடிப்படையில், திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற முறைகேடுகள் நடக்காமல் இருப்பதை துறை உறுதி செய்யும் என்றும் GoTN தெரிவித்துள்ளது. மேலும், தவறான புவிசார் குறியீடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சரிபார்க்கப்படும் என்றும், முறையற்ற பணம் வழங்குதல் குறித்த பொறுப்பு மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் GoTN தெரிவித்துள்ளது.

## 5.4 உள் கட்டுப்பாடுகளின் போதுமான அளவு

### 5.4.1 பரிந்துரைக்கப்பட்டபடி ஆய்வுகள் நடத்தப்படாமை

திட்ட வழிகாட்டுநெறிமுறைகள்படி, ஊராட்சி ஒன்றிய அளவில் 10 விழுக்காடு வீடுகளும், மாவட்ட அளவில் இரண்டு விழுக்காடு வீடுகளும் ஆய்வு செய்யப்பட நிபந்தனை விதிக்கிறது. ஆயினும், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்டங்களில் இத்தகைய ஆய்வுகளுக்கான பதிவுகள் எதுவும் இல்லை. மேலும், இது தொடர்பாக ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து இதுவரை (மார்ச் 2022) பதில் பெறப்படவில்லை.

முந்தைய அத்தியாயங்களில் விவரிக்கப்பட்ட தணிக்கை முடிவுகள், அத்தகைய ஆய்வுகள் நடத்தப்படவில்லை என்பதை தெளிவாக நிரூபிக்கின்றன. இத்திட்டத்தின் ஆய்வு செயல்முறை மேற்கொள்ளப்பட்டிருந்தால், தவறான புவிசார் குறியீடு, பதிவேற்றம் செய்யப்பட்ட படங்களில் உள்ள முரண்பாடுகள் போன்ற பல முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, சரி செய்திருக்கக்கூடும் என்று தணிக்கை கருத்து தெரிவிக்கிறது.

### 5.4.2 சமூக தணிக்கை

அனைத்து அம்சங்களையும் கட்டாயமாக மதிப்பாய்வு செய்வதை உள்ளடக்கிய சமூக தணிக்கை, ஒவ்வொரு VPயிலும் ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும். மேலும், MGNREGSன் கீழ் மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ள சமூக தணிக்கை பிரிவுகள் PMAY-Gன் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படும் பொருட்டு இணைக்கப்பட வேண்டும். சமூக தணிக்கை பிரிவுகளால் பல்வேறு நிலைகளில் அடையாளம் காணப்பட்ட வளவாளர்கள் (Resource Persons) கிராம சபையுடன் ஈடுபட்டு சமூக தணிக்கையை நடத்தலாம்.

மாநிலத்தின் அனைத்து VPகளிலும் சமூக தணிக்கை நடத்தப்படவில்லை. வழிகாட்டுநெறிமுறைகளில் கூறப்பட்டுள்ளபடி, MGNREGS சமூக தணிக்கைக்

---

4 1,000க்கும் மேற்பட்ட வீடுகளின் புகைப்படங்கள் புவிசார் குறியீடு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மட்டுமே இதில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுக்களை இணைத்தல் அல்லது NRLM/NGOகள் போன்றவற்றின் கீழ் SHGகள் மூலம் சமூகம்/பங்கேற்பு மற்றும் கண்காணிப்பைப் பயன்படுத்துதல் போன்ற எவ்வித பிற மாற்று அமைப்பும் காணப்படவில்லை. இதனால் பயனாளிகளை தேர்வு செய்வதிலும், திட்டத்தை செயல்படுத்தும் போது அவர்களுக்கு வழங்கப்படும் தொகையிலும் வெளிப்படைத்தன்மை இல்லை.

சமூக தணிக்கையை நடத்துவதற்காக ஐந்து கிராம ஊராட்சிகள் சோதனை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022). மேலும், அடுத்த நிதியாண்டில் இருந்து ஒரே நேரத்தில் தணிக்கை (concurrent audit) செய்வதற்கான நடவடிக்கைகளை துறை எடுக்கும் என்றும் தெரிவித்தது.

### 5.4.3 பிற உள் கட்டுபாடு குறைபாடுகள்

(i) மாநிலத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், இத்திட்டம் அமலுக்கு வந்ததில் இருந்து, தரவு உள்ளீட்டு பணியாளர்கள் (DEOs) தரவு உள்ளீடு பணிக்காக புற ஒப்படைப்பு (outsourcing) மூலம் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, பல ஆண்டுகளாக அதே ஊராட்சி ஒன்றியங்களில் பணியமர்த்தப்பட்டனர். குறிப்பாக நாகப்பட்டினம் மாவட்டத்தில், MGNREGS வேலை கணக்கு விவரங்களை உள்ளிடுவதன் மூலம், ஆவாஸ்சாஃப்ட்டில் உள்ள "தெரியாத" பயனாளியின் பெயரை (SECCன் படி) MGNREGAன் பெயருடன் தவறாகப் பயன்படுத்தி, தகுதியற்ற பயனாளிகளுக்கு மோசடியாக பணம் செலுத்தியதாக சந்தேகிக்கப்படும் இனங்கள் கண்டறியப்பட்டன. DEOக்களின் தொடர்பு இல்லாமல், பத்தி 4.1ல் விரிவாக விவரிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய மோசடி நடவடிக்கைகள் நடந்திருக்காது என்று தணிக்கை கருதுகிறது. முக்கியப் பதவிகளில் தற்காலிகப் பணியாளர்களை மாற்றாமல்/சுழற்சி முறை இல்லாமல் அவர்களைப் பணியமர்த்துவது இத்தகைய சந்தேகத்திற்குரிய முறைகேடான செயல்களுக்கு வழிவகுத்ததுள்ளது.

(ii) ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் நிதி தணிக்கை (Local Fund Audit) மூலம் தணிக்கை செய்யப்பட்டாலும், அவற்றின் பணி கிடைக்கக்கூடிய ரொக்கம்/பங்கு பதிவுகளில் மட்டுமே உள்ளடக்கியதாக உள்ளது. திட்ட நிதியானது ஆவாஸ்சாஃப்ட் மூலம் மின்னணு முறையில் இயக்கப்படுவதால், பயனாளிகளை தேர்வு செய்தல் மற்றும் அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் உள்ளூர் நிதி தணிக்கை மூலம் தணிக்கை செய்யப்படவில்லை, இதன் விளைவாக உள் கட்டுப்பாட்டு அமைப்பில் குறைபாடு ஏற்பட்டது.

மாவட்டத்திற்குள் DEOக்கள் இடமாற்றம் செய்யப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும், என்றும் கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

## 5.5 குறை/புகார் நிவர்த்தி

திட்ட வழிகாட்டுநெறிமுறைகளின்படி, VP, ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநிலம் போன்ற நிர்வாகத்தின் பல்வேறு நிலைகளில் குறை தீர்க்கும் நெறிமுறையை அமைக்க வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி, புகார்/குறை பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் அவற்றை தீர்ப்பதற்குப் பொறுப்பாவார்.

### 5.5.1 குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளில் குறைபாடு

தனித்தனி புகார் பதிவுகளை பராமரிக்கும் முறையானது, மாதிரி மாவட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அலுவலகங்களால் பராமரிக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. எனவே, 2016-17 முதல் 2020-21 வரையிலான PMAY-Gன் பொதுவான கோப்புகளில் மட்டுமே புகார்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பான விவரங்கள் கிடைக்கும். இந்த சிக்கல்களில் பின்வருபவை அவதானிக்கப்படுகின்றன:

(அ) மாநில அரசின் அதிகாரிகள் ஒவ்வொரு நிலையிலும் (VP மற்றும் ஊராட்சி ஒன்றியம்) நியமிக்கப்பட வேண்டும், இது புகார்தாரரின் திருப்திக்கு குறைகளை தீர்ப்பதை உறுதிசெய்ய வேண்டும். குறையை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு நிலையிலும் நியமிக்கப்பட்ட குறை தீர்க்கும் அதிகாரியின் (பெயர், தொலைபேசி எண் மற்றும் முகவரி உட்பட) விவரங்கள் மற்றும் குறையை தாக்கல் செய்வதற்கான நடைமுறையானது ஒவ்வொரு VPயிலும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும். புகார்தாரர் தனது குறையை தீர்ப்பதில் திருப்தி அடையவில்லை என்றால், மேற்கொள்ளவேண்டிய விரிவாக்க செயல்முறையையும், காண்பிக்கப்படும் நடைமுறை குறிக்க வேண்டும். மாதிரி சரிபார்க்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள்/VPகளில் இதுபோன்ற செயல்கள் எதுவும் செய்யப்படவில்லை.

(ஆ) CPGRAMS போர்ட்டலில் புகார்களை பதிவு செய்வது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதைக் குறிக்க, சோதனை சரிபார்க்கப்பட்ட அலுவலகங்களில் எந்தப் பதிவும் இல்லை.

(இ) PMAY-Gன் கீழ் புகார்கள் மற்றும் முறைகேடுகளின் புகார்களை நிவர்த்தி செய்ய MGNREGSன் கீழ் ஒம்புட்ஸ்மேனின் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான எந்த அமைப்பும் தமிழ்நாட்டில் இல்லை.

(ஈ) புகார்களின் தேதிகள் குறிப்பிடப்படவில்லை (செயலகம் தவிர) மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து புகார்களும் ஆண்டு வாரியான PMAY-G பொது கோப்புகளில் கிடப்பில் உள்ளன.

**இணைப்பு 5.8ல்** கொடுக்கப்பட்டுள்ள மாதிரி அலுவலகங்களில் கிடைக்கப்பெற்ற PMAY-Gன் புகார் பதிவுகளை தணிக்கை தொகுத்தது. விவரங்கள் அட்டவணை 5.3 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.3: பெறப்பட்ட புகார்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களைக் காட்டும் அறிக்கை**

| பெறப்பட்ட மொத்த புகார்களின் எண்ணிக்கை | இறுதி நடவடிக்கை எடுக்கப்பட்டது | | | இடைக்கால நடவடிக்கை எடுக்கப்பட்ட து | | நடவடிக்கை எடுக்கப்படவில்லை | |
|---|---|---|---|---|---|---|---|
| | 15 நாட்களுக்குள் தீர்க்கப்பட்டவை | தாமதமான இனங்கள் | சராசரி நாட்கள் எண்ணிக்கை | இனங்கள் எண்ணிக்கை | சராசரி நாட்கள் எண்ணிக்கை | இனங்கள் எண்ணிக்கை | சராசரி நாட்கள் எண்ணிக்கை |
| 610 | 15 | 42 | 124 (1-871) | 225 | 28 (1-874) | 328 | 639 (2-1,673) |

(ஆதாரம்: DRD ஆல் வழங்கப்பட்ட தரவு, மாதிரி DRDAகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்)

அனைத்து நிலைகளிலும் PMAY-G புகார்களைப் பதிவு செய்வதற்கும் அவற்றின் தீர்வுகளைக் கண்காணிப்பதற்கும் சரியான அமைப்பு இல்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

குறை தீர்க்கும் நெறிமுறையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

## 5.6 பணியாளர் பற்றாக்குறை

மாவட்டங்களில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1,066 வீடுகள் (தேனி மாவட்டம்) முதல் 84,669 வீடுகள் (விழுப்புரம் மாவட்டம்) வரை உள்ளது. PMAY-Gக்கான செயல்படுத்தும் அலகுகள் மற்றும் நிலையான பணியாளர்களை அமர்த்துவது போன்றவை ஊராட்சி ஒன்றியங்களின் செயல்பாடாகும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பணிச்சுமையை ஒப்பிட்டுப் பார்க்க, தணிக்கை ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கான வீட்டு ஒப்பளிப்பை பகுப்பாய்வு செய்தது மற்றும் மற்ற ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது சில மாதிரி ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்டங்களில் அதிக பணிச்சுமையை (7 முதல் 8 மடங்கு வரை) கண்டறிந்தது. இது திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தியது. அட்டவணை 5.4-ன்படி நாகப்பட்டினம் மற்றும் ஈரோடு ஆகிய இரு மாவட்டங்களை ஒப்பிட்டுப் பணியிடத்தில் உள்ள நபர்களின் பணிச்சுமையை தணிக்கை பகுப்பாய்வு செய்தது.

**அட்டவணை 5.4: நாகப்பட்டினம் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இடையிலான பணிச்சுமையின் ஒப்பீடு**

| குடும்ப விவரங்கள் | நாகப்பட்டினம் மாவட்டம் | | ஈரோடு மாவட்டம் | | நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும் ஈரோடு மாவட்டத்திற்கும் வேலை சுமை விகிதம் | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியத்திற்கு | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியத்திற்கு | மாவட்டம் விகிதம் | ஊராட்சி ஒன்றிய விகிதம் |
| SECC குடும்பங்கள் | 1,01,079 | 9,189 | 33,368 | 2,383 | 3.03:1 | 3.36:1 |
| PWL குடும்பங்கள் | 61,430 | 5,585 | 5,113 | 365 | 12.01:1 | 15.29:1 |
| அனுமதிக்கப்பட்ட வீடுகள் | 42,800 | 3,891 | 5,051 | 361 | 8.47:1 | 10.78:1 |
| கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் | 19,336 | 1,758 | 5,006 | 358 | 3.86:1 | 4.92:1 |

(ஆதாரம்: MoRDல் இருந்து பெறப்பட்ட ஆவாஸ்சாஃப்ட் தரவு)

மேற்குறிப்பிட்ட அட்டவணை, மாவட்டங்களுக்கிடையே பணிச்சுமை பெரிதும் வேறுபட்டாலும் நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருப்பதை காட்டுகிறது. இத்திட்டத்தின் கீழ் நிர்வாக நிதியானது ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது (அலகு விலையில் 3.5 விழுக்காடு) என்பதும் கவனிக்கத்தக்கது. ஆயினும், பத்தி 2.4ல் விவரிக்கப்பட்டுள்ளபடி PMAY-Gக்கு தொடர்பில்லாத நடவடிக்கைகளுக்கு ஒழுங்கற்ற செலவினங்களைச் செய்ததோடு, DRDக்கு ₹ 61.64 கோடி (47 விழுக்காடு) திருப்பிச் செலுத்துவதன் மூலம் நிர்வாக நிதிகள் மாவட்டங்கள்/ஊராட்சி ஒன்றியங்களால் குறைவாகப் பயன்படுத்தப்பட்டன. இதனால், திட்ட வழிகாட்டுநெறிமுறையின் கீழ் பணியாளர்களை பணியமர்த்த

அனுமதிக்கப்பட்டபோதிலும், பணிச்சுமையில் உள்ள ஏற்றத்தாழ்வு நிவர்த்தி செய்யப்படவில்லை.

இத்திட்டத்தை கள அளவில் செயல்படுத்துவதை வலுப்படுத்த, மாவட்ட அளவில் அதிகமானோர் பணியமர்த்தப்படுவார்கள் என்று GoTN பதிலளித்தது (மார்ச் 2022).

## 5.7 முடிவுரை

மாநில மற்றும் மாவட்ட அளவில் நிர்ணயிக்கப்பட்ட கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்படவில்லை. திட்டத்தை செயலாக்கும் அதிகாரிகளிக்கு பயிற்சி மற்றும் கண்காணிப்பு இல்லாதது மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை முக்கிய பதவிகளில் அமர்த்துவது ஆகியவற்றால் கண்காணிப்புக்கான முக்கியமான கருவிகளாக இருந்த புகைப்படங்களின் புவிசார் குறியீடு மற்றும் நேர முத்திரையிடல் ஆகியவற்றில் பெருமளவிலான தவறுகளுக்கு வழிவகுத்தது. இத்திட்டத்தை செயல்படுத்தும் பணியில் உள்ள மாநில மற்றும் மாவட்ட PMUகளால் இத்தகைய சிக்கல்களை அடையாளம் காணவோ அல்லது சரி செய்யவோ முடியவில்லை. இத்திட்டத்தின் சமூக தணிக்கை எதிர்பார்த்தவாறு மேற்கொள்ளப்படவில்லை மற்றும் குறை தீர்க்கும் வழிமுறை போதுமானதாக இல்லை.

## 5.8 பரிந்துரைகள்

- வழிநடத்துதல், மேற்பார்வை மற்றும் பயனுள்ள ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக, மாநில/மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்படலாம். மாநில PMUல் போதுமான பணியாளர்கள் நியமிக்கப்படலாம்.
- ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கு, மின்-ஆளுமை குறித்த முறையான பயிற்சி, புகைப்படங்களில் புவிசார் குறியீடு மற்றும் நேர முத்திரையிடுதல் தொடர்பான பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் பயிற்சி வழங்கப்படலாம்.
- ஒப்பந்த தரவு உள்ளிடுபவர்களால் (data entry operators) செய்யப்படும் அனைத்து வேலைகளும் துறையின் பணியாளர்களால் கண்காணிக்கப்பட வேண்டும். செய்த பணிகளுக்கு அவர்களைப் பொறுப்பாக்குவதுடன், அவர்களும் அவ்வப்போது இடமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

- பயனாளிகள் தேர்வில் உள்ள முரண்பாடுகள் குறையும் வகையில் அவ்வப்போது சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- PMAY-G வழிகாட்டுநெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் புகார்களை விரைவாக நிவர்த்தி செய்வதை கண்காணிக்க, குறை தீர்க்கும் அமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும்.

**(ஆர். அம்பலவாணன்)**

சென்னை<br>நாள் 30 ஜூன் 2022

முதன்மை கணக்காய்வு தலைவர் (தணிக்கை-I),<br>தமிழ்நாடு

மேற்கையொப்பமிடப்பட்டது

**(கிரீஷ் சந்திர முர்மு)**

புது டில்லி<br>நாள் 01 ஜூலை 2022

இந்திய கணக்காய்வு மற்றும்<br>தணிக்கைத் துறைத் தலைவர்

# இணைப்புகள்

## இணைப்பு 1.1

(பார்வை: பத்தி 1.2; பக்கம் 2)

**PMAY-G அமலாக்கத்திற்கான நிறுவன விளக்கப்படம்**

**1** மாநில அளவில்




**2** மாவட்ட அளவில்



## 3 ஊராட்சி ஒன்றிய அளவில்



## இணைப்பு 1.2

### (பார்வை: பத்தி 1.5; பக்கம் 4)

### மாதிரி செயல்முறை

மாநிலம் நான்கு புவியியல் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பிராந்தியத்தில் உள்ள மாவட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில், அந்த பிராந்தியத்தில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வீடுகளுக்கு ஏற்ப முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அதன்படி, பின்வரும் மாவட்டங்களான நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், ராமநாதபுரம் மற்றும் ஈரோடு ஆகியவை (Probability proportional to size without replacement) PPSWOR[1] மாதிரி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டன.

- ஒவ்வொரு மாதிரி மாவட்டத்திலிருந்தும், 10 விழுக்காடு ஊராட்சி ஒன்றியங்கள், குறைந்தபட்சம் இரண்டு மற்றும் அதிகபட்சம் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் PPSWOR மாதிரி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வாறு மொத்தம் 18 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- ஒவ்வொரு மாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலும், 10 விழுக்காடு VPகள் (10 அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகள் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டவை), குறைந்தபட்சம் மூன்று முதல் அதிகபட்சம் ஐந்து வரை எளிய தொடர்பற்ற மாதிரி முறையைப் (Simple Random Sampling SRS) பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டன. 10க்கும் குறைவான வீடுகள் உள்ள VPகளின் இனங்களில், ஒரு கூடுதல் VP தேர்ந்தெடுக்கப்பட்டார். மொத்தம், 91 VPகள் தேர்வு செய்யப்பட்டனர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட VPகளில், பயனாளிகள் கணக்கெடுப்பு மற்றும் JPVகாக SRSஐ பயன்படுத்தி 10 முதல் 13 PMAY-G வீடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- 917 PMAY-G மாதிரி பயனாளிகளிடம் பயனாளிகள் கருத்தாய்வு நடத்தப்பட்டது மற்றும் 1,121[2] பயனாளிகளின் குடும்பங்களின் கூட்டு நேரடி சரிபார்ப்பு (JPV) துறை அதிகாரிகளுடன் நடத்தப்பட்டது.

---

1 மாற்று இல்லாமல், அளவுக்கு விகிதாசாரமாக நிகழ்தகவு

2 முதல் பயனாளிகளின் சரிபார்ப்பில் கண்டறிந்தவற்றின் காரணமாக கூடுதலாக 204 பயனாளிகள் உள்ளனர்

## இணைப்பு 1.2 (தொடர்ச்சி)
(பார்வை: பத்தி 1.5; பக்கம் 4)

மாதிரித் ஊராட்சி ஒன்றியங்களின் விவரங்களைக் காட்டும் அறிக்கை

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | ஊராட்சி ஒன்றியங்களின் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | JPVன் போது சரிபார்க்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | தருமபுரி | காரியமங்கலம் | 3 | 30 |
| | | ஹரூர் | 5 | 48 |
| 2 | ஈரோடு | பவானி | 4 | 37 |
| | | மொடக்குறிச்சி | 4 | 37 |
| 3 | நாகப்பட்டினம் | கீழையூர் | 3 | 39 |
| | | கீழ்வேளூர் | 8 | 87 |
| | | மயிலாடுதுறை | 6 | 61 |
| 4 | ராமநாதபுரம் | R S மங்கலம் | 5 | 47 |
| | | கடலாடி | 6 | 59 |
| 5 | திருச்சிராப்பள்ளி | லால்குடி | 6 | 56 |
| | | தொட்டியம் | 4 | 35 |
| 6 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 6 | 63 |
| | | ஜவ்வாது மலை | 4 | 48 |
| 7 | திருவாரூர் | மன்னார்குடி | 6 | 60 |
| | | நீடாமங்கலம் | 5 | 51 |
| 8 | விழுப்புரம் | விக்கிரவாண்டி | 5 | 50 |
| | | வானூர் | 6 | 59 |
| | | TV நல்லூர் | 5 | 50 |
| மொத்தம் | | | **91** | **917** |

## இணைப்பு 2.1

(பார்வை: பத்தி 2.4; பக்கம் 11)

### DRDAகளில் ஒப்பந்த மீறல்கள்

| வ.எண் | மாவட்டம் | செய்யப்பட்ட கொள்முதல்களின் விவரம் | செலுத்தப்பட்ட தொகை (ரூபாயில்) | கொள்முதல் முறை |
|---|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் | பானசோனிக் KX-VC2000 காணொளி மாநாடு உபகரணங்கள் | 11,34,080 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 2 | நாகப்பட்டினம் | பானசோனிக் KX-VC1000 காணொளி மாநாடு உபகரணங்கள் | 13,23,960 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 3 | தருமபுரி | மேசை கணினி, மடி கணினி, அச்சுப்பொறிகள் | 17,88,600 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 4 | தருமபுரி | கணினி, மடி கணினி, ப்ரொஜெக்டர் | 11,73,700 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 5 | தருமபுரி | கணினி, அச்சுப்பொறி, ஸ்கேனர், ப்ரொஜெக்டர், ஸ்பிளிட் AC, UPS ஆகியன | 12,56,876 | பெறப்பட்ட 5ல் குறைவானது |
| 6 | திருவண்ணாமலை | மரச்சாமான்கள் வாங்குவதற்கான செலவு | 11,56,754 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 7 | திருவண்ணாமலை | வயர்லெஸ் மைக்ரோஃபோனை வாங்குவதற்கான செலவு | 18,01,259 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 8 | திருவாரூர் | ஃப்ளெக்ஸ் போர்டு நிறுவல் (430 x 3) | 32,19,453 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 9 | திருவாரூர் | ஃப்ளெக்ஸ் போர்டு நிறுவல் (860) | 40,59,200 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| 10 | திருவாரூர் | ஃப்ளெக்ஸ் போர்டு நிறுவல் | 34,14,200 | பெறப்பட்ட 5ல் குறைவானது |
| 11 | திருவாரூர் | PMAY(G) திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தகவல் பலகையை நிறுவுதல் | 2,39,27,568 | பெறப்பட்ட 3ல் குறைவானது |
| | | மொத்தம் | **4,42,55,650** | |

(ஆதாரம்: மாதிரி மாவட்ட DRDAக்கள் வழங்கிய பதிவுகள்)

# இணைப்பு 2.2

## (பார்வை: பத்தி 2.4; பக்கம் 11)

## ஒப்பந்த வழிமுறையைத் தவிர்க்க கொள்முதலைப் பிரித்தல்

| வ. எண் | பணம் செலுத்தப்பட்ட தேதி | சீட்டு எண் | தொகை (₹ ) | பொருட்கள் | வழங்கப்பட்ட வேலை/ ஆர்டர் | தேதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 07/12/2017 | 1 | 6,51,378 | ஃப்ளெக்ஸ் போர்டு - 261 எண்கள். | சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 04/12/2017 |
| 2 | 21/12/2017 | 3 | 3,59,381 | ஃப்ளெக்ஸ் போர்டு - 144 எண்கள். | சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 15/12/2017 |
| | *மொத்தம்* | | *10,10,759* | | | |
| 3 | 25/01/2018 | 19 | 3,59,381 | ஃப்ளெக்ஸ் போர்டு - 144 எண்கள் | சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 17/01/2018 |
| 4 | 25/01/2018 | 20 | 6,51,378 | ஃப்ளெக்ஸ் போர்டு - 261 எண்கள். | சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 18/01/2018 |
| | *மொத்தம்* | | *10,10,759* | | | |
| 5 | 30/05/2018 | 5 | 5,96,750 | ஃப்ளெக்ஸ் போர்டு - 155 எண்கள். | SF அசோசியேட்ஸ் | 22/05/2018 |
| 6 | 30/05/2018 | 6 | 5,96,750 | ஃப்ளெக்ஸ் போர்டு - 155 எண்கள் | SF அசோசியேட்ஸ் | 29/05/2018 |
| | *மொத்தம்* | | *11,93,500* | | | |
| 7 | 26/02/2019 | 30 | 6,77,840 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 8 | 26/02/2019 | 31 | 7,69,440 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 9 | 26/02/2019 | 32 | 9,89,280 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 10 | 26/02/2019 | 33 | 9,34,320 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 11 | 26/02/2019 | 34 | 9,89,280 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 12 | 26/02/2019 | 35 | 6,96,160 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 13 | 26/02/2019 | 36 | 5,31,280 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 14 | 26/02/2019 | 37 | 4,39,680 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 15 | 26/02/2019 | 38 | 4,94,640 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 16 | 26/02/2019 | 39 | 7,14,480 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| 17 | 26/02/2019 | 40 | 6,59,420 | ஃப்ளெக்ஸ் போர்டு | ஸ்ரீ ரவி எண்டர்பிரைசஸ் | 26/02/2019 |
| | *மொத்தம்* | | *78,95,820* | | | |
| 18 | 01/03/2019 | 41 | 8,96,196 | பீங்கான் ஓடுகள் | சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 26/02/2019 |
| 19 | 01/03/2019 | 42 | 6,64,429 | பீங்கான் ஓடுகள் | சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 26/02/2019 |
| 20 | 01/03/2019 | 43 | 7,94,954 | பீங்கான் ஓடுகள் | சரவணா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 26/02/2019 |
| | *மொத்தம்* | | *23,55,579* | | | |

| வ. எண் | பணம் செலுத்தப்பட்ட தேதி | சீட்டு எண் | தொகை(₹ ) | பொருட்கள் | வழங்கப்பட்ட வேலை/ ஆர்டர் | தேதி |
|---|---|---|---|---|---|---|
| 21 | 04/03/2019 | 48 | 8,43,750 | 6,250 கையேடுகளை அச்சிடுதல் | கரூர் கம்யூடர்ஸ் & பிரிண்டர்ஸ் | மார்சு 19 |
